# வைத்திய கலாநிதி

# THE VAIDYA KALANIDHI

EDITOR:
**Pandit M. Duraiswami Aiyangar,**
*Ayurveda Bhushan.*

பத்திராதிபர் :
பண்டித எம். துரைஸ்வாமி ஐயங்கார்,
ஆயுர்வேத பூஷண.

புஸ்தகம் 2. Vol II. | ஆனந்த௵ பங்குனி௴—APRIL—1915. | ஸஞ்சிகை 8. No. 8.


## A HISTORICAL SKETCH OF UNANI MEDICINE.

## யூனானி வைத்தியத்தின் சுருக்கமான வரலாறு.

BY HAKIM M. K. SYED MUHAMAD PULAVAR.

### ஆதி யூனானி வைத்தியர்கள்.

இவ்வுலகில் சராசரங்களனைத்தையும் படைத்துக் காத்தழிக்கும் ஞான தயாஸிந்துவான கடவுளால் ஆதி மனிதனாகப் படைக்கப்பட்ட ஆதாம் என்னும் ஆதி பிதாவானவர் இப்பூமண்டலத்தில் ஜீவித்திருந்த ஆயிரம் வருஷங்களில் வைத்திய சாஸ்திரத்தில் சொல்லப்பட்ட வியாதிகள் அனைத்தும் அவருக்கு நேரிட்டனவாம். அக்காலங்களில் அந்நோய்களுக்குக் கடவுளால் உபதேசிக்கப்பட்ட சிகித்ஸைகளே வாய்மொழியாகப் பரம்பரையாய் மனிதருக்குள் வழங்கிவந்தன. அவைகளைத் திரட்டி தாரூதுனபி, ஹூலயுமான் னபி, ஹக்கீம் றுஃபான் முதலிய பண்டிதர்கள் யூனானி பாஷையில்* புஸ்தகங்களாகச் செய்தனர். அதன் பின்னர் ஹக்கீம் புஃருத் என்னும் பெரிய பண்டிதர் சரீரலக்ஷணம், ரோகநிதானம், நாடிபரீக்ஷை, சிகித்ஸா கிரமம் முதலான விஷயங்களைச் சேர்த்து மிகத் தெளிவாகவும் விரிவாகவும் ஒரு நூல் இயற்றினர். அக்கிரந்தம் இக்காலத்தும் மிக்கச் சிறப்புடைத்தென்பதற்கு ஏதும் ஐயமின்று.

அதன்பின் ஹக்கீம் அரஸ்பாதலீஸ், ஹக்கீம் அபலாத்தூன் முதலிய அநேக பண்டிதர்கள் விரித்தும் சுருக்கியும் அநேகவிஷயங்களைப் புதிதாகச் சேர்த்தும் பல நூல்களைச் செய்தனர். அவைகளை விரித்தெழுதப்புகின் விஷயம் பெருகுமென நினைத்து அவ்விவரங்களை இங்கு விலக்கினேன். இஃது இங்ஙனமிற்க:

ஔஷதிகளோடு ஸம்பாஷித்துக்கொண்டிருந்ததாகச் சொல்லும் ஹக்கீம் தீஸிஃகூரி தூஸ் என்னும் பண்டிதர் பதார்த்தகுண சாஸ்திரத்தைச் செய்தனர். அதன்பின் ஹக்கீம் போலீஸ் என்பவர், அவற்றுள் நேத்திரத்திற்குபயோகமான பதார்த்தங்களையும், ஹக்கீம் அந்தருமாகஸ் என்பவர் விஷபார்த்தங்களையும் விஷமல்லாத பதார்த்தங்களையும் பிரித்தெழுதினர். அதன் பின்னர் ஹக்கிம் ஜாலினூஸ் என்பவர் பதார்த்தங்களின் இயற்கைக் குணம், பயன், நன்மை-தீமைகள், மாற்று, பிரதி என்னுமாறு வகைகளைக் காட்டி நூல்களெழுதினர். இவ்வாறு அநேக பண்டிதர்கள் பல விஷயங்களைச் சேர்த்துப் பலவகையான

* யூனானி - இப்பெயர்கொண்ட தேசம் மேனாட்டாரால் கிரீஸ் என்றும் கிறேஸ் என்றும் சொல்லப்படும். (முதலிற்கூறப்பட்டது இங்கிலீஷிலும், இரண்டாவது ப்ரெஞ்சிலும் வழங்கப்படுவதாம்.)

பதார்த்தகுண நூல்களை யூனானிபாஷையில் வரைந்தனர்.

இச்சாஸ்திரங்களைப் பாபிலோன் நாட்டிலிருந்த ஹக்கீம் ஹைதரூஸ் என்பவர் யூனானிபாஷையிலிருந்து ஹாரியானி பாஷையில் மொழிபெயர்த்தார். அந்நூல்களை ரைசாப்பூரிலிருந்த ஹக்கீம் இஸாஃ என்பவர் சில விஷயங்களைச் சேர்த்து அராபிபாஷையில் மொழிபெயர்த்தனர். பின்னர் இவர் குமாரனாகிய ஹக்கீம் உனயின் என்பவர் பதார்த்தங்களில் ஆஹாரபதார்த்தங்கள் இவையென்றும், ஒளஷதப் பதார்த்தங்கள் இவை யென்றும் பிரித்தெழுதினர். பின்பு முஸல்மான்களாகிய ஹக்கீம் அஹமத் ஜக்கரியா முதலானவர்களும், மிகச் சிறந்த பண்டிதராகிய ஹக்கீம் பூவலிஸீனா என்பவரும் அநேக விஷயங்களைச் சேர்த்துப் பல நூல்களை அராபி பாஷையில் செய்தனர். அந்நூல்களை ஹக்கீம் அமீனுத்தெளலா, மிஸர் (மிச்ர) தேசத்திலிருந்த * ஹக்கீம் ஷெய்க்தாவூது மிஸரி, கைலான் தேசத்திலிருந்த ஹக்கீம் அலிகைலானி, ஹக்கீம் மியா முஹம்மத் அர்ஜானி முதலிய பண்டிதர்கள் அராபிபாஷையிலிருந்து பாரஸீகபாஷையில் மொழிபெயர்த்தார்கள். இதுவுமன்றி, ஹக்கீம் மீர் முஹம்மத் காஸிம் முதலிய பண்டிதர்கள் ஸம்ஸ்கிருத பாஷையிலிருந்த சாஸ்திரங்களையும் பாரஸீகபாஷையில் மொழிபெயர்த்தனர். இவ்வாறே அநேக பண்டிதர்கள் பாரஸீக பாஷையில் அநேக நூல்களைச் செய்து வந்தனர்.

## யூனானி வைத்திய சாஸ்திரப் பிரிவுகள்.

வைத்தியமென்பது வந்த நோயை நீக்கவும், அதனால் குறைவுற்ற ஸௌக்கியத்தை கூடினவரையில் மறுபடியுண்டாக்கவும் ஏற்பட்ட விதியாக இருக்கின்றது. அவ்வைத்தியம் காட்சி (நஜாு), சிகித்ஸாக்கிரமம் (அமலி), ஒளஷத முறை (ஃகராபாதீ) என மூன்றாக வகுக்கப்பட்டிருக்கின்றது. அவற்றுள் சரீர லக்ஷணம், நாடீபரீக்ஷை, மூத்திரப்பரீக்ஷை முதலியதுகளைச் சொல்லுவது நஜாுரி என்றும், ரோக நிதானம் சிகித்ஸாக்கிரமம் இவற்றைச் சொல்லுவது அமலி என்றும், ஒளஷதமுறை, அவற்றின் செய்பாகம் முதலியவைகளைக் கூறுவது ஃகராபாதீ என்றும் சொல்லப்படும்.

## யூனானி வைத்திய விஷயங்கள்.

வைத்தியத்திற்கு ஆகாரமானது தபீயத் அல்லது தேஹஸ்வபாவமாம். அதாவது அசைவிற்கும் அமரிக்கைக்கும் காரணமாகிய முயற்சியும் உணர்ச்சியுமின்றித் தனக்குத் தானே தேகஹத்திற்கு வரும் தீமையை நீக்கி நன்மையைத் தருவதற்கு ஆகாரமாகிய சக்தியேயாம். அது அற்கான் (ப்ரக்ருதி), அம்ஜா (குணம்), அஃலாத் (ஸத்து), அஹஜா (உறுப்புகள்), குவா (சக்தி), அரவாஃ (ஆத்மா), அப்ஹால் (தொழில்) என்னும் ஏழு அங்கங்களுடையதாயிருக்கின்றது. இத்துடன் அஸ்னான் (வயது), அல்வான் (நிறம்), ஸகனா (தேஹப்பரிமாணம்), லாஃ (ஆண் பெண் என்னும் இனம்) என்கிற இந்த நான்கையும் கூட்டிப் பதினொன்றாகப் பின்னோர்களால் விஷயங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. அவற்றுள் அற்கான் என்பது சரீரத்திற்கு முதற்காரணமாயும், விரிவாகவும்-இலகுவாகவும்-குருவாகவும் இருக்கின்ற தேயு முதலிய நான்கு பூதங்களாம். * அவற்றுள் தேயு அதி லகுவாயும், வாயு லகுவாயும், அப்பு குருவாயும், ப்ருதிவி அதி குருவாயும் இருப்பது காண்க. அம்ஜா என்பது, பூதங்கள் நான்கின் குணங்களாகிய ஹாராத் (சூடு,) புறாதத் (குளிர்ச்சி), றுதூலத் (கொழுமை,) யுபூ

* மிஸர் தேசத்தை இங்கிலீஷில் ஈஜிப்டு எனவும், ப்ரெஞ்சில் எகிப்த் என்றும் கூறுவர்; இதுவே பூர்வீக ஸம்ஸ்கிருத தேசமாம்.

* ஆகாயத்திற்கு உருவமில்லையாதலாலும், அது எந்தப் பூதத்தோடு சேருகின்றதோ அதன் குணமேயல்லாது அதற்கு வேறு குணமில்லை யென்னும் கருத்தாலும் அதைப் பூதமெனக்கூறாதொழித்து 'பூதங்கள் நான்கே' என்ற யூனானி சாஸ்திரம் கூறுகின்றது.

ஸத் (வறட்சி) என்னும் இந்த நான்குக்கும் பொதுவாம். அஃலாத் என்பது குடலில் பக்வாசயத்தில் ஜீர்ணித்த அன்னரஸத்தினின்றும் மாறிப் பிரிந்து திரவரூபத்தையுடைய ஃகூன் (இரத்தம்), ஸபரா (பித்தம்), பல்கம் (ச்லேஷ்மம்,) ஸவுதா (வாதம்) ஆகிய நான்கு ஸத்துக்களுமாம். அஹ்ஜா என்பது கை-கால் முதலிய வெளியுறுப்புகளும், ஈரல்-குடல் முதலிய உள் உறுப்புகளுமாம். அரவாஃ என்பது றூஹேஹைவானி (ஜீவாத்மா,) றூஹேதபாவி (தேஹாத்மா) றூஹே நப்ஸானி (அறிவாத்மா) ஆகிய இம்மூன்று வகையான ஆத்மாக்களைக் கூறுவதாம். குவா என்பது பார்த்தல், கேட்குதல், உணர்தல் முதலான சக்திகளாம். அப்ஹால் என்பது ஆத்மாக்களின் தொழில்களைக் குறிப்பதாம். இவ்வேழும் கூடியதே தேஹ ஸ்வபாவம் எனப்படுகின்றது.

### ஆத்மாக்களின் தொழில்கள்.

தேஹ ஸ்வபாவத்தை இயக்கும் ஆத்மாக்கள் மூன்றில் றூஹேஹைவானி என்னும் ஜீவாத்மா ஹ்ருதயத்தை இருப்பிடமாகப் பெற்று அதிற் பொருந்தி நின்று தேஹவியக்கம், பகுத்தறிவு, கோபம், பயம், ஸந்தோஷம், துக்கம், யூகை இவைகளையுண்டாக்கும். றூஹேதபாஸி என்னும் தேஹாத்மா ஈரலையிடமாகப் பெற்று நின்று தேஹத்தைப் போஷிக்கும். றூஹே நப்ஸானி என்கிற அறிவாத்மா தலையிலுள்ள மூளையை இருப்பிடமாகப் பெற்று நின்று, சிந்தித்தல் முதலிய உள்ளுணர்வுகளையும் உண்டாக்கும். இவையே ஆத்மாக்களின் ஸாதாரணத் தொழில்களாம்.

### ஆத்மாவின் வரலாறு.

ஆத்மாவென்பது இரத்தத்தின் கொழுமையினின்று எழுகின்ற ஓர் ஆவியாகவிருக்கின்றது. அவ்வாத்மாவின் சிகையே (இது அறுறத்தே கரீஜி எனப்படுகிறது) தேஹச்சூடாம். ஆத்மா உண்டாகிறதற்கு முதற்காரணமாகிய இரத்தத்திற்கும் தேஹத்திற்கும் ஸம்பந்தத்தை யுண்டாக்குவது றதூலத்தேஃகரீத (ச்லேஷ்மநீர்) ஆக இருக்கின்றது. இம்மூன்றும் தேஹத்தில் நெய், திரி, தீ சேர்ந்த விளக்கிற் கொப்பாகக் காணப்படுகின்றன. தீக்கும் நெய்க்கும் ஸம்பந்தத்தையுண்டாக்கிய திரியை யொத்த ச்லேஷ்மநீர் அதிகப்படுவதால் இரத்தத்தின் கொழுமை குறைந்து, அதனால் ஆத்மசக்தியும் குன்றி, அதனால் தேஹச்சூடும் குறைந்து குளிர்ந்து நசிக்கும்.

### தேஹத்தையாளும் தலைமைக் கருவிகளும் அவற்றின் தொழில்களும்.

தேஹத்தின் உள்ளுறுப்புகளுள் ஜிகர்(ஈரல்), தில் (இருதயகமலம்), திமாஃ (தலையின்மூளை), உன்ஸயின் (குண்டிக்காய்) இந்த நான்கும் அஹ்ஜாயே றயீஸ (இராஜக் கருவிகள்) என்றும், இவற்றிற்கு முறையே ஊரிதா (புணர்புநரம்பு), ஷாயின் (துடிநரம்பு,) அஹ்ஸாப் (வெண்ணரம்பு), ஊஹயா (சுக்லநரம்பு) இந்த நான்கும் ஃகாதிமே றயீஸ்(ஏவற்கருவிகள்)எனவும், மேதா (இரைப்பை), என்றும். மஊஸா (துணைக் கருவி) எனவும் சொல்லப்படும். இவற்றுள் துணைக்கருவியாகிய இரைப்பையின் தொழிலால் மலம் நீங்கிப் பக்குவமடைந்த அன்னரஸத்தை இரத்தமாக்கித் தனது ஏவற்கருவியாகிய புணர்புநரம்புகளின் வழியாக உடலெங்கும் ஏற்றித் தேஹத்தைப் போஷிப்பதாயும், இருதய கமலம் தனது ஏவற்கருவியாகிய துடிநரம்புகளின் வழியாக ஆத்மசக்தியை உடலெங்கும் பரவச்செய்து உயிர்ப்பிக்கிறதாகவும், தலையிலுள்ள மூளையானது தன்னுடைய ஏவற் கருவியாகிய வெண்ணரம்புகளின் வழியாக உணர்ச்சியை அங்கங்களில் எங்கும் நிறைத்து இயக்குவதாயும், குண்டிக்காய்கள் இரத்தத்தோடு கலந்து ஈரலில் நின்ற சிறு நீரைப் பிரிப்பதுமன்றி,தனது ஏவற்கருவியாகிய சுக்லநரம்புகளின் மூலமாக இரத்தத்தின் ஸத்துக்களை இழுத்துப் பீஜத்திற் சேர்த்து பிந்துவாக வெளுக்கச் செய்கிறதாகவும் அறியப்படுகிறது. ஆதலால் ஈரலின் தன்மையை மூத்திரத்திலும், இருதயத்தின் தன்

மையை நாடியினாலும், மூளையின் தன்மையை இயக்கத்தாலும், இரைப்பையின் தன்மையை மலத்தினாலும் அறியவேண்டும். இவ்விஷயங்களின் உண்மையான அறிவை இவற்றில் போதுமான பயிற்சியுள்ள பண்டிதர்களிடம் கற்றுப் பெறலாம்.

### பதார்த்தகுணங்களின் வரலாறு.

உலகத்தில் கண்களுக்குத் தோற்றுகின்ற தாது-மூலஜீவப் பொருட்களாகிய பதார்த்தங்கள் அனைத்தும் தேயு, வாயு, அப்பு, ப்ருதிவி ஆகிய நான்கு பூதங்களின் அம்சமேயாதலால், அந்த பூதங்களுக்கு ஆதாரமாகிய சூடு, கொழுமை, குளிர்ச்சி, வறட்சி என்னும் இந்த நான்கையுமே ஸ்வபாவகுணமாகப் பெற்றிருக்கின்றன. இதனைத் தனிக் குணமென்று மொழிவர். ஆனால் சூட்டின் விகற்பமே வறட்சியும், குளிர்ச்சியின் விகற்பமே கொழுமையுமாதலால்; சூடு-குளிர்ச்சி இரண்டும் கர்த்தாவாகவும், வறட்சி-கொழுமை இரண்டும் செயப்படுபொருளாகவும் இருப்பதால், தேயுவானது சூட்டுடன் வறட்சியையும், வாயு சூட்டுடன் கொழுமையையும், அப்பு குளிர்ச்சியுடன் ஈரத்தையும், ப்ருதிவி குளிர்ச்சியோடு வறட்சியையும் பெற்றிருப்பதுபோல, ஸகல பதார்த்தங்களும் ஒவ்வொரு பூதத்திற்குரிய இரண்டு குணங்களையே பெற்றிருக்கின்றனவாம். இவற்றைக் கூட்டுக் குணமெனச் சொல்வர். இக்குணங்களில் ஒன்றுக்கொன்று உயர்வு தாழ்வின்றியே ஸமமாகப் பொருந்தியிருந்தால் அப்பொழுது இவை ஸமரஸ குணமென்றும் சொல்லப்படும்.

மேற்கூறிய குணங்கள் முதலானவற்றையும் வைத்திய கலாநிதி வாயிலாக இனி வெளியிடுவேன்.

# DHARA KALPA OR THE AYURVEDIC SYSTEM OF DOUCHE BATH.

## தாரா கல்பம்.

By N. MADHAVA MENAN,
AYURVEDA BHUSHAN.
*Asst. Physician, Ayurvedic Free Dispensary and Lecturer, Madras Ayurvedic College.*

(தை மாதத்து ஸஞ்சிகையில் வெளிவந்ததின் தொடர்ச்சி.)

### தாராத்திரவத்திற்கான கலயம்.

பிறகு தாரையை ஊற்றுவதற்கான கலயத்தைப்பற்றியும் சிறிது விவரிப்போம்: தாரா விதிக்கு உபயோகமான உபகரணங்களில் இக்கலயமும் பிரதானமானதே. இக்கலயத்தைச் செய்வதிலும் வைத்தியன் சிறிது கவனம் செலுத்தவேண்டும். இது வெள்ளி, தாமிரம் முதலான லோஹங்களால் செய்யப்பட்டதாயிருக்கக்கூடாது; லோஹங்களாலான பாத்திரங்களில் அம்லரஸம் முதலிய சுவையுள்ள திரவபதார்த்தங்களைச் சேர்த்தால் அவை கெட்டுப்போய்விடும்; ஆகையால் எவ்வித திரவவஸ்துக்களையும் சிறிதும் ஸந்தேஹமின்றி வைத்து வைப்பதற்கு ஏற்றது மட்பாத்திரமேயாம். இந்தக் கலயம் சுமார் 64-பலங்களுக்குக் குறையாமல் திரவவஸ்து கொள்ளக்கூடியதாயிருக்கவேண்டும். இதன் உட்புறத்து அடித்தடத்தின் மையம் சிறிது மேலெழுந்தும், அந்த மையத்தின் சுற்றுப்புறம் ஓரம் வரையிலும் கிரமமாகப் பள்ளமாகவும், மழமழப்பாகவும் திடமாகவும் செய்யப்பட்டிருக்கவேண்டும். கலயத்தை நல்ல கருத்த களிமண்ணால் செய்து சூளையிலிட்டுக் காய்ச்சியெடுத்து வைக்கவேண்டியது. மேலும் இக்கலயத்தைக் கட்டி உயரத் தொங்கவிடுவதற் கேற்றவாறு, இதன் வாயைச் சுற்றிலுமுள்ள விளிம்பை வெளிப்புறமாகச் சற்றுப் பிதுங்கியதாக அமைக்கவேண்டும். பிறகு இதன் அடியில் மையத்

தில் சுண்டுவிரல் புகுமாறு ஒரு த்வாரத்தை ஏற்படுத்தவும்; இந்த த்வாரத்தினூடே கலயத்தின்கீழ் தொங்குமாறு ஒரு வர்த்தியை இணைக்கவேண்டும்; கலயத்தில் நிரப்பிய திரவவஸ்து இவ்வர்த்தி மூலமாகவே வெளிப்படும். தாராஸ்வரூபமானது இப்பொழுது சுருக்கமாகக் கூறப்பட்டது; இதைப் பற்றிய மற்றும் விஷயங்கள் இதனடியில் விவரமாகக் கூறப்படுகின்றன:

அக்கலயத்தின் அடித்வாரத்தில் சேர்க்கப்படும் திரி, நூல்களால் செய்யப்பட்டதாகவும், காடு முரடாக இல்லாமல் ஒழுங்காகவும் அழுக்கடையாததாகவும் இருத்தல்வேண்டும்; பெருவிரல் அவ்வளவு கனமும் நான்கு அங்குலம் நீளமுமுள்ள ஒரு ஒழுங்கான மரக்குச்சியை அக்கலயத்தினுள்ளே குறுக்காக வைத்து, முற்கூறிய நூல்வர்த்தியை இக்குச்சி அல்லது சலாகையில் நன்றாகத் தொடுத்துவிடவும்; இதிலிருந்தே கலயத்தின் த்வாரத்தினூடாக அவ்வர்த்தி வெளியில் ஊசலாடும். ஒரு தேங்காயின் அடி மூடியை எடுத்து அதன் கொட்டாங்கச்சியின் நடுவில் கலயத்திலுள்ள த்வாரத்துக்கு ஸம அளவாக த்வாரமொன்று ஏற்படுத்தி, அதன் மற்றொரு அகன்ற வாயைச் சுற்றிலும் பற்களைப் போல் அறுத்து அக்கலயத்தினுள் கவிழ்த்து விடவும்; கவிழ்ப்பதற்கு முன் கொட்டாங்கச்சியின் மையத்து த்வாரத்தின்மேல் முற்கூறிய குச்சியைக் குறுக்காக் வைத்து, அக்குச்சியில் வர்த்தியைக் கட்டி, அவ்வர்த்தி கொட்டாங்கச்சியின் உட்புறத்தினூடே சென்று கலயத்திற்கு அடியில் தொங்குமாறு அமைக்கவேண்டும். இவ்வாறு சில வைத்தியர்கள் ஸௌகர்யத்தின்பொருட்டு கலயத்தினுள் வர்த்தி முதலானவற்றை அமைக்கின்றனர். இவ்விதமாக ஒரு கொட்டாங்கச்சியைக் கலயத்தினுள் வைப்பதில் உபயோகமென்னவென்றால்: கொட்டாங்கச்சியின் த்வாரத்திலும், கலயத்தின் த்வாரத்திலும் வர்த்தியானது நன்றாகத் தொடுக்கப்பட்டிருக்குமாதலால், கலயம் அசையும்போது வர்த்தி அதிக ஆட்டங்கொள்ளாமலிருக்கும்; வர்த்தியைக் கட்டியுள்ள குச்சி கலயத்தின் அடித்தடத்திலேயே சேர்க்கப்பட்டிருந்தால், கலயம் சிறிது ஆட்டங்கொள்ளும்போது எப்பொழுதும் வர்த்தி அதிகமாய் அசைந்து கொண்டிருக்கும்; அதனால் வர்த்தியிலிருந்து ஔஷதத்திரவத்தின் தாரையும் குறிப்பிட்ட ஓரிடத்திலேயே விழமுடியாமல், அது பலவாறு சிதறி விழும். ஆகவே நினைத்தபடி பயனுண்டாகாமல் காரியம் நன்கு நிறைவேறாது. கொட்டாங்கச்சியைக் கலயத்திற்குள் கவிழ்த்து மூடிவிடுவதால் திரவத்தின் தாரை தடையுறுமென்று ஸந்தேஹப்படவேண்டாம். தேங்காயோட்டின் முக விளிம்பானது சுற்றிலும் அறுக்கப்பட்டிருப்பதால் பற்களைப் போல் அவற்றின் த்வாரங்களினூடே திரவபதார்த்தம் கலயத்தினடியில் பிரவேசித்து, திரியின் மூலமாய் வெளியில் தாரையாகப் பெருகும்; ஜாலங்களைப்போன்ற அப்பற்களின் வழியாக ஜலம் மெதுவாக உட்சென்று வருமாதலால், திரியின் மூலமாகப் பெருகும் தாரையும் ஒரே ஒழுங்காக ஓர் அளவில் விழுந்துகொண்டிருக்கும். மேலும் திரவமானது ஒரே அளவாகவும் ஒரே சீரான வேகத்துடனும் கிரமமாக தாரையாகப் பெருகுவதற்கு மற்றொரு உபாயமும் செய்யப்படுவதுண்டு. எங்ஙனமெனில்: தாராப்ரயோகஞ்செய்யப்படும்போது ஒவ்வொரு நாளும் புதிதாக வாழையிலைத்துண்டு ஒன்றை நெருப்புத் தணலில் சிறிது வதக்கித் துடைத்து வட்டமாகக் கத்தரித்து, கலயத்தினுள் கொட்டாங்கச்சியினடியில் வைக்கவேண்டும்; அவ்விதம் செய்வதற்கு முன் அந்த இலையில் சில த்வாரங்களை ஏற்படுத்த வேண்டியதும் அவசியம். இவ்விதம் செய்தால் தாரையின் பருமனும், அதன் வேகமும் ஓர் அளவாக இருக்கும். இவ்வாறு இலையை அக்கலயத்தினுட்புறத்தில் சேர்க்காவிட்டால், அப்பாத்திரத்தில் திரவத்தைச் சேர்க்கும்போது முதலில் தாரையின் பருமனும் வேக

மும் அதிகமாயிருந்து, கிரமமாக முதலிலிருந்த அவ்வேகமும் தாரையின் பருமனும் அளவிற் குறைந்துவிடும். தாரை ஒழுங்காகவும் அமைதியாகவும் விழாவிட்டால் முறைப்படி அதனால் பயனுண்டாவது அரிது. ஆகவே இவ்வாறு ஸேசகஸ்த்தாலீ என்னும் அக்கலயம் சாஸ்திர முறைப்படி சில சிற்பங்களுடன் கூடியதாயிருத்தல் அவசியம். பிறகு இக்கலயத்தின் கழுத்தில் ஒரு கெட்டியான கயிற்றைச் சுற்றிலும் கட்டி, அக்கயிற்றில் மற்றொரு சிறு கயிற்றின் ஒரு முனையை ஒரு பாரிசத்திலும் வேறொரு முனையை வேறொரு பாரிசத்திலும் கெட்டியாகத்தொடுத்து, அதை உயர எவ்விடத்தில் இணைத்தால் ஸௌகர்யமோ அவ்விடத்தில் மாட்டி விடவும்.

## தாராத் திரவம்.

தாராவிதியின் பலன் அதற்கு வேண்டிய திரவபதார்த்தத்தின் குணாகுணங்களைப் பற்றியதாயிருப்பதால், தாராகல்பமென்னும் இம்முறையில் திரவபதார்த்தமே மிகவும் பிரதானமானதாம். தக்ரதாரா (மோரைக்கொண்டு செய்யப்படும் தாராவிதி), க்ஷீரதாரா (பாலால் செய்யப்படும் தாரை), ஸ்தன்யதாரா (முலைப்பாலால் செய்யப்படுவது) என்று இது முதலாக இன்னும் அநேக தாராவிதிகள் அந்தந்தத் திரவபதார்த்தத்தின் வேற்றுமைக்கு ஏற்றவாறு பலவித பெயர்களைக் கொண்டு வழங்கப்படுகின்றன. அவற்றுள் இப்பொழுது விசேஷமாக வழங்கப்படுவது தக்ரதாரையேயாம்.

## தக்ர தாரை.

தக்ரத்தினால் (மோரால்) செய்யப்படும் தாராப்ரயோகமே தக்ரதாரை என்று கொள்ளப்படலாம். இத்தக்ரதாரை யென்பது சிரஸ்ஸைப்பற்றிய வியாதிகளிலே சிரஸ்ஸிலேயே ப்ரயோகிக்கப்படுகிறது. இதற்கு வேண்டிய திரவபதார்த்தம் மோர் ஒன்றே யென்று நினைக்கவேண்டாம். முறைப்படி பக்குவம் செய்யப்பட்ட மோரையே இதில் உபயோகிப்பார்கள்; தனியாக மோரையே உபயோகிப்பது அநேக விஷயங்களில் யுக்தமானதல்ல. தேஹத்தில் வாத-பித்த-கபங்களுடைய கோளாறுகளின் தாரதம்யத்திற் கேற்றவாறு ஒவ்வொரு ஸமயம் நெல்லிக்கனியின் கஷாயம் முதலிய வேறு திரவபதார்த்தங்கள் சேர்க்கப்படுவதுண்டு. இவ்விதமானத் திரவபதார்த்தம் இரண்டு சேருக்குக் (16 பலத்திற்கு) குறையாமலும் நான்கு சேருக்கு அதிகப்படாமலும் தயார் செய்யப்படவேண்டும். இங்கு முதலில் மோரை இதற்காகப் பக்குவம் செய்யுமுறையை விவரிப்போம் :—

அதில் முதன் முதல் கறவைப் பசுவைப் பரீக்ஷித்து ரோகமில்லாத பசுவைக் கறந்து, சுத்தமான பாலைக் கிரஹித்து ஒரு சுத்தமான மட்பாத்திரத்தில் சேர்த்து, அரைச் சேருக்கு இரண்டு தோலாயெடைவீதம் கோரைக்கிழங்கைச் சுத்தமானதாய் எடுத்து ஒரு வஸ்திரத்திற் கட்டி அப்பாலில் சேர்த்து, அதன் பிறகு பாலுக்கு நான்கு மடங்கு ஜலம் சேர்த்து, பால் மட்டும் மிகும்படியாகச் சிறு தீயிட்டுக் காய்ச்சவேண்டும்; காய்ச்சத் தொடங்கியது முதல் பக்குவமாகிறவரையில் அக்னி எரியும் பிரமாணம் குறையவாவது அதிகப்படவாவது கூடாது; இடையிடையில் அவித்து அவித்தும் தீயிடுவது பிசகு. பால் வற்றிப்போகாமல் அதில் சேர்த்துள்ள ஜலம் மாத்திரம் வற்றிப்போகுமளவும் அதைக் கரண்டியைக் கொண்டு துளாவிக்கொண்டே அதனுள் தும்பு தூசு முதலியது சேராதபடி ஜாக்கிரதையாகப் பார்த்துக் காய்ச்சி யெடுக்கவும். இவ்விதம் பக்குவம் செய்து அடுப்பிலிருந்து இறக்கிய பின்பும் பால் ஆறிப்போகும் வரையில் அதைத் துளாவிக்கொண்டேயிருக்கவேண்டும். நன்றாகக் குளிர்ந்த பிறகு சிறிது மோரை அதில் சேர்த்து விடவும். இதற்கும் மோர் சுத்தமாயிருப்பது நலம். அப்பால் அப்பாத்திரத்தின் வாயை மூடியிட்டுக் கட்டி ஓர் உறியில் வைத்துவிடவும். மறுநாட்காலையில் அதைக் குழ

ப்பி, அதிலுள்ள வெண்ணெயை எடுத்து விடவும். மிகவும் சுத்தமான இவ்வித மோரை அந்தந்த ரோகத்திற்கு ஏற்றவாறு வேறு திரவ பதார்த்தங்களுடன் கலந்தோ அல்லது தனிப்படவோ தாராகல்பத்தில் உபயோகிக்கலாம்; பால் காய்ச்சப்படும்போது அதில் வஸ்திரத்திற் கட்டி சேர்க்கப்பட்ட கோரைக்கிழங்கை முதல்நாள் புறையிடுவதற்கு முன்னமே எடுத்துவிட வேண்டுமென்று சிலரும், மறுநாள் தயிரைக் கடையும்போது எடுத்து எறிந்துவிடவேண்டுமென்று வேறு சிலரும் கூறுவர். இவ்விருவகையில் எவ்விதம் செய்தாலும் மோரின் குண தோஷங்கள் விசேஷமாக மாறுபடுவதில்லை. அந்தந்த வியாதிகளுக்குத் தகுந்தவாறு வெட்டிவேர், சந்தனப்பொடி அதிமதூரம் முதலியதையும் பாலில் சேர்த்து அதைப் பக்குவம் செய்ய வைத்தியர்கள் தகுந்தவாறு பகுத்தறிவுள்ளவராயிருக்கவேண்டும். ஸாதாரணமாய் வியாதியில்லாத சிலருக்கு இம்முறைப் பிரயோகிக்கப்படவேண்டுமானால், கோரைக்கிழங்கைச் சேர்த்து அதைப் பக்குவம் செய்வதே வழக்கம்.

க்ஷீரதாரை.

பாலைக்கொண்டு செய்யப்படும் இந்த தாராகல்பமும் பித்தஸம்பந்தமான வியாதிகளில் சிரஸ்ஸிலேயே பிரயோகிக்கப்படுவது முறை. இதில் பசும்பாலையே தாரோஷ்ணமாக*ப் பிரயோகிப்பது நலம்; அவ்வாறு ஸாத்தியப்படாமற்போனால், ஏற்ற ஔஷதச் சரக்குகளைச் சேர்த்துக் காய்ச்சி நன்றாக ஆறியபின்பு உபயோகிக்கலாம். தக்ரதாரைக்கு வேண்டிய மோரைப் பக்குவம் செய்ய எவ்வித முறைகள் கூறப்பட்டனவோ அதே முறைகள் இதற்கும் அனுஸரிக்கப்படவேண்டும். பாலின் அளவும் மோருக்குக் கூறப்பட்ட விதமேயாம். இந்த க்ஷீரத்தில் அரைச் சேருக்கு 4-முதல் 16-குன்றுமணி யெடையுள்ள கர்ப்பூரமும் சேர்க்கப்படுவது சிலருடைய வழக்கம். சில ஸமயம் பிணியாளியின் தேஹக் கூறுபாடு, சிகித்ஸை செய்வதற்கான காலம் முதலியவற்றின் தன்மைகளுக்குத் தகுந்தவாறு வெள்ளாட்டுப் பாலையும் எருமைப்பாலையும் உபயோகிப்பது உசிதமாகும். இவ்விஷயங்களை வைத்தியர்கள் பகுத்தறிந்துப் பிரயோகிக்கவேண்டியது கடமை.

* தாரோஷ்ணம்—கறந்தவுடனே சூடாயிருக்கும் பால்.

ஸ்தன்யதாரை.

இதில் முலைப்பாலொன்றே திரவப்பொருளென்பதில் ஸந்தேஹமில்லை. மூர்ச்சை, வாய்ப்பிதற்றல், தலையெரித்தல், ஒற்றைத் தலைவலி முதலிய வியாதிகளில் இந்த தாரையும் சிரஸ்ஸிலேயே பிரயோகிக்கப்படுகிறது. மோரைப் போலவே இதையும் அந்த அளவில் உபயோகிப்பது நலமென்றாலும், அவ்வளவு முலைப்பால் கிடைப்பது அரிதாயிருக்கும்; ஆகையால் கிடைத்தமட்டிலும் அதைக்கொண்டே தகுந்தவாறு தாரையைப் பிரயோகிக்க வேண்டும். பால் அரைச் சேருக்கும் குறைவாயிருந்தால் அதைக்கொண்டே தாரையை நிறைவேற்றுவது அஸாத்தியமேயாம். வியாதியுடன் வருந்துபவர்களும், பசி முதலியவற்றால் வருத்தப்படுகிறவர்களும், பிரஸவித்தவர்களும், பிரஸவித்து ஒரு வருஷம் கழிந்தவர்களுமான ஸ்த்ரீகளுடைய ஸ்தன்யத்தை இதற்காகக் கிரஹிக்கக் கூடாது. இதையும் சுத்தமான பாத்திரத்தில் பீச்சிடச் செய்து எடுத்துக் கொள்ளவும். இதை ஒரு யாமகாலத்திற்கு மேல் வைத்திருந்தால் அது குணமிழந்துவிடும். ஆகவே பாலைப் பீச்சிய சிறிது நேரத்திற்குள்ளாகவே அதில் கர்ப்பூரம், கோரோசனை, கஸ்தூரி முதலியவற்றை அந்தந்த ரோகங்களுக்குத் தகுந்தவாறு ஏற்ற அளவில் (சுமார் 4 முதல் 16 குன்றுமணி யெடைவரையில்) பொடித்துச் சேர்த்து அதிற் கலந்து தாராவிதியை நிறைவேற்ற வேண்டும்.

ஸ்நேஹ தாரை.

ஸ்நேஹமென்றால் ஏதாவது எண்ணெய் அல்லது நெய்ப்பொருளாம்; அதனால் செய்யப்படும் தாரை ஸ்நேஹதாரை எனப்படுகிறது.

இவ்வித தாரையைச் கழுத்துக்கு அடியிலுள்ள அங்கங்களில் பெரும்பாலும் பிரயோகிப்பது வழக்கம்; ஏதோ சில ஸமயம் சிரஸ்ஸிலும் அரிதாக உபயோகிப்பதுண்டு. (நெய், எண்ணெய், கொழுப்பு, மஜ்ஜை என்கிற ஸ்நேஹப்பொருட்களில் ஏதேனும் இரண்டு சேர்ந்தால் அவற்றிற்கு 'யமகஸ்நேஹம்' என்றும், மூன்றுசேர்ந்தால் 'த்ரிவ்ருத ஸ்நேஹம்' என்றும், நான்கும் சேர்ந்தால் அவற்றின் கூட்டுக்கு 'மஹா ஸ்நேஹம்' என்றும் பெயர் என்று வைத்தியகலாநிதியைப் படிக்கும் நேயர்களுக்கு ஏற்கனவே தெரிந்திருக்கும்.) ஸ்நேஹங்களில் ஏதேனும் ஒன்றையாவது, அல்லது யமக-த்ரிவ்ருத-மஹா ஸ்நேஹங்களுள் ஏதேனும் ஒன்றையாகிலும் இந்த தாராவிதியில் உசிதப்படி உபயோகிக்கலாம். ஸ்நேஹத்திரவத்தை ஏதேனும் ஔஷதச் சரக்குகளைச் சேர்த்து பக்குவம்செய்தோ அல்லது ஸாதாரணமாகவோ இம்முறையில் பிரயோகிக்கலாம். ஸ்நேஹபாகமானது 'அக்னிபாகம்' என்றும், 'நிரக்னிபாகம்' என்றும் இரண்டு வகைப்படும். சில சரக்குகளைச் சேர்த்து செய்யப்பட்ட கஷாயங்களையும் கல்கங்களையும் ஸ்நேஹத்துடன் கலந்து அதை அக்னியில் காய்ச்சியெடுத்து பக்குவம் செய்யப்படுவது 'அக்னிபாகம்' எனப்படுகிறது. உலர்ந்த சூர்ணம் செய்த ஔஷதச் சரக்குகளையும் தைலம் முதலானவற்றையும் கலந்து வெயில் முதலியவற்றில் வைத்து எடுக்கப்படுவது 'நிரக்னிபாகம்'என்று கூறப்படும். இவ்வாறு பக்குவம் செய்யப்பட்ட ஸ்நேஹத்தைக் கழுத்துக்கு அடியிலுள்ள அவயவங்களில் 4 முதல் 16 ப்ரஸ்த்தம் வரையில் தினந்தோறும் தாரையாகப் பிரயோகிக்கலாம். (ஒரு ப்ரஸ்த்தம் என்பது சுமார் 16 பலமாகும்.) சிரஸ்ஸில் மாத்திரம் தாரையாய்ப் பிரயோகிக்க வேண்டுமானால், அப்பொழுது தக்ரதாரைக்குக் கூறிய ப்ரமாணமே இதற்கும் ஏற்றதாகும். மேலும் கழுத்துக்குக் கீழுள்ள எல்லா அவயவங்களிலும் பிரயோகிப்பதற்கேற்றவாறு 'நிஷ்பீடித ஸேகம்' என்று மற்றொரு உட்பிரிவும் உண்டு; இது ஸாதாரண எளிய ஜனங்களும் தினந்தோறும் செய்துகொள்ளக்கூடியதோர் ஸுலபமான முறை யென்று வைத்தியர்களால் ஏற்படுத்தப்பட்டது. இதற்காகவும் ப்ரதிதினமும் ஒரு ப்ரஸ்த்தம் ஸ்நேஹம் வேண்டியிருக்கும்.

இவ்வாறு வழக்கத்திலிருக்கும், தாராவிதிக்கு உபயோகமான திரவப் பொருட்கள் ஒருவாறு விவரிக்கப்பட்டன. தான்யாம்லம் என்னும் காடி, இளநீர் முதலிய வேறுவித திரவப் பொருட்களும் இதில் உபயோகிக்கப்படுவதுண்டு. இவற்றுள் ஸ்நேஹத் திரவங்களைமட்டும் சிகித்ஸை முடியும் வரையிலும்வேண்டிய வளவு ஒரே தடவையில் பக்குவம்செய்து வைத்துக்கொள்ளவும்; மற்றத் திரவங்களை அப்போதைக்கப்போது தயார் செய்துகொள்ளலாம்.


இக்காரியத்தைச் செய்வதில் நிபுணனை வைத்தியன், இதில் அநுபவம்பெற்று நிபுணர்களாயிருக்கும் இரண்டு மூன்று பரிசாரகர்களையும் தன்னிடம் எப்பொழுதும் வேலைசெய்ய ஸித்தமாயிருக்கும்படி நியமித்துக் கொள்ள வேண்டும். பிறகு தாராவிதியை நிறைவேற்றும்போது அடியில் குறிக்கப்படும் வேறு சில பதார்த்தங்களைத் தயாரில் வைத்திருக்கவேண்டும்.

(1) படுக்கையும் அதன்மேல் விரிப்பும் (இது சிரஸ்ஸுக்கு மாத்திரம் தாரை செய்ய வேண்டும்போதுதான் அவசியம்.), (2) தலையணை, (3) சிரஸ்ஸில் சுற்றுவதற்கான வர்த்தி, (4) சுத்தமான சிறிய வஸ்திரங்கள், (5) தாராத்ரோணியிலிருந்து வெளிவரும் திரவத்தை ஏந்துவதற்கு ஏற்ற சிறிது அகன்ற ஒரு பாத்திரம், (6) ஸேசநஸ்த்தாலியென்னும் கலயத்தில் தாராத்ரவத்தை ஊற்றுவதற்கான இரண்டு சிறிய கலங்கள், (7) சிரஸ்ஸிலும் சரீரத்திலும் ஊற்றுவதற்கேற்றவாறு பக்குவம் செய்த தைலம், (8) தாரை முடிந்ததும் தேஹத்திலுள்ள எண்ணெய்ப்பசையைக் கழுவதற்குப் பொடிசெய்த பயறு, (9) தலையிலுள்ள எண்ணெய்ப் பசையைப் போக்க சிற்றுமுட்டி கல்கம், (10) தலையில் ஊற்றுவதற்கு நெல்லிக்கனியின் கல்கஜலம், (11) சரீரத்தில் ஊற்றுவதற்கு உஷ்ணஜலம், (12) உடம்பைத் துடைக்க இரண்டு வஸ்திரம், (13) ஸ்நானம் செய்தவுடனே தலையில் தூவுவதற்கு ப்ரதிஸாரண சூர்ணம், (14) பிறகு உபயோகிக்கக் கூடிய ஔஷதம், இவைகளே யாம். (தொடரும்)

193

Supplement to the "VAIDYA KALANIDHI." "வைத்திய கலாநிதியின்" அநுபந்தம்.

மகாமகோபாத்தியாய
டாக்டர். உ. வே. சாமிநாதையர்
நூல் நிலையம்,
சென்னை-600090.



தாராவிதி செய்யும்முறை.

## THE DIET AND HEALTH.

## ஆஹாரமும் ஆரோக்கியமும்.

BY C. PARAMANANDA DAS NAVAVATY,

*Ex. District Veterinary Officer, Junagad State.*

(சென்ற மாதத்திய ஸஞ்சிகையின் 153-வது பக்கத் தொடர்ச்சி.)

அடியில் கூறப்போகிற சில அத்தாட்சிக் கடிதங்களின் ஸாராம்சங்களில் அநேகம் 'வெஜிடேரியன் மாகஸைன்' என்று மாஞ்சஸ்டர் நகரத்தில் பிரசுரமாகும் பத்திரிகையில் 1909-௵ டிசம்பரில் வெளியிடப்பட்டிருக்கின்றன. ஜூனகாட் ஸம்ஸ்தானத்திலுள்ள மிஸ்டர் லாபசங்கர் லக்ஷ்மீதாஸ் என்பவர் அவ்விஷயங்களையெல்லாம் எடுத்து அநேக துண்டுப் பத்திரிகைகளாக அச்சிட்டு வெளியிட்டார். அவற்றில் பிரசுரிக்கப்பட்டுள்ள கடிதங்களில் சிலவற்றை இதனடியில் குறிப்பிடுகிறோம்:

"மூன்று வருஷங்களுக்கு முன்னால் எம். டாடைகோ (Mademoiselle Toteyko) என்னும் வைத்தியப் பெருமாட்டியொருவர் (ப்ரஸ்ஸெல்ஸ் யூனிவர்ஸிடியில் தேஹதத்துவ சாஸ்திராசிரியராயிருப்பவர்), யூரிக் ஆஸிட் என்னும் மூத்திரச்சத்து விசேஷமாய் அடங்கியுள்ள இறைச்சி முதலானதைப் புஜிக்கும் வழக்கமில்லாதவரான ஜனங்களின் சரீரத்தில் மத்தியவகைகளையும், காப்பி முதலானதிலுள்ள காப்பீன் (caffeine) முதலான ஸத்துக்களையும், மற்றும் இலாகரி வஸ்துக்களையும் பிரயோகித்து, அவர்களுடைய தேஹத்தில் அவற்றின் செய்கையும் குணங்களும் எவ்வாறு இருக்கின்றனவென்று வரிசையாகப் பரீக்ஷை செய்யத்தொடங்கினள். அவள் கேவலம் சாகபக்ஷணம் செய்பவளல்ல; அந்நாள்வரையில் அவ்வித உணவில் அவள் ஒருபொழுதும் கருத்து வைத்தவளுமல்ல. இப்பொழுது தான் செய்யும் ஆராய்ச்சிவேலையின் நிமித்தம் சில சாகாஹாரிகளை (மாம்ஸம் புஜிக்காதவர்கள்) தனது ஆராய்ச்சிச்சாலைக்கு வந்து போகும்படி கேட்டுக்கொண்டாள்; அவர்களும் அவ்விதமே செய்தார்கள். தசைநார்களின் நிறையை அல்லது அவற்றின் நிலைமையை அளப்பதற்குரிய எர்கோக்ராப் (Ergograph) என்னும் கருவியைக்கொண்டு சாகாஹாரிகளான அவர்களுடைய சரீரத்தேய்வை அப்போதைக்கப்போது பரிசோதனை செய்துவந்தாள். அம்மனிதர்களுக்கிருந்த சரீரவன்மையைக் கண்டு, அவள் பிரமித்துப்போனாள்; பிறகு ஏதோ சிலர் மாத்திரம் அவ்வாறு சாகாஹாரத்தினால் மட்டும் பலசாலிகளாயிருக்கக் கூடுமென்று யோசனைசெய்து, அப்பால் இவ்விஷயத்தை இன்னும் ஆழ்ந்து ஆராய்ச்சி செய்யவேண்டுமென்று எண்ணி, சாகாஹாரிகளின் ஸங்கத்திற்கு (Vegetarian Society) அதன் அங்கத்தினர்களைத் தன் ஆராய்ச்சிச்சாலைக்கு வரும்படி கேட்டுக்கொண்டு ஓர் விண்ணப்பம் அனுப்பினாள். அப்பொழுது நாற்பது சாகாஹாரிகளைப் பரீக்ஷிக்கும் ஸமயம் வாய்த்தது. அவர்களுடைய தசைநார் முதலானவற்றின் நிலைமையையும் தேஹவன்மையையும் வெகு நுட்பமான பரீக்ஷைகளால் அளந்து நன்றாகப் பரிசோதனைசெய்து பார்த்ததில், இவர்களுடைய தேஹவலிமையும் மற்ற நிலைமையும் இறைச்சியுண்பவருடைய தேஹவன்மையினும் சராசரி மூன்றுமடங்கு அதிகமாகக் காணப்பட்டன. ஏல் என்கிற யூனிவர்ஸிடியைச் சேர்ந்த ஆசிரியரான டாக்டர் பிஷ்ஷர் என்பவர் அமெரிகாவில் செய்த ஆராய்ச்சிக்கு எவ்விதத்திலும் இப்பரீக்ஷையால் அறிந்தவிஷயமும் ஏற்றதாயிருந்தது. இந்த நாற்பது சாகாஹாரிகளையும் பரிசோதனை செய்து தத்துவங்களைக் கண்டறிந்தபிறகு, அவள் ஆராய்ச்சிசெய்த முறைகளையும் அதனால் கண்டுகொண்ட விஷயங்களையும் ஜனங்கள் அறியுமாறு பிரசுரப்படுத்தி, சாகாஹாரத்தின் மேன்மையை வாயாறப் புகழ்ந்து, இறுதியில் தானும் இறைச்சியுண்பதை விட்டு கேவலம் சாகாஹாரத்தையே உபயோகிக்கத் தொடங்கினாள். அவள் இவ்விதம் பரிசோதனைசெய்து இவ்விஷயத்தில் தத்துவம் இவ்விதமானதென்று வெளிப்படுத்தியதற்காக, ப்ரான்ஸிலுள்ள வைத்தியஸங்கத்தாரிடமிருந்து (Academy of Medicine) சிறந்த வெகுமதியையும் பெற்றாள்; இவ்விதம் அவளுக்குக் கிடைத்த கௌரவாதிசயமானது இவ்விஷயத்தில் மிகவும் பாராட்டத்தக்கதாம்."

இக்கடிதம் 1909, டிசம்பரில் வெஜிடேரியன் மெஸ்ஸெஞ்ஜர் என்னும் பத்திரிகையில் வெளிவந்தது. ஒருவன் ஆஹாரப்பொருளை விலைக்கு வாங்கும்போது, அது சரீரத்தைப்

போஷிப்பதற்கு அவசியமான அம்சங்கள் அடங்கிய சிறந்தபொருளாக இருக்குமென்பதே அவனுடைய கருத்து; ஆனால் மாட்டிறைச்சி முதலான மாம்ஸப்பொருளை ஒருவன் விலைக்கு வாங்கும்போது, அவன் ஒருபங்கு உணவுப்பொருளும் மூன்றுபங்கு ஜலமும் அடங்கிய வஸ்துவையே விலைக்கு வாங்குகிறான். இவ்விஷயத்தில் அடியில் வரும் வாக்கியங்களைக் கவனியுங்கள் :—

“ஆஹாரப்பொருட்களைப் பரிசோதனை செய்துபார்த்ததில் அடியில்வரும் விஷயங்கள் தெரிந்து கொள்ளப்பட்டன:—காய்களிலும் கீரைகளிலும் கனிகளிலும் காணப்படும் ஜலம் வெகு சுத்தமானது. மாம்ஸங்களில் அதற்கு நேர் மாறாக மிகவும் அசுத்தமான ஜலமே சேர்ந்திருக்கிறது; அவற்றிலுள்ள ஜலம் பிராணிகள் இறந்தவுடனே அழுகத்தொடங்கி, அளவற்ற நுண்ணுயிர்கள் உற்பத்தியாவதற்கும் ஆதாரமாய் விடுகின்றது; ஆகவே அது மனிதருக்கு வியாதியுண்டுபண்ணும் விஷப்பொருளாயிருக்கின்றது.”

இவ்வாறு ஸர் வில்லியம் இ. கூபர் C. I. E. என்பவர் ‘டாய்லர் அண்ட் ஹிஸ் புட்’ (The Toiler and his Food) என்னும் புஸ்தகத்தில் கூறியிருக்கிறார். மேலும் ‘லண்டன் கௌண்டி கௌன்ஸில்’ என்னும் ஸங்கத்தாரால் பரீக்ஷிக்கப்பட்ட விஷயமும் அடியில் குறிக்கப்படுகின்றது:—

“சென்ற வருஷத்தில் லண்டன் சாகாஹாரிகளின் ஸங்கத்தினுடைய (London Vegetarian Association) காரியதர்சியான மிஸ் F. I. நிகல்ஸன் என்னும் பெருமாட்டி 10,000 குழந்தைகளை ஒரு போஷண சாலையில் சாகாஹாரங்களைக் கொடுத்து ஆறுமாஸ காலம் போஷித்துவருகையில், லண்டன் கௌண்டி கௌன்ஸில் என்னும் ஸங்கத்தார் மற்றொரு சாலையில் அவ்வளவு குழந்தைகளைச் சேர்த்து ஆறு மாஸகாலம் இறைச்சி ஸம்பந்தமான உணவுகளையே விசேஷமாகக் கொடுத்துப் போஷித்துவந்தனர். ஆறாவது மாஸத்தின்முடிவில் இரண்டு சாலைகளிலும் போஷிக்கப்பட்ட சிறுவர்களை தகுந்த வைத்தியவித்வான்கள் பரீக்ஷித்துப் பார்க்கையில், மாம்ஸாஹாரத்தினால் போஷிக்கப்பட்ட சிறுவர்களினும் மிஸ் நிகல்ஸனால் சாகாஹாரத்தைக்கொண்டு போஷிக்கப்பட்ட குழந்தைகள் ஆரோக்கியத்திலும், தேஹகனத்திலும், தசைநார்களின் வன்மையிலும் மிகவும் மேலாக அபிவ்ருத்தியடைந்து, வெகு நிர்மலமான சர்மத்தையும் பெற்றிருந்தனர் என்று அறியப்பட்டது.”

மேற்கூறிய விஷயம் 1909, நவம்பரில் “வெஜிடேரியன்” என்னும் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதாம். மாம்ஸம் உண்பவர்களுக்கே விசேஷமாக அநேகவிதமான கிரந்திகளும், க்ஷயரோகமும், குடல்வீக்கமும் ஆமவாதமென்னும் கீல்வாயுவும், காக்கைவலியும், பார்ச்வவாயுவும், மற்றும் இவற்றைப்போன்ற அநேகம் வியாதிகளும் உற்பத்தியாவதாகத் தெரியவருகின்றது; இவையெல்லாம் யூரிக் ஆஸிட் என்னும் மூத்திரச்சத்தின் ஸம்பந்தத்தினால் ஸம்பவிப்பதாக டாக்டர் ஹைக், M.A; M.D. என்பவர் கூறியிருக்கிறார். மாம்ஸாஹாரம் எவ்விதத்திலும் மனிதருக்கு ஏற்றதன்று என்பதற்கு நூற்றுக்கணக்கான மிகவும் நம்பத்தகுந்த பிரமாணங்களடங்கிய கடிதங்கள் என் வசத்தில் உண்டு. அவற்றையெல்லாம் இங்குப் பிரசுரிப்பது ஸாத்தியமல்ல. அவையனைத்தையும் பார்ப்பதாலும், பிரத்தியக்ஷத்தில் பரிசோதனைசெய்து காண்பதாலும் மாம்ஸாஹாரமானது இயற்கைக்கு ஏற்காததும், ஆரோக்கியக்குறைவு உண்டாக்குவதும், அதிக செலவை யுண்டுபண்ணுவதும், அநாவசியகமுமானதென்று நீங்கள் நன்கு அறிவீர்கள். இவ்விதமான உபயோகமற்றதும் தீங்கு விளைவிக்கக் கூடியதுமான இறைச்சியின்பொருட்டு, பசுக்களையும், ஆடுமுதலான மற்றும் ஏழை மிருகங்களையும் கத்தியெடுத்து வெட்டிக் கொல்லுவது மனிதத்தன்மைக்கு முற்றிலும் உற்றதல்ல. ஜீவகாருண்யம் என்பது மனிதர்களுக்கே இல்லாமற்போய் விடுமானால், உலகத்தில் ஜீவகாருண்யம் என்கிற குணத்திற்குதான் பொருளென்ன? அதன் கதிதானென்ன?

## A CASE OF INCONTINENCE OF URINE.

## தன் இச்சைக்கு அடங்காமல் மூத்திரம் வெளியாகும் ஒரு ரோகி.

By D. SAMBHU PRASAD,
*Sub Asst.-Surgeon.' (Ahmedabad).*

சுமார் 35 வயதுள்ள நல்ல பலசாலியான ஒரு மனிதன் (ஜாதியில் இந்து) அடியிற் கூறப்படும் கோளாறுகளுடையவனா யிருந்தான்.

அவனுக்கு சில ஸமயங்களில் இரவில் நித்திரை போகும்போது படுக்கையிலேயே மூத்திரம் வெளியாய்விடும். ஒரு முறை இவ்விதம் நேர்ந்தால் மறுபடியும் இரண்டு அல்லது மூன்று வாரங்கள் கழித்த பின்பு அல்லது சில மாஸங்களுக்குப் பிறகும் இவ்வாறு ஸம்பவிப்பது வழக்கம். வெளிவரும் சிறுநீர் அளவில் அதிகமாயிராது; தூங்கும்போது சில துளிகள்தான் தனக்குத் தெரியாமல் அல்லது தன் இச்சைக்கு வசப்படாமல் வெளியாய்விடும்; அந்த ஸமயத்தில் அவனுக்கு ஏதோ ஒருவிதமான கஷ்டமான உணர்ச்சியொன்று மனதில் தோன்றும்; ஆனால் சிறிது மூத்திரம் வெளிவரும்வரையில் அவனுக்கு அவ்விஷயம் அறியக்கூடிய நினைவு இருப்பதில்லை; சிறிது சிறுநீர் வெளியானவுடனே அவன் எழுந்திருந்து வெளியாகவேண்டிய மிச்சத்தையும் வெளியிற் சென்று விட்டுவிட்டு வருவான். இந்நிலைமையில் அவன் மிகவும் சோர்வுற்று வருத்தங் கொள்வான்.

அதற்கு முன்னிருந்த நிலைமைகளின் விவரமென்னவென்றால்:— இரண்டு வருஷங்களுக்குமுன் இவன் சுக்லமேஹம் என்னும் வெள்ளை மேஹத்தினால் வருந்திக்கொண்டிருந்தான்; ஆனால் அது இப்பொழுது ஸ்வஸ்த்தமாய்விட்டது; இப்பொழுது துன்பம் தரும் இந்நிலைமையானது அவனுக்கு வெகு நீடித்த காலமாகவே உண்டு; அதாவது அவன் குழந்தைப் பருவம் முதற்கொண்டே இது தொடர்ந்து வருகிறது. அவன் புகையிலையை எவ்வகையிலும் உபயோகிப்பதுமில்லை, லாகரி வஸ்துக்களைக் குடிப்பதுமில்லை; ஆனால் தேயிலைப்பானம் அருந்துவது மாத்திரம் உண்டு.

ஒரு வைத்தியர், இரவில் படுக்கும்போது ஒருச்சாய்ந்து படுக்கவேண்டுமென்றும், மல்லாந்து அல்லது கவிழ்ந்து நித்திரை போகக்கூடாதென்றும், அவ்விதம் செய்ய முடியாமற் போனால் ஒரு சிறு துண்டுத்துணியை இடுப்பைச் சுற்றிலும் கெட்டியாகக் கட்டிவிட்டு, ஒரு கௌபீனத்தையும் உடுக்கும்படி இவனுக்கு உபதேசித்தார். ஆனால் அவனுடைய தொழில் விஷயமாக வெளியூர்களுக்கு அவன் அடிக்கடியும் பிரயாணம் போகவேண்டியிருப்பதால், இவ்விதம் செய்வது அனுபவப்படி ஸாத்தியப்படாதென்று சொல்லிவிட்டான். ஆகிலும் இரவில் இரண்டு முறை எழுந்திருந்து மூத்திரத்தைப் பெய்து விடும்படி வழக்கம் செய்து கொள்ள வேண்டுமென்று அவர் அறிவித்தார். அவன் இவ்விஷயங்களைப் பின் பற்றியே நடந்து வருகையிலும், ஏதேனும் ஓர் இரவில் அவ்விதம் செய்ய முடியாமல் தவறிப்போய், படுக்கையிலேயே மூத்திரத்தை விட்டுவிட நேரிடும்.

அநேகம் வைத்தியநூல்களில் கூறியிருக்கும் முறைகளை அனுஸரித்து அயமும் பெல்லடோனவும் சேர்ந்த ஔஷதத்தை உபயோகிக்கச் செய்து, கூடியமட்டிலும் ஜலத்தைக் குறைவாக உட்கொள்ளும்படியாகவும், இரவில் ஒருச்சாய்ந்து படுத்துக்கொண்டு இராத்திரியில் இரண்டு முறை எழுந்து மூத்திர விஸர்க்கம் செய்ய வேண்டுமென்றும் ஏற்பாடு செய்தேன். ஆகிலும் இதுவரையில் நன்றாக அந்நிலைமை மாறி ஸௌக்கியமுண்டானதாகத் தெரியவில்லை. இரண்டு அல்லது மூன்று மாதங்களுக்கு ஒரு முறை அல்லது நான்கு மாதங்களுக்கு ஒரு தடவை அவன் தனக்குத் தெரியாமலே படுக்கையிலேயே மூத்திர விஸர்க்கம் செய்து விடுவான்; சிகித்ஸை செய்யாத ஸமயத்திலும் இவ்விதமேதான் இருந்தது. இப்பொழுது அப்பிணியாளிக்கு நான் எவ்

வித சிகித்ஸை செய்தால் இரண்டு மூன்று அல்லது நான்கு மாதங்களுக்கு ஒருமுறை கூட அவ்விதம் மூத்திரம் தானாகவே படுக்கையில் போய்விடாமல் அவன் ஸௌக்கியமடையக்கூடும்? இவ்விஷயத்தில் இப்பத்திராதிபர் அவர்களாவது, தங்களுடைய கைபொப்பக்காரர்களாவது இக்கோளாறு முற்றிலும் ஸ்வஸ்த்தமாகக் கூடிய சிகித்ஸா முறை ஏதேனும் தெரிந்திருந்தால் வெளிப்படுத்துவது மிகவும் உபகாரமாயிருக்கும்.

விடை.

[ஏற்கனவே செய்யப்பட்ட சிகித்ஸைகளைத் தவிர்த்து வேறுவிதமான சிகித்ஸையை நாம் எடுத்துக் கூறுவதற்குமுன், அதன் காரணத்தைக் கண்டுபிடிக்க முயலவேண்டும். வஸ்தியென்னும் மூத்திரப்பையின் முகத்வாரத்திலுள்ள தசைநார் பலஹீனமாயிருந்தாலும், மூத்திரத்தில் உப்பு வகைகளின் அம்சம் அதிகரித்தாலும், பஹுமூத்திரரோகம் இருந்தாலும், அஜீர்ணம் மலபந்தம் முதலிய குடல்களின் கோளாறாலும் இவ்வாறு ஸம்பவிக்கக்கூடும். பிணியாளியின் மூத்திரத்தை மிகக்கருத்துடன் பரீக்ஷிக்கவேண்டும். படுக்கப்போகும் ஸமயத்தில் ப்ருஷ்டவம்சம் என்கிற முதுகெலும்பின் நடுவில் சிறிதுநேரம் இளஞ்சூடான வெந்நீரை தாரையாக ஊற்றினால் சிலஸமயம் இவ்விதமான தொந்தரவு நிவ்ருத்தியாவதுண்டு. சிலருக்கு ஆண்குறியின் முனைத்தோல் மிகச்சுருங்கியிருந்தாலும் இவ்விதம் நேரிடக்கூடுமாகையால், சுருக்கங்கொண்ட அப்பாகத்தை சஸ்திரத்தினால் கீண்டுவிடவேண்டும் (இச்சிகித்ஸை எவரேனும் சஸ்திரவைத்தியம் தெரிந்தவரால் செய்யக்கூடியது). மூத்திரம் மிக அம்லமாக இருந்தால் உஷாக்ஷாரம் என்னும் பூனீறைக் கொடுப்பதுடன், தினந்தோறும் மலம் நன்றாகக் கழியுமாறு சிறிது ஆமணக்கெண்ணெய் முதலானதைக் கொடுத்துவரலாம். அஸ்தமனத்திற்குப் பிறகு எவ்விதத் திரவப்பொருளையும் உட்கொள்ளக்கூடாது; ஆஹாரத்தில் உப்பை அளவிற் குறைக்கவேண்டும். குளிர்ந்த ஜலத்தில் பஞ்சுமுதலானதை நனைத்து மூத்திரப்பைக்கு நேர்மேலாக வயிற்றில் ஒற்றடம் கொடுப்பதாலும் சிறந்த குணமுண்டாவதுண்டு.—Ed. Prac. Med.]

# வைத்திய கலாநிதி.

ஆனந்த௵ பங்குனி௴.

## AN IDEAL FOOD FOR WAR-TIME.

### யுத்த-காலத்திற்கு ஏற்றதோர் உணவு.

நமது தேசத்தில் அரிசி, கோதுமை இவற்றையே விசேஷமாய் பிரதான உணவுப்பொருளாக உபயோகித்து வருகிறோம். மிக எளியவர்கள் கேழ்வரகு, வரகு, சோளம் இவற்றையும் ஆஹாரப்பொருளாக உபயோகிக்கின்றனர். இந்தியாவைத் தவிர இதர நாடுகளில் இப்பொழுது ஆரோரூட் என்று ப்ரஸித்தமான குவாக்கிழங்கு முதலிய சில கிழங்குகளிலிருந்தும் உணவுப்பொருட்களை உற்பத்திசெய்து அவற்றை அவ்விடங்களில் விசேஷமாக உபயோகித்தும் வருகின்றனர். முற்காலங்களில் நமது தேசத்தில் தீர்க்காயுளையும் அபரிமிதமான அறிவையும்பெற்று திடகாத்திரர்களாக ஜீவித்திருந்த இருஷிகளும் யோகிகளும் பலவிதமான கிழங்கு முதலியவைகளையே புஜித்து எவ்வித வியாதிக்கும் வசப்படாதவர்களாய் ஜீவித்துவந்தனர் என்பதையும் நாம் அறியாதவரல்லர். ஆனால் இந்தியாவில் சாஸ்திரஞ்ஞர்கள் பதார்த்த பரிசோதனையென்னும் காரியத்தைநெடுநாட்களாக மறந்து விட்டனராகையால் "யதாநுகதிகோ லோக:—" (ஒருவன்செல்லும் வழியையே மற்றவரும் கண்மூடித்தனமாகப் பின்பற்றுதல்) என்னும்வகையையே மேற்கொண்டவர்களாய், பதார்த்த தத்துவங்களைப் பரிசிலனை செய்வதிற் கருத்தில்லாமல் ஏதோ ஒருவாறு ஜீவனம் செய்து வருகின்றனர்.

ஔஷத பதார்த்தங்களைப்போலவே ஆஹார பதார்த்தங்கள்விஷயமாகவும் ஆராய்ச்சிசெய்தோமானால், உலகத்தில் பிரம்மஸ்ருஷ்டியிலுள்ள பதார்த்தங்களிலிருந்து இன்னும் அநேகம் உணவுப்பொருட்களை நாம் தேடி

யெடுக்கக்கூடும். இப்பொழுது இவ்விஷயத்தில் உருளைக்கிழங்கை உதாரணமா யெடுத்துக் கூறுவோம். ஆனால் ஸாதாரண உருளைக்கிழங்கு அவ்வளவு போஷிக்கத்தகுந்த உணவல்லவென்றும், அது ஜீர்ணமாவது கஷ்டமென்றும் பொதுவாக ஒரு பிரஸித்தி யிருந்துவருகிறது; ஆகிலும் அவ்வாறு அபிப்பிராயப்படுவது பிசகு. அதற்கு மாறாக உணவுப்பொருட்களினிடையில் கூட்டி விவஹரிக்கும்போது உருளைக்கிழங்கானது விலையில் மிக மலிவாகவும் போஷணையிற் சிறந்ததாகவும் இருப்பதுமல்லாமல், அக்கிழங்கிலுள்ள எல்லா ஸத்துக்களும் குடலில் சீக்கிரத்தில் ஊறி எளிதில் ஜீர்ணமாகக் கூடியதுமான உணவாயிருக்கின்றது. ஸாதாரணமான சமையல்செய்த அரிசியில் அடங்கியுள்ள குணங்கள் யாவும் மாபோல் பக்குவம்செய்த அதே அளவான உருளைக்கிழங்கிலும் அடங்கியிருக்கின்றன. அயர்லாண்ட் தேசத்திய உருளைக்கிழங்கை மேனாட்டார் அரிசிக்குப் பதிலாகச் சமைத்து அதைப் போலவே உபயோகிக்கின்றனர். அத்தேசத்தில் கோதுமையைப் பிரதானமாகவும், அதற்கு இரண்டாவதாக உருளைக்கிழங்கையும் பயிரிடுகின்றனர்; ஆனால் ஒரு ஏகராபூமியில் எவ்வளவு கோதுமை உற்பத்தியாகுமோ அதே அளவான பூமியில் அதைவிட முப்பது பங்கு அதிக எடையுள்ள உருளைக்கிழங்கு பயிராகுமென்று அறியப்படுகிறது. மூன்றும் ஜார்ஜ் அரசர் காலத்தில் இக்கிழங்கை மிக்க அதிகமாக உபயோகித்ததாகத் தெரியவருகிறது. மறுபடியும் ஜனங்கள் ஏன் அவ்விதம் அதைப் பிரதான உணவுப்பொருளாக உபயோகிக்க முயலக்கூடாது?

டென்மார்க் தேசத்திய மிகப் பிரஸித்த சாஸ்திர நிபுணரான ப்ரொபஸ்ஸர் ஹிண்ட் ஹெர்ட் என்பவர், உருளைக்கிழங்குக்குச் சரீர போஷணையிலுள்ள விசேஷமான குணங்களை நன்றாகப் பரிசோதித்தறிந்திருக்கிறார்; யௌவனப்பருவத்திலுள்ள மனிதர்கள் உருளைக்கிழங்கையும் வெண்ணெயையும் மாத்திரம் புஜித்து சரீரத்தை வெகு பலமுள்ளதாகவும் செழிப்பாகவும் வைத்துக்கொண்டு எவ்வளவு கடினமான வேலைகளையும் செய்துவரலாமென்றும் அச்சாஸ்திரநிபுணர் ஆராய்ச்சி செய்து இவ்விஷயத்தை வெளியிட்டிருக்கிறார்; மற்ற உணவுகளைப்போல் இதை தினத்திற்கு பதினேழு முதல் முப்பது பவுண்ட் வரையில் அவ்வளவு அதிக அளவாகவும் உபயோகிக்க வேண்டிய அவசியமில்லையென்று தத்துவமறிந்தவர்கள் கூறுகின்றனர். டாக்டர் ஹிண்ட் ஹெர்ட் அவர்கள் மீண்டும் கூறுவதாவது: “தினத்திற்கு நாலு பவுண்ட் உருளைக்கிழங்கையும் $1\frac{3}{4}$ பவுண்ட் ஜைதூண் பழத்தின் (olive) ஒருவித ஸத்தான மார்காரின் (margarine) என்கிற வஸ்துவையும் கலந்து உபயோகித்து வந்தால் ஒரு மனிதன் வெகு திருப்திகரமாகப் போஷிக்கப்படுவான். இவ்வித உணவையே 10 அல்லது 11 மாஸ காலம் விடாமல் உபயோகித்து வர, சுமார் ஒன்பது மணி நேரத்தில் அம்மனிதன் 4½-மைல் தூரம் ஆயாஸமின்றி நடக்கவுங்கூடும், ஓடவுங்கூடும்.

உருளைக்கிழங்கின் உணவுக்குள்ள மதிப்பு:— இதைப்பற்றி டாக்டர் ஓல்ஸன், M. D., D. P. H. என்பவர் குட் ஹெல்த் என்னும் பத்திரிகையில் கூறியிருப்பதை நாம் இதனடியில் மொழிபெயர்த்தெழுதுகின்றோம்:—

“உருளைக்கிழங்கானது ஒருவித மாப்பொருள் (starch) அடங்கியதாகவும், அது நிறையில் முக்கால் பங்கு ஜல பாகமாகவும் இருக்கின்றது. இதில் நூற்றுக்கு 18 முதல் 20 பாகம் வரையில் மாப்பொருள் அடங்கியிருக்கின்றது; இம்மாப்பொருளில் மரச்சத்து ஸம்பந்தமான அம்சங்கள் அடங்கியில்லையாகையால், உருளைக்கிழங்கு வெகு சீக்கிரமாகவும் வெகு நன்றாகவும் குடலில் ஜீர்ணமாய் சரீரத்தையும் நன்கு போஷிக்கும். உருளைக்கிழங்கில் தர்க்கியகரப்பொருள் (Nitrogen) விசேஷமாயில்லை; அல்ப்யூமென் என்னும் ஒஜஸ் ஸம்பந்தமான வஸ்து அதில் நூற்றுக்கு சுமார் மூன்று பங்குதான் உண்டு (அல்ப்யூமென் என்பது தர்க்கிபகர ஸம்பந்தமான வஸ்து). சுமார் நூற்றுக்கு 18 பங்கு மாப்பொருளடங்கிய உருளைக்கிழங்

கில் இரண்டு பங்கு தார்க்கியகரப் பொருள் இருக்கின்றதென்றால், நூறு பங்கு மாப்பொருளுக்கு 10 பங்கு தார்க்கியகரப்பொருள் கிடைக்குமென்று அறியப்படுகிறதல்லவா? ஆகவே இத்துடன் வெண்ணெயாவது மார்கரின் என்னும் வஸ்துவையாவது கலந்து உபயோகித்தால் மனிதன் வெகு நன்றாகப் போஷிக்கப்படுவன் என்பதில் ஸந்தேஹமில்லை. மாம்ஸம், முட்டை முதலியவற்றில் தாதுபோஷணைக்குரிய தார்க்கியகரப்பொருட்கள் (Nitrogenous substance) விசேஷமாயிருப்பதால் அவையே தேஹத்தைப் பலப்படுத்தக்கூடிய சிறந்த உணவுகள் என்று நினைப்பது பெரும் பிழையாகும். தார்க்கியகர அம்சம் விசேஷமாயடங்கிய உணவுகளையே புஜித்து ஜீவிப்பவரைவிட விசேஷமாக மாப்பொருளடங்கிய உருளைக்கிழங்கு போன்ற உணவுகளை யுபயோகித்து வந்தவர் இன்னும் சிறந்த தேஹவலிமையைப் பெற்று, கடினமான வேலைகளையும் ஆயாஸமின்றி நிறைவேற்றக்கூடியவராயிருந்தனர் என்பதை ப்ரொபஸ்ஸர் சிட்டெண்டென், ஜர்விங் பிஷ்ஷர் முதலிய மேதாவிகள் அனுபவத்தினால் அறிந்து இவ்வுணவின் சிறப்பை வெளியிட்டிருக்கின்றனர். உருளைக்கிழங்கில் கொழுப்பு மிகக் குறைவாக இருப்பது வாஸ்தவமே; அதாவது நூற்றுக்கு 6 பங்குதான் அதில் கொழுப்பு சேர்ந்திருக்கிறது; ஆகவே இதை மட்டும் உணவாக உபயோகிக்கும்போது, இத்துடன் வெண்ணெயையாவது, பாலாடையையாவது, அல்லது அவ்விதமான வேறு ஏதேனும் பதார்த்தங்களையாவது கலந்து உட்கொள்வது மிகவும் உத்தமம். அதில் சரீரத்திற்கு வேண்டிய வளவு உப்புவகைகளின் அம்சங்களும் அடங்கியிருக்கின்றன."

உருளைக்கிழங்கின் ஜீர்ணமாகும் தன்மை:— அரிசி, உருளைக்கிழங்கு, மற்றும் மரக்கறி பதார்த்தங்கள் என்னும் இவ்வித உணவுப்பொருட்கள் சீக்கிரத்தில் ஜீர்ணமாவதில்லையென்றும், சரீரபோஷணையில் இவை சிறந்தவை யல்லவென்றும், பசுவின் இறைச்சியும், எருமை முதலியவற்றின் மாம்ஸமும் எளிதில் ஜீர்ணமாய் தேஹத்தைப் போஷிக்கக்கூடியவைகளென்றும் மேனாட்டாரில் அநேகம்பெயர் அபிப்பிராயப்பட்டு, சாகஹாரங்களை அவர்கள் வெறுக்கின்றனர். ஆனால் மாட்டிறைச்சியைவிட உருளைக்கிழங்கு எவ்வகையிலும் தேஹபோஷணையில் சிறப்புற்றதென்று நாம் நிஸ்ஸம்சயமாகக் கூறுவோம். டாக்டர் ஒல்ஸென் கூறியவிதமாகவும், ப்ரொபஸ்ஸர் ஹிண்ட்ஹெட் அவர்களுடைய அபிப்பிராயப்படியும் எந்த மனிதனும் தினம் ஒன்றுக்கு நான்கு பவுண்ட் உருளைக்கிழங்கையும் முக்கால் பவுண்ட் வெண்ணெய் முதலான கொழுப்பினங்களையும் கலந்து புஜித்துவருவானாயின் வெகு வன்மையுடனும் உத்ஸாஹத்துடனும் செழித்து வளரக்கூடும்; ஆனால் இவ்விதமே இறைச்சியொன்றைமட்டும் தின்றுக்கொண்டு சில நாட்கள்கூட பலத்துடன் வாழமுடியாதென்பது அனைவரும் அறிந்த விஷயம்; மேலும் இறைச்சியைமட்டும் புஜித்தால் குடல்கள் அதை ஜீர்ணம் செய்ய மிகவும் கஷ்டப்படவேண்டி நேரிடுகிறதென்பதும் கற்றறிந்த மேனாட்டு வைத்தியர்களாலேயே பலவாறு பேசப்பட்டும் எழுதப்பட்டுமிருக்கின்றது. உருளைக்கிழங்கைப்பற்றி டாக்டர் ஒல்ஸென் அவர்கள் கூறியுள்ள இன்னும் சில வாக்கியங்களையும் இதனடியில் மொழிபெயர்த்தெழுதுகின்றோம்:

"ஏதாவது ஒரு உணவுப்பொருள் அரிதாக அன்னாசயத்தில் சிறிதும் சேதமாகாதபடி முற்றிலும் ஜீர்ணமாய் சரீரத்திற்குப் போஷணையைக் கொடுக்கக்கூடியதாயிருந்தால் அவ்வித வஸ்து உருளைக்கிழங்கேயன்றி வேறொன்றல்ல. உருளைக்கிழங்கு இரண்டு அல்லது இரண்டரைமணிநேரத்திற்குள் நன்கு ஜீர்ணமாய்விடும். உருளைக்கிழங்கை உணவாக உபயோகித்து வந்தால், இரைப்பையும் குடல்களும் அவ்வுணவை நன்றாக ஏற்றுக்கொள்கின்றன. குடல்களில் மற்ற ஆஹாரப்பொருட்களைப்போல் அதற்கு ஒருவிதமான அம்லத்தன்மையடையும் தன்மையும் குறைவு; இவ்விஷயங்கள், உருளைக்கிழங்கை யுணவாகக் கொள்ளும் மனிதருடைய மலங்களில் துர்நாற்றமில்லாமலிருப்பதாலேயே நன்கு அறியக்கூடியனவாம். உருளைக்கிழங்கை முறைப்படி சமைத்து நன்றாக மென்று புஜித்துவந்தால், மாம்ஸத்தைவிட அது குடல்களில் நன்கு ஊறி ஜீர்ணமாய், சரீரதாதுக்களைப் போஷிப்பதில் எவ்வகையிலும் மேன்மையுடையதாயிருக்குமென்று நான் உறுதிமொழி கூறுவேன்."

ஆகவே உருளைக்கிழங்கானது, அரிசியைப் போலவே சரீரத்தில் இடைவிடாமலுண்டாய் வரும் கழியும் அல்லது அழியும் அம்சங்களை நிறப்புவதற்கேற்ற உணவாக இருக்கின்றதென்பதில் ஸந்தேஹமில்லை. அது சரீரத்தில் வேண்டிய உஷ்ணத்தையும், வேலைசெய்வதற்கேற்ற உரத்தையும், உத்ஸாஹத்தையும் ஊட்டுகின்றது. உருளைக்கிழங்கில் சரீரத்திற்குத் தேவையானவளவு சர்க்கரையும், கொழுப்பும் இருப்பதால் மற்றக்கறிவகைகளைப்போல் தேஹத்தில் முற்கூறிய காரியங்களில் மிகவும் உபயோகப்படுகின்றன. மேலும் இதில் அடங்கியுள்ள மாப்பொருளின் அளவுக்குத் தகுந்தவாறு ப்ரோடீன் என்னும் போஷணத்திரவ்யமும் 100-க்கு 10 பங்குவீதம் சேர்ந்திருப்பதுடன், அவசியமான உப்பு வகைகளும் அதில் அடங்கியிருப்பதால், இதை வெண்ணெயுடன் கலந்து அரிசிக்குப் பதிலாக உணவுப்பொருளாய் உபயோகிக்கலாமென்று நிச்சயிக்கப்படுகிறது. இப்பொழுது நடந்தேறும் மஹாயுத்தத்தின் பயனாக இத்தருணத்திலும், யுத்தம் முடிவுபெற்ற பின்பும் உணவுப்பொருட்கள் வேண்டியவளவு கிடைக்காமற் போகலாமாதலால், கால-தேசங்களுக்கு ஏற்றவாறு உருளைக்கிழங்கைப் போன்ற சிறந்த உணவுப்பொருட்கள் வேறு சில உண்டென்று ஜனங்கள் அறிந்திருப்பது அவசியமான விஷயம். இதை சிலர் அநுபவத்திற்கொண்டு வந்தால், அவர்களுக்கு அதனால் நன்மை ஏற்படுவதுடன் மற்ற ஜனங்களுக்கும் அதில் கிரமமாகப் பிரவேசமுண்டாக வழியேற்படும்.

---

## RHEUMATIC FEVER.

### ஆமவாத ஜ்வரம்.

ஆமவாதம் என்பது தமிழில் கீல்வாயு என்று ஸாதாரணமாய் வழங்கப்படுகிறது. இத்துடன் எப்பொழுதும் ஜ்வரம் அநுஸரித்து வருவது இயல்பு. இதில் பெரிய மூட்டுகளில் வீக்கமும் வேதனையும் அதிகமாகவும் சில ஸமயம் ஸஹிக்கக்கூடாமலும் உண்டாகும். இந்த ரோகத்தினால் இருதயகோசத்தின் தசைநார்கள் தாக்கப்படுவதும் ஸஹஜம். இது தொற்றுவியாதிகளைச் சேர்ந்ததென்று இப்பொழுது அறியப்பட்டிருக்கின்றது. அநேகம் வியாதிச்கிரஸ்தர்களைப் பரீக்ஷித்துவந்ததில், ஆமவாதக்ருமி (bacillus rheumaticus) என்னும் சில நுண்ணுயிர்கள் தேஹத்தில் ஸம்பந்திப்பதால் இவ்வியாதி உண்டாகக் கூடுமென்று ஒருவாறு கூறப்படுகிறதேயன்றி, அவ்விஷக்கிருமிகள் சரீரத்தில் எவ்வாறு ஸம்பந்திக்கின்றனவோ அவ்விஷயத்தில் இன்றைக்கும் மேனாட்டு வைத்தியர்களுக்குள்ளேயே நிச்சயஞ்ஞானம் ஏற்பட்டபாடில்லை. விஷக்கிருமிகள் வாயின்மூலமாய் முக்கியமாக ஏதாவது பற்கள் சொத்தைப் பிடித்திருந்தால் அப்பற்களின் இடுக்குகளில் தங்கியிருந்து அப்பால் சரீரத்தினுள் இரத்தத்திற் கலக்கின்றனவென்று கூறி அதற்கேற்றவாறு அநேகம் பிரமாணங்களையும் சிலர் எடுத்துக் காட்டுகின்றனர். தொண்டைக்குள்ளிருக்கும் ச்லேஷ்மக்கிரந்திகள் வீங்கினால், அதன் மூலமாகவும் இவ்வியாதி ஸம்பவிக்கக் கூடும்.

குறிகள்.—ஆமவாதஜ்வரம் முதலில் குளிர், தொண்டைப்புண், வேலைகளைச் செய்வதில் மிகவும் ஸாமர்த்தியமில்லாமற்போதல் என்னும் இக்குறிகளுடன் ஆரம்பிக்கும். சரீரத்திலுள்ள பிரதானமான கீல்களில் அதாவது முழங்கால், முழங்கை, கணுக்கால், கணுக்கை, தோள் இவை முதலியவற்றுள் ஏதேனும் ஒன்றிரண்டிலாவது, எல்லாவற்றிலுமாவது வீக்கமும் வலியும் பொறுக்கக்கூடாமல் உண்டாவதுடன், அவை சிவந்துங் காணும்; அவ்விடங்களைப் பரிசித்தாலும் மிகக் கஷ்டத்தை யுண்டுபண்ணும். இவ்வியாதிக்கு சிகித்ஸை செய்யாதவரையில் முதலில் ஏதாவது ஒரு மூட்டில் வேதனையும் வீக்கமும் உண்டாய், அவை கிரமமாக மிகவும் துன்பத்தைக் கொடுத்து அப்பால் அவ்விடத்தில் அக்குறிகள் சாந்தமாகும்; இவ்விதம் சாந்தமாவதன் பயனாக மற்றொரு மூட்டில் இதேவிதமான கோளாறுகள் உடனே ஆரம்பமாகும்; இவ்வாறு ஒரு மூட்டைவிட்டு மற்றொரு மூட்டிலும், மற்றொன்றைவிட்டு இன்னும் வேறு சில மூட்டுகளிலும் இவ்விகாரங்கள் மாறிமாறியுண்டாகும். ஜ்வரம் இருந்தபோதிலும், அது அவ்வளவு தீவ்ரமாய் உண்டாவதில்லை. வியர்வையுண்டாவது எப்பொழுதும் இதன் முக்கியமான குறிகளில் ஒன்றாம்; அவ்வியர்வை ஒரு

விதமான துர்நாற்றமுள்ளதாயிருக்கும். மூத்திரம் வெகு குறைவாகவும், பெரும்பாலும் எப்பொழுதுமே ஒருவாறு செங்கற்பொடி நிறமான உப்புவகைகள் கலந்தும் வெளிவரும்; அந்த மூத்திரத்தைச் சிறிது நேரம் வைத்துவைத்தால் அதனடியில் சின்னஞ்சிறிய சிவந்த உப்புகள் உறைந்து மணல்களைப்போல் தங்கும். வாயில் ஒருவிதமாக அரோசகமுண்டாகும்; நாக்கு வரண்டிருக்கும். மேலும் பசியின்மை, அஜீர்ணம், மலபந்தம் என்னும் இச்குறிகளும் ஸஹஜமா யுண்டாயிருக்கும்.

தடுக்கும் உபாயம்:—சிலருக்கு இவ்வியாதி பரம்பரையாக உண்டாகக்கூடும்; அவர்களுக்கு வீக்கம் மிகுதியாக அடிக்கடியும் உண்டாய் தொந்தரையளிக்கும்; அதிகமாக மத்யபானம் செய்வது, அளவுமீறி ஆஹாரங்களையுண்பது, முக்கியமாய் மாம்ஸாஹரத்தை அமிதமாக உபயோகிப்பது, அகாலத்திற் பழுக்கும் கனிகளைப் புஜிப்பது, மற்றும் மதியீனத்தினால் ஆத்திரத்துடன் ம்ருஷ்டான்னங்களை அடிக்கடியும் சாப்பிடுவது முதலான இவை இவ்வியாதி யுண்டாவதற்குத் துணைக்காரணங்களாக (விப்ரக்ருஷ்ட காரணங்களாய்) இருக்கின்றன. இவற்றுடன் அஜாக்கிரதையாக உடம்பைத் திறந்துக்கொண்டு விசேஷமாகக் காற்றில் உலாவுவதும், ஈரமான பிரதேசங்களில் குடியிருப்பது அல்லது நடமாடுவதும் அவ்வியாதி யுண்டாவதர்கு உதவிக் காரணங்களாயிருக்கும். இவ்வாறு காரணங்களைத் தெரிந்துகொண்டால், இதை வரவிடாமல் தடுப்பதற்கும் உபாயங்கள் ஒருவாறு அறியப்படும். உடைகளைத் தகுந்தவாறு தரிப்பதிலும், உடம்பில் ஈரம் தாக்காமலிருப்பதற்காக எதேனும் தகுந்த படுக்கைகளை யுபயோகிப்பதிலும் கவனம் செலுத்தவேண்டியது அவசியம். கால்களில் பாதரக்ஷையை ஸாத்தியமானவரையில் எப்பொழுதுமே போட்டிருப்பது நலம். சிறிது ஈரமும் குளிரும் அதிகரித்த இடங்களில் கம்பளிகளை உடைகளாக உபயோகிப்பது உத்தமம். எற்கனவே பரம்பரையாக ஆமவாத வியாதிக்கு உட்பட்ட மனிதர், ஈரமான பாதங்களைத் துடைத்துக்கொள்ளாமலும் உடம்பைப் போர்க்காமலும் தினந்தோறும் சிறிதுநேரம் உட்கார்ந்திருந்தால் அதனால் அவர்கள் வெகு சீக்கிரத்தில் இவ்வியாதிக்கு ஆளாவார்கள். எப்பொழுதும் கட்டில் அல்லது விசுப்பலகை முதலானவைகளில்மேலின் படுக்கையைப் போட்டுக்கொண்டு படுப்பதே சிறந்தமுறையாம். போஜன பானதிகளில் என்றைக்கும் மிதமாயிருக்கவேண்டும்.

சிகித்ஸை:—ஒருவனுக்கு ஆமவாதஜ்வரக்குறிகள் உண்டாவதாகத் தெரிந்தவுடனே சுத்தமாகக் காற்று வீசும் ஓர் அறையில் படுக்கையில் உடம்பில் வேதனை யதிகரிக்காதபடி அமைதியாகப் படுத்திருக்கச் செய்ய வேண்டியது முதற்காரியம். படுக்கையின்மேல் ஒரு துப்பட்டியும், பிணியாளியின்மேல் போர்த்துக் கொள்ள மிருதுவான ஒரு துப்பட்டியும் போட்டிருப்பது நலம். கோதுமைக்கஞ்சி, புழுங்கலரிசிக்கஞ்சி முதலியவற்றை வேண்டியவளவு பால் சேர்த்து ஆஹாரமாகக் கொடுத்துவரலாம். காலத்திற்பழுத்த கனிகளையும் புஜிக்கக் கொடுக்கலாம். இவ்வியாதியில் அதிகமாய் நாவறட்சியுண்டாவது ஸஹஜம்; அதற்கு உபசாந்தியாக எலுமிச்சம் பழப்பானகம் முதலிய புளிப்பான சில பதார்த்தங்களைச் சிறிதளவு வெந்நீரில்சேர்த்துப் பருகக்கொடுத்து வரலாம்.

பாஷ்பஸ்நானம் என்னும் வேதுபிடித்தலும், உஷ்ணஜலஸ்நானமும் ஹிதமாயிருக்கும். கோதுமைத்தவிட்டை வறுத்து ஒற்றிடம் கொடுக்கலாம்; கர்ப்பூரத்தைலத்தை வெந்நீரில் சிறிது சேர்த்து, அந்த ஜலத்தில் வஸ்திரத்தை நனைத்தும் சுடவைத்த காஞ்ஜிகமென்னும் காடியில் துணியைத் தோய்த்தும் ஒற்றிடம் கொடுப்பதாலும் அனுகூலம் உண்டாகும். ஜ்வரத்தினாலுண்டாகும் கஷ்டத்தைத் தணிப்பதற்காக இளஞ்சூடான அல்லது சிறிது குளிர்ந்த ஜலத்தில் மெல்லிய வஸ்திரத்தை நனைத்து உடம்புமுடியவும் ஒற்றிடம் கொடுப்பது சில ஸமயம் உபயோககரமான சிகித்ஸையாகுமென்பது வாஸ்தவமே; ஆனால் ஆமவாதத்தில் குளிர்ச்சியான வஸ்துக்களைப் பரிசிப்பதால் வியாதி தீவ்ரமாய்விடுமாகையால், அவ்விதம் செய்ய வேண்டியிருந்தால் அனுபவசாலியான அறிவுள்ள வைத்தியரைக்கொண்டே அதை நிறைவேற்றவேண்டும். தினந்தோறும் மலம் சரியாகக் கழிந்து வருகிறதாவென்பதைக் கவனிக்கவேண்டும்; அவ்விதமில்லாவிட்டால் சிறிது ஆமணக்கெண்ணெய் கலந்த ஜலத்தை ஆஸனத்வாரத்தால் வஸ்தியாகச் (Enema) செலுத்தி எவ்விதமாவது மலத்தை வெளிப்படுத்தி வரவேண்டும். 'யோகராஜ குக்குலு' என்னும் மாத்திரையை* ராஸ்நாதி க்வாதத்தோடு (க்வாதம் என்பது கஷாயவகை)† சிலவாரம் உட்கொண்டு வருவதால் வியாதி தீரும். நீடித்த காலமாய் அனுஸரித்து வரும் மலபந்தம் சிலஸமயம் ஆமவாதம்போன்ற வாததோஷத்தை யுண்டுபண்ணும்; அதுவே ஆமவாதமாக மாறக் கூடுமாதலின், மலபந்தம் சிறிதும் நேரிடாதபடி குடல்களை ஆமணக்கெண்ணெய் முதலியவற்றால் சுத்திசெய்து வரவேண்டும்.

---

* யோகராஜ குக்குலு.—சார்ங்கதர ஸம்ஹிதையில் 110-வது பக்கம் பார்க்க.

† இக்கஷாயத்தைப்பற்றி சார் 79-வது பக்கம் பார்க்க.

## GUINEA-WORM DISEASE IN INDIA.

## இந்தியாவில் நரம்புச்சிலந்தி வியாதி.

இந்தியாவில் பரான்ஞசனிகள் (Parasitic infection) என்னும் சிலந்திக்கிருமிகளின் ஸம்பந்தத்தினால் இவ்வியாதி பரவும் விஷயங்களைப்பற்றி டாக்டர் டர்க்குட் என்பவர் செய்த விசாரணையின் முழுவிஷயங்களும் அடங்கிய ரிபோர்டு ஒன்று 'இண்டியன் மெடிகல் கஜெட்' என்னும் வைத்தியப் பத்திரிகையின் சென்ற மார்ச்சுமாதத்திய வஞ்சிகையில் வெளியாயிருக்கின்றது. டாக்டர் டர்க்குட் செய்த ஆராய்ச்சியினால் இந்த வியாதி இந்தியாவில் வெகு அதிகமாகப் பரவுவதாக நன்கு அறியப்படுகிறது. இத்தேசத்தின் சில பாகங்களில் உதாரணமாக இச்சென்னைமாகாணத்தின் மேற்குப் பிரதேசங்களில் வருஷந்தோறும் ஒரு மைல் விஸ்தீர்ணத்திற்கு 30-மனிதர்கள் வீதம் இவ்வியாதியால் வருந்துகின்றனர்; சிறைச்சாலையில் குற்றவாளிகளைச் சேர்க்கும்போது பொதுஜனங்களிடம் வியாபித்திருந்த இவ்வியாதியானது சிறையிலுள்ள மற்றவருக்கும் புதிதான அக்குற்றவாளிகளின் மூலமாய் ஸாதாரணமாகப் பரவிவருகிறது. டெக்கானில் கூட ஒரு வருஷத்தில் மைலுக்கு 28-மனிதர்களுக்கு இச்சிலந்தியினால் வியாதி நேரிட்டதுடன், சில கிராமங்களில் இன்னும் அதிகமாக அதாவது நூற்றுக்கு 10-மனிதர்களுக்கு இது ஸம்பவிக்கின்றது.

ஸ்திரீகளைக்காட்டிலும் புருஷர்களே இவ்வியாதியால் அதிகமாகப் பீடிக்கப்படுகின்றனர். இவ்வியாதி வியாபித்துள்ள கிராமங்களில் இருக்கும் ஆடுமாடு முதலிய கால்நடைகளுக்கு உண்டாவதில்லை. மனிதர்களிலும் ஐந்தில் ஒருவனுக்குத்தான்—எவனொருவன் 6-அல்லது 8 நரம்புச்சிலந்தி முட்டைகளுன்கூடிய ஜலத்தைக் குடிக்கின்றானோ அவனுக்கு—இவ்வருவருப்பைத் தரும் கிருமிவியாதி யுண்டாகின்றது.

கிருமிகளால் தோஷமடைந்த ஜலத்தை ஒருவன் குடித்து சுமார் ஒருவருஷம் சென்றபிறகே, அவனுடைய உடலின் சர்மத்திற்கு அடியில் இக்கிருமி காணப்படுகின்றது. இடையில் இவ்வளவு நீண்ட காலத்தில் இத்தோஷம் ஸம்பந்தித்த மனிதனுக்கு இவ்வியாதி ஸம்பந்தமான எவ்விதக் குறியும் தோன்றுவதில்லை.

இக்கிருமி தன் ஸந்ததியை மிகவும் விருத்தி செய்யக்கூடியது; ஒவ்வொரு பெண் கிருமியும் சுமார் 30 லக்ஷம் சிறிய கிருமிகளை யுண்டாக்கிவிடும்.

நரம்புச்சிலந்தியின் குஞ்சுகளுக்கு ஜலத்தில் அதன் இனத்தைச்சேர்ந்த சில நுண்ணுயிர்கள் உணவாக இருக்கின்றன. அவ்வித கெட்ட நுண்ணுயிர்கள் அடங்கிய நீரைக் குடிப்பவர்களின் சரீரத்தில் இக்குஞ்சுகளும் இவற்றின் முட்டைகளும் செழித்து வளரக்கூடும்.

இச்சிலந்திகளுக்கு உணவாக இருக்கும் அதன் இனத்தைச் சேர்ந்த நுண்ணுயிர்களை பொடாஸியம் பெர்மாங்கனேட் என்னும் உப்பை அந்த ஜலத்தில் கரைத்துவிட்டால் கொன்றுவிடலாம்; ஆனால் இச்சிலந்தியின் முட்டைகள் அவ்வுப்பால் அழிக்கப்படமாட்டாவாகையால் அம்முட்டைகள் பக்குவமாய் வெடித்தவுடன் அக்குஞ்சுகள் மீண்டும் வெளிவந்து விருத்தியாக வழியுண்டு; அவை வெளியாகும்போது இதற்கு முன்னால் கரைத்திருந்த உப்பு ஸத்துவமிழந்துவிடும்; ஆகவே முதலில் ஒரு கிணற்றில் மேற்கூறிய உப்பு முதலானதைக் கரைத்து அதை முதலில் சுத்திசெய்து, அப்பால் ஒரு மாதம்வரையில் அந்த ஜலவிஷயத்தில் தகுந்த கவனம் செலுத்தாமற்போனால், அதில் மீண்டும் முன்னிருந்த தோஷங்கள் விருத்தியாய்விடுவது நிச்சயம்.

வெகு எளிதில் தடுக்கக்கூடிய இவ்வியாதி இவ்வளவு அதிகமாகப் பரவுவதற்குக் காரணம், ஜனங்களுக்குள்ள ஒற்றுமையின்மையும், அறியாமையும், அஜாக்கிரதையுமேயாம்; அவர்கள் பருகுவதற்கு உபயோகமான குளத்து ஜலத்தில் மூழ்கியும் அழுக்குத் துணிகளைத் தோய்த்தும் அதைக் கெடுத்துவிடுகின்றனர். அவர்கள் இவ்விதம் செய்துவரும் வரையில் குடிநீர் சுத்தமாயிருப்பதும் ஸாத்தியமில்லை; இவ்வித வியாதியைத் தடுப்பதும் எளிதல்ல.

"இண்டியன் மெடிகல் கஜெட்" என்னும் பத்திரிகையில் பிரசுரித்துள்ள இவ்விஷயமான ரிபோர்டின் ஸாராம்சத்தை நமது வைத்தியர்களுடையவும், மற்றப் பொது ஜனங்களுடையவும் மனதிற்படுமாறு நாம் இங்கு மொழிபெயர்த்து வெளியிட்டோம். இனியாவது இவ்வித விஷயங்களில் ஆங்காங்குள்ள வைத்தியர்களும், படித்தறிந்த மற்ற ஜனங்களும் கண்வைத்தார்களானால் நமது தேசத்து சுகாதாரநிலைமை எவ்வளவோ சீர்திருத்த மடையக்கூடும்.

## THE ALL-INDIA AYURVEDIC CONFERENCE, SEVENTH SESSION.

## அகிலபாரத ஆயுர்வேத கான்பரென்ஸ்—ஏழாவது ஸம்மேளநம்.

சென்ற ஜனவரி மாதத்தில் கல்கத்தாவில் இக்கான்பரென்ஸ் ஆறுவது முறையாகக் கூடி, சில தீர்மானங்கள் நடந்தேறின வென்றும், அது இவ்வருஷம் சென்னையில் கூடப்போகிற தென்றும் கலாநிதியைப்படிக்கும் நேயர்கள் அறிந்த விஷயமே. அதற்காக இது முதற்கொண்டே இம்மாகாணத்திலுள்ள வைத்தியர்கள் சிறிது உத்ஸாஹத்துடன் முன் வந்து, இதற்காக வேண்டிய காரியங்களில் உதவி புரிவார்களானால் இவ்வருஷம் இம்மஹாஸபையை வெகு சிருடன் நடைபெறச் செய்த புகழுக்கு இச்சென்னை மாகாண வைத்தியர்களான நாம் பாத்திரமாவதுடன், நமது முன்னோர்களால் ஏற்படுத்திய அரிய ஆயுர்வேத வைத்திய சாஸ்திரத்தைச்சீர்படுத்தி, நாமும் காலக்ரமத்தில் ஆங்கில வைத்தியர்களைப்போல் ஒருவாறு முன்னேற்றமடைய வழியேற்படும். ஆறு வருஷகாலமாய் வட இந்தியாவில்—பம்பாய், ப்ரயாகை, கான்பூர், வடமதுரை, கல்கத்தா முதலான விடங்களில் ஆயுர்வேத வைத்தியர்கள் ஒற்றுமையுடனும் உத்ஸாஹத்துடனும் உழைத்து ஒவ்வொரு வருஷமும் ஆயுர்வேத கான்பரென்ஸை நடத்தி, அவ்விடங்களில் இவ்வைத்தியமுறைக்கு மேன்மேலும் பெருமையையும் செல்வாக்கையும் உண்டுபண்ணி வந்திருக்கின்றனர்; இவ்விஷயத்தில் சென்னை ராஜதானியிலுள்ள வைத்தியர்கள் பின் தங்கிவிடாமல் வடதேசத்திய வைத்தியர்களைப் போலவே ஊக்கத்துடன் இக்கான்பரென்ஸை வெகு விமர்சையாக நடத்துவதற்குக் கடமைப்பட்டிருக்கின்றனரென்று நான் தனிப்படக் கூற வேண்டிய அவசியமில்லையல்லவா? இவ்வருஷம் டிசம்பர் மாதத்தில் அல்லது ஜனவரியில் நடத்தவேண்டிய இக்கான்பரென்ஸுக்கு ஸம்பந்தித்த காரியங்களை முன்னின்று நடத்துவதற்காக ஆயுர்வேத மஹாமண்டல ஸபையார் என்னை இச்சென்னைமாகாணத்துக்கு கார்யதரிசியாக நியமித்திருக்கின்றனர். இப்பொழுது முதலில் சில ஆரம்ப காரியங்களைச் செய்யவேண்டியிருக்கிறது. அவற்றுள்:—

1. இச்சென்னையில் நடைபெறப் போகிற கான்பரென்ஸுக்கு நல்வரவுச்சங்கம் (Reception committee) ஒன்று ஏற்படுத்தவேண்டும்.

2. ஸாத்தியமானவரையில் ஜில்லாக்கள் தோறும் ஆங்காங்குள்ள ஆயுர்வேத வைத்தியர்கள் சேர்ந்து ஒவ்வொரு சிறிய சமிட்டி (sub commettee) ஏற்படுத்தி, இக்கான்பரென்ஸுக்கு உதவி செய்யவேண்டியது உசிதம். (இவ்வாறு ஏற்பட்ட கமிட்டியார் பிறகு கான்பரென்ஸுக்கு வைத்தியர்களைப் பிரதிநிதிகளாகத் தெரிந்தெடுத்து அனுப்பக்கூடும்.)

3. கான்பரென்ஸுக்கு ஸம்பந்தமான எல்லாக் காரியங்களையும் பற்றி மாகாணத்திலுள்ள வைத்தியர்கள் எல்லோருக்கும் விஷயங்களைத் துண்டுப்பத்திரிகைகளின் மூலமாகவும் கடிதமூலமாகவும் தெரிவிக்க வேண்டியிருக்கிறது.

இவ்விதம் இக்காரியங்களை ஆரம்பிப்பதற்குமுன் ஆங்காங்குள்ள வைத்தியர்கள் அவரவரது பெயர், ஊர் முதலியவற்றை அடியில் குறிப்பிடும் விலாஸத்துக்கு தயவுசெய்து அனுப்புவார்களாக.

பண்டித எம். துரைஸ்வாமி ஐயங்கார்,

அகிலபாரத ஆயுர்வேத கான்பரென்ஸ் காரியதர்சி,
7. கொண்டலையர் தெரு,
மிண்டு பிள்டிங்ஸ், சென்னை.

---

## CORRESPONDENCE.

## கடிதங்கள்.

### AN APPEAL TO THE AURVEDIC DOCTORS.

### ஆயுர்வேத வைத்தியர்களுக்கு ஓர் விண்ணப்பம்.

கனவான்களே !

ஆயுர்வேத வைத்தியர்கள் அநேக ஔஷதச்சரக்குகளின் விஷயத்தில் இப்பொழுது பலவிதமான ஸந்தேஹங்கள் உடையவர்களாயிருக்கின்றனரென்பது நாம் புதிதாகக் கூறவேண்டிய விஷயமல்ல. ஆயுர்வேத நூல்களில கூறப்பட்டுள்ள ஒரு பதார்த்தத்தையே இந்நாட்டில் ஒவ்வொரு பிரதேசத்திலும் வெவ்வேறு விதமாக வியவஹரிப்பதுடன் வெவ்வேறு பதார்த்தங்களையும் உபயோகிக்கின்றனர். உதாரணமாக—வ்ருத்ததாரு, ஜீவந்தீ, ராஸ்நா முதலிய பதார்த்தங்களின் விஷயத்தில் ஆங்காங்குள்ள வைத்தியர்களுக்கு ஸந்தேஹம் இருந்து வருகிறது. இவற்றுள் இப்

பதார்த்தத்திற்கு இதுதான் சாஸ்த்ரீயமான பெயர் என்று நிச்சயிப்பது ஆயுர்வேத வைத்தியர்களின் கடமையாக இருக்கின்றது. இதன் ஸம்பந்தமான ஆராய்ச்சியைச் செய்வதற்காக அடியிற் குறிக்கப்படுமாறு காரியம் செய்யவேண்டியிருக்கிறது.

இந்தியாவில் ஒவ்வொரு ப்ராந்தத்திலும் அநேகம் கற்றறிந்த ஆயுர்வேத வைத்தியர்கள் இருக்கின்றனர்; முதலில்-அவர்களுக்குச் செய்துகொள்ளும் விண்ணப்பம் என்னவென்றால்:— ஒவ்வொரு ப்ராந்தத்திலுமுள்ள வைத்தியர்கள் அவரவர்களுக்கு எந்த ஔஷதச்சரக்குகள் விஷயத்தில் ஸந்தேஹமுண்டோ, அல்லது எப்பதார்த்தங்களுக்குப் பெயர்கள் தெரியவில்லையோ அவ்வித ஔஷதச் சரக்குகளின் பெயர்கள் அடங்கிய ஓர் அட்டவணையை அடியிற்கண்ட விலாஸத்திற்கு எழுதியனுப்பும்படி கோரப்படுகிறது. இவ்வாறு இந்தியாவில் பலவிடங்களிலிருக்கும் அநேக ஆயுர்வேத வைத்தியர்களிடமிருந்தும் பிரத்யேகமாக ஔஷதச்சரக்குகளின் அட்டவணைகள் எனதிடம் கிடைத்தபிறகு, அவ்வனைத்தையும் சேர்த்து ஒரு பெரிய அட்டவணை தயார் செய்யப்படும். அவ்விதம் ஸந்தேஹிக்கக்கூடிய ஔஷதச்சரக்குகளின் பெரிய அட்டவணை தயார் செய்யப்பட்டவுடனே, அதை அச்சிட்டு, எந்தெந்த வைத்தியர்களிடமிருந்து சிறிய அட்டவணைகள் வரவழைக்கப்பட்டனவோ அவர்களுக்கும், மற்றுமுள்ள இதர வைத்தியர்களுக்கும் அவ்வச்சிட்டப்ரதிகளில் ஒவ்வொன்று அனுப்பப்பட்டு, ஒருவருக்கு ஸந்தேஹமாயிருந்த பதார்த்தம் வேறு சிலரால் அறியப்படுமானால் அவ்விஷயங்களை அவ்வப்பதார்த்தங்களுக்கு நேராக எழுதியனுப்பும்படி அவ்வைத்தியர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். வைத்தியர்கள் எவ்வௌஷதச் சரக்குகளின் பெயர் முதலியவை தெரியவில்லையென்று கூறுகிறார்களோ, அவர்கள் அவ்வச்சரக்குகளில் சிறிதளவு மாதிரிக்கு அனுப்புவது மிகவும் அவசியம்; அவ்விதம் அனுப்பும்படியாகவும் அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுவார்கள். பிறகு ஆயுர்வேத மஹாமண்டலத்தின் அங்கீகாரத்திற்கு இவ்விஷயத்தைக் கொண்டுவந்து, அப்பால் அவர்களுடைய அனுமதியையும் பெற்று இவ்விஷயத்தை ஆராய்ச்சி செய்வதற்கென்றே உபஸங்கம் ஒன்று ஏற்படுத்தப்படும். அந்த ஸங்கம், இரண்டு விருக்ஷ சாஸ்திரநிபுணர்களாலும் (பொடானிஸ்ட்ஸ்), இரண்டு வைத்தியர்களாலும், ஆயுர்வேத-ஆங்கில வைத்தியமிரண்டும் அறிந்த ஒருவராலும் அமைக்கப்படும். அவ்வுபஸங்கத்தார், எனதிடம் கிடைத்திருக்கும் மாதிரிச்சரக்குகளுள் ஒவ்வொன்றையும் சாஸ்திரரீதியாய் இவ்விதமே வியவஹரிக்கவேண்டுமென்று நிச்சயித்து, பிறகு அவ்விஷயம் எல்லோருடைய அங்கீகாரத்தையும் பெறுவதன் பொருட்டு அகிலபாரத ஆயுர்வேத் கான்பரென்ஸின்முன் கொண்டுவரப்படும்.

ஸந்தேஹிக்கக்கூடிய ஔஷதச்சரக்குகளின் அட்டவணையை அநேக வைத்தியர்களுக்கு அனுப்பி, அவர்களுடைய உதவியினால் மாதிரிச் சரக்குகளை ஸம்பாதித்து, அவற்றின் உண்மையான பெயர் முதலியவற்றை ஆயுர்வேத கான்பரென்ஸில் நிச்சயிப்பதற்காக முன்னதாய் நடத்தவேண்டிய காரியங்களைச் செய்ய கல்கத்தாவில் நடந்த ஆயுர்வேத மஹாமண்டலத்தார் என்னை நியமித்தார்கள். மீண்டும் வைத்தியர்களிடம் பிரார்த்திப்பது என்னவென்றால்—முதலில் உங்களுக்கு ஸந்தேஹமான ஔஷதச்சரக்குகள் எவையுண்டோ அவற்றின் அட்டவணையொன்றை தயவு செய்து எனக்கு அனுப்பவேண்டும். அவற்றையெல்லாம் சேர்த்து ஒரு பெரிய அட்டவணையை ஏற்படுத்தி சீக்கிரத்தில் மறுபடியும் அவ்வித சரக்குகளை எனக்கு மாதிரிக்கு அனுப்பும்படி கேட்டுக்கொள்வதுடன் அனைவருக்கும் ஸந்தேஹிக்கக்கூடிய ஔஷதச்சரக்குகளின் முழு அட்டவணையைத் தயார்செய்து அனைவருக்கும் அனுப்ப அனுகூலமாயிருக்கும். இக்காரியத்தை ஒவ்வொரு வைத்தியரும் தமதுசொந்த காரியம்போல் நினைத்து இவ்விஷயத்தில் எனக்கு உதவிபுரிவார்களென்று ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன்.

இங்ஙனம்

372, BORABAZAR ST.,
*Fort, Bombay.*
வைத்தியயாதவ்ஜீத்ரிகம்ஜி ஆசார்யர்.

[அடுத்த கான்பரென்ஸில் இது ஒரு முக்கியமான விஷயமாகக் கவனிக்கப்படும். ஆகவே யாதவ்ஜீ ஆசார்யர் அவர்கள் வேண்டிக்கொண்டிருக்குமாறு நமது வைத்தியர்கள் இவ்விஷயத்தில் சிரத்தையுடன் உதவி செய்வார்களென்று நம்புகிறோம். அவரவர்கள் அனுப்ப விரும்பும் ஸந்தேஹிக்கக்கூடிய ஔஷதச் சரக்குகளின் அட்டவணையை "ஆயுர்வேத கான்பரென்ஸின் சென்னைமாகாணக் கார்யதரிசி, 7, கொண்டலையர் தெரு, சென்னை" என்னும் விலாஸத்திற்கும் அனுப்பலாம். ப-ர்.]

## QUESTIONS AND ANSWERS
## ஸந்தேஹ விநுக்கள்.

### 3. காமாலேயும் அதன் சிகித்ஸையும்.

ஐயா,

சென்ற மாசிமாதத்திய ஸஞ்சிகையில் மிஸ்டர் வி. எஸ். ஐயன் பிள்ளை வைத்தியர் அவர்கள் காமாலையைப்பற்றி எழுதிய வியாஸத்தைப் படிக்க மிகவும் ஸந்தோஷமாகவும் த்ருப்தியாகவும் இருக்கிறது.

(1) அதில் சொல்லியிருக்கிறபடி அவ்வௌஷத்தை ஜ்வரத்துடன்கூடிய காமாலேயில் கொடுக்கலாமா?

(2) கொடுத்தால் அதன் செய்கைகள் என்ன? இந்த ஸந்தேஹவிநுக்களுக்கு இப்பத்திராதிபர்களாவது மேற்படி வைத்தியராவது தயவுசெய்து விடையளிக்கக் கோருகிறேன்.

கே. என். அருணசல ஐயர்.

[மேற்கூறிய இரண்டு கேள்விகளுக்கும் அடுத்தப் பத்திரிகையில் மிஸ்டர் ஐயன்பிள்ளை அவர்கள் விவரமாகவும் சுருக்கமாகவும் தயவுசெய்து விடையளிப்பார்களென்று எதிர் பார்க்கிறோம். பர்.]

### 4. ஆஹாரம்.

ஐயா,

அடியில் நான் குறிப்பிடும் ஸந்தேஹங்களுக்குக் கலாநிதியின் வாயிலாகப் பலருக்கும் பயன்படுமாறு தயவுசெய்து விடையளிப்பீர்கள் என்று ஆவலுடன் நானும் என் நண்பர்களும் எதிர்பார்க்கின்றோம்:—

(1) பலஹீனப்பட்ட ஜீர்ணக்கருவிகள் பலப்படவேண்டுமானல் சிறகச் சிறகக் கடினபதார்த்தங்களைப் புஜித்து அவை பலப்பட வேண்டுமா? அல்லது இலகுவில் ஜீர்ணமாகக்கூடிய ஆஹாரவகைகளேயே புஜிப்பதால் பலப்படவேண்டுமா?

(2) மென்று புஜிக்கமுடியாத சிறு குழந்தைகளுக்கு திரவமான ஆஹாரம் தகுதியா? கெட்டியான ஆஹாரம் தகுதியா?

(3) போஜனபதார்த்தங்கள் வாடிக்கையைப் பொறுத்ததா? தேஹஸ்வபாவத்தைப் பொறுத்ததா?

B. ஆதிமூர்த்தி.

விடை:—

(1) ஜீர்ணக் கருவிகள் அவற்றின் வேலையைச் செய்ய சக்தியற்றிருக்கும் வரையில் கடினமான உணவுகளை உண்பது முற்றிலும் உசிதமல்ல. எளிதில் ஜீர்ணமாகக்கூடிய உணவுகளையே—பெரும்பாலும் திரவரூபமான ஆஹாரங்களையே புஜித்துவந்தால் கிரமமாக மற்ற அவயவங்களைப்போலவே ஜீர்ணகோசங்களும் பலப்பட்டு, அப்பால் அவை கடினமான உணவுகளையும் ஏற்றுக்கொண்டு அவற்றை ஜீர்ணம் செய்யக்கூடிய வன்மையைப் பெறும். (2) ஆம்; திரவமான உணவையே சிறு குழந்தைகளுக்கு ஊட்டவேண்டும். கெட்டியான பதார்த்தங்களிலும் சில சீக்கிரம் ஜீர்ணமாகக் கூடியவையுண்டு; ஆகிலும் சிறுகுழந்தைகள் என்கிற மட்டிலும்—கெட்டியான உணவுப் பொருட்களை மென்றுப் புஜிக்கக்கூடிய திறமை வராதவரையில் அவ்வித வஸ்துக்களைக் கொடுக்காமலிருப்பதே நலம். (3) அவரவர்களுடைய வழக்கத்திற்குத் தகுந்தவாறே போஜன பதார்த்தங்களை உபயோகிக்க வேண்டியிருக்கின்றது. ஒருவருக்கு ஒருவிதமான ஆஹாரம் வாடிக்கையாகப்போனபின் அதைத் தவிர்த்து மற்றவை—எவ்வளவு சிறந்தவையென்றாலும்—ஏற்றுக்கொள்ளப்படுவது கஷ்டமே. உதாரணமாக இந்தியாவில் வடதேசத்தார் கோதுமையையும், தென்தேசத்தார் அரிசியையும் பிரதான உணவுப் பொருளாக உபயோகித்து வருகின்றனர். அவ்வாடிக்கையை மாற்றுவதென்றால் கஷ்டமே. ஒருவன் ஏதேனும் பிணியினால் வருந்தினால் அப்பொழுது அவனுடைய தேஹஸ்வபாவத்திற்கு ஏற்றவாறுதான் அவன் உணவுகளை யுபயோகிக்கவேண்டும். பர்.

### 5. நன்னாரியும் யஷ்டிமதுகமும்.

ஐயா,

அடியில் வரும் கேள்விகளுக்குத் தயவுசெய்து விடையளிக்கக் கோருகிறேன்:—

(1) சீமை நன்னாரிவேருக்குப் (Radix Sarsae) பதிலாக நாட்டு நன்னாரி வேரையாவது (Hemidesmi Root), கவ்ஜபான் என்னும் மூலிகையையாவது ஔஷதங்களில் சேர்க்கும்படியாய் சிலக் கிரந்தங்களில் கூறப்பட்டிருக்கிறது. இவற்றுள் கவ்ஜபான் என்கிற மூலிகையை ஊறல் கஷாயம், காய்ச்சியெடுக்கும் கஷாயம், ஆவிநீர் என்னும் இம்மூன்று முறையில் எம்

முறையைக் கொண்டு பக்குவம் செய்தால் கவ்ஜபான் என்னும் மூலிகையின் ஸத்துவம் கெடாமல் அதன் குணம் மேன்மையடையும் ?

(2) யஷ்டிமதுகம் என்றால் என்ன ?

வி. என். கணபதி முதலியார்.

விடை:—

(1) சீமை நன்னாரிவேர் கிடைக்கும்போது அதற்குப் பதிலாக வேறு பதார்த்தங்களை யுபயோகிப்பது அவசியமல்ல. கவ்ஜபான் என்பதையாவது, சீமை அல்லது நாட்டு நன்னாரியையாவது உபயோகிக்க வேண்டி வந்தால் அப்போதைக்கப்போது கஷாயமாகக் காய்ச்சி யுபயோகிப்பதே சிறந்த முறை ; ஆனால் சில நாட்கள் வைத்துக்கொண்டு உபயோகிக்க வேண்டியிருந்தால் ஆவிநீராகவே இறக்கி உபயோகிக்க வேண்டும். (ஆவிநீர்) என்பதைவிட அர்க்கம் என்று வழங்குவது வைத்தியர்களுடைய வியவஹாரத்திற்கு ஏற்றதாகும்.) மேலும் அந்தந்த வியாதி நிலைமைகளுக்குத் தகுந்தவாறும் பக்குவம் செய்யவேண்டும்.

(2) யஷ்டிமதுகம் என்பது அதிமதுரம். ப—ர்.

———

## 6. பலங்குன்றிய ஹ்ருதயம்.

ஐயா,

இப்பொழுது எனக்கு வயது பதினெட்டு. இரண்டு வருடங்களுக்கு முன்பு அதிக வேலைகளைச் செய்து வந்ததன் பயனாக எனது ஹ்ருதயத்திற்கு சிறிது தீங்கு உண்டாயிற்று; பிறகு ஆறு வாரங்கள் நான் ஓய்வெடுத்துக்கொண்டேன். இப்பொழுது என் ஹ்ருதயத்தில் வலி யிருப்பதாக எனக்குத் தெரியவில்லையாயினும், அவ்வவயவம் இன்னும் பலங்குன்றியதாகவே தோற்றுகிறது.

(1) நான் பத்து மணிநேரம் தூங்குவது அதிகமா?

(2) வியாமமென்னும் தேஹ வுழைப்பு எனக்கு உசிதமா? அல்லது கூடுமான வரையில் சரீரத்தை யுழைக்காமல் அமைதியாயிருப்பது நலமா?

(3) இவ்விஷயத்தில் நான் கவலைப்படுவதற்குக் காரணம் ஏதேனுமுண்டா? அல்லது வயது செல்லச் செல்ல எனது நிலைமை பலப்படுமா ?

விடை :—(1) இல்லை; பத்துமணிநேரம் நித்திரை போவது அதிகமென்று நினைப்பது எவ்விதத்திலும் சரியல்ல. உமக்கு எவ்வளவுநேரம் தூங்கவேண்டுமென்று தோற்றுகிறதோ அவ்வளவு நேரமும் நித்திரை போகவேண்டும். உம்முடைய படுக்கையறையை நன்கு காற்றோட்டமுள்ளதாக அமைத்துக்கொள்வது அவசியம். நித்திரை போகவேண்டிய காலத்தைக் குறைப்பது மிகவும் பிசகான காரியம். (2) நீர் செய்யும் வேலையும் வியாயாமமும் சொற்பமாயிருப்பதே நலம்; சரீரத்தை அதிக ஆயாஸப்படுத்திக்கொண்டு வேலை அல்லது வியாயாமம் செய்வது மிகத் தவறுதலான காரியம். கூடியமட்டிலும் அமைதியாக இருக்க ஏற்பாடு செய்துகொள்ளும். ஸாத்தியமானவரையில் வீட்டுக்கு வெளியில் சுத்தமான காற்றோட்டமுள்ள விடங்களில் காலத்தைக் கழித்து வருவது உத்தமம். நன்றாகக் கனிந்த சிறந்த பழவர்க்கங்களையும், கோதுமையையும், பால் வெண்ணெய் முதலியவற்றையும் எப்பொழுதும் உண்பது நலம். காப்பி, டீ, மதுவகைகள் முதலிய உத்தீபன வஸ்துக்களை உபயோகிக்கக் கூடாது; மாம்ஸாஹாரத்தை விலக்குவதும் உசிதம். (3) முற்கூறிய விதமாகவே அமைதியாயிருந்து, ஸாதாரணமான உணவுகளை யுபயோகித்துவரும் வரையில் நீர் இதற்காகக் கவலைப்படவேண்டிய அவசியமில்லையென்று நினைக்கிறோம். ஆகிலும் வயது செல்லச் செல்ல உம்முடைய சரீர நிலைமை எவ்வாறு ஆகுமென்னும் விஷயம் உம்முடைய காரியங்களையும் நடையுடைகளையும் உணவுகளையும் பொருந்தியதாகும். (ப-ர்.)

———

## 7. மூலரோக சிகித்ஸை.

அன்பார்ந்த ஐயா,

அடியில்வரும் கேள்விகளுக்குத் தாங்களாவது (பத்திராசிரியர்), கலாநிதியைப் படிக்கும் மற்ற வைத்தியர்களாவது தயவு செய்து விடையளித்தால் மிகவும் நன்றி பாராட்டக்கடமைபட்டிருக்கின்றேன்:—

(1) இரத்த மூலத்தில் உடனே இரத்தக் கசிவை நிறுத்தி, ஆஸனத்வாரத்தி லேற்படும் கடுப்பையும் நிவ்ருத்தி செய்யக்கூடிய கைகண்ட ஔஷதம் ஏதேனும் உண்டா ?

(2) மூல முளைகளை சஸ்திர சிகித்ஸையினாலேயே போக்கவேண்டுமா ? அல்லது அவற்றை ஔஷத ப்ரயோகங்களாலேயே வேருடன் களைந்து விடக்கூடுமா? அப்படியானால் அவ் வௌஷதம் யாது ? எங்கு கிடைக்கும் ?

(3) உள்மூலம் வெளிமூலம் இவற்றிற்குத் தனித்தனியே வெவ்வேறு விதமான சிகித்ஸை செய்யவேண்டுமா ? ஒன்றுக்கு செய்யப்படும் சிகித்ஸையே மற்றொன்றுக்கும் ஏற்றதாயிருக்குமா ? D. S.

[மூலரோக சிகித்ஸையைப் பற்றி மேலே கேட்கப்பட்டிருக்கும் மூன்று வினாக்களுக்கும் கலாநிதியைப் படிக்கும் நமது வைத்திய ஸஹோதரர்களில் எவரேனும் கூடிய சீக்கிரத்தில் தகுந்தவாறு விடைகளை எழுதி கலாநிதி ஆபீஸுக்கு தயவு செய்து அனுப்புவார்களானால், அவ்விஷயங்களறிந்த வைத்தியர்கள் மற்ற வைத்தியர்களுக்கும் பொது ஜனங்களுக்கும் பேருதவி புரிந்தவராவர். ப-ர்.]

# DRUGS AND MEDICINES.

## ஔஷதச் சரக்குகளும் ஔஷதங்களும்.

### ஊமத்தை.

இது மிகவும் உபயோககரமான ஔஷதச் சரக்காயிருந்தாலும், இதைப் பிரயோகிப்பதில் அதிக ஜாக்கிரதையாயில்லாவிட்டால் நஞ்சின் குறிகள் காணப்படும். ஊமத்தையில் வெள்ளை கறுப்பு என்று இரு வகை யுண்டு; இவ்விரண்டையும் உபயோகித்துப் பார்த்ததில் வெள்ளை யினத்தைப் பார்க்கிலும் கருப்பு இனமே சிறந்த குணந் தரக்கூடிய ஸாரமுள்ளதென்று அறியப்பட்டது.

அதன் உபயோகம்.—(1) காய்ந்த ஊமத்திலைகளைப் புகையிலைச் சுருட்டுபோல் செய்து, அதன் புகையை உறிஞ்சால் உடனே ச்வாஸகாஸத்தினாலுண்டாகும் பெருமூச்சு முதலிய விகாரங்கள் சாந்தமாகும். தேவைக்குத் தகுந்தபடி தினம் ஒன்றுக்கு மூன்று அல்லது நான்கு முறை இப்புகையைக் குடிக்கலாம். ஆனால் தலைச் சுற்றல், வாய்க் குமட்டல் முதலிய துர்லக்ஷணங்கள் உண்டானால் உடனே நிறுத்தி விடவும். இதை அஜாக்கிரதையாக உபயோகித்ததில் பிராணாபாயம் அல்லது மிகக் கொடிய வேதனைகள் உண்டானதாகத் தெரியவருவதால் இதைப் பிரயோகிப்பதில் மிகுந்த எச்சரிக்கை வேண்டும். கபம் குறைந்து வரட்சியுடன் நெடுநாட்களாகப் பீடிக்கும் கடினமான இருமல்களுக்கும் மேற்சொல்லியபடி ஊமத்திலைச் சுருட்டைக் குடித்தால் நற்குண முண்டாகும். (2) வாதத்தினாலுண்டாகும் வீக்கங்கள், வலியநிகரித்த கட்டிகள், சர்மத்தைப் பற்றிய வீக்கங்கள் இவை முக்கியமாய் மேஹவியாதி ஸம்பந்தமாயிருந்தால், அவற்றிற்கு ஊமத்திலையை வலியிருக்குமிடத்தில் பொட்டலிகை யென்னும்போல்டீஸாகக் கட்டினால் உடனே குணமுண்டாகும்.*

* [ஊமத்திலைப் போட்டலிகை அல்லது போல்டீஸ்—இலைகளைப் பறித்தவுடனே நன்றாக அரைத்து, அதற்கு ஸமபாகம் அரிசிமாவையும் சேர்த்து, சிறிது தண்ணீர் விட்டுக் குழைத்து ஒரு துண்டுச சீலையில் விரல் கனத்துக்குத் தடவவும். அல்லது கொஞ்சம் இலையைச் சாராயத்தில் இட்டு வைத்து, அப்பால் அதை யெடுத்து வலியுள்ள இடத்தில் வைத்துச் சீலையால் சுத்திக் கட்டவும். ஒரு பலம் இலையை அரைப்படி கொதிக்கும் ஜலத்தில் சேர்த்து மூடி வைத்து, சிறிது நேரத்திற்கெல்லாம் ஒற்றிடம் கொடுக்கலாம்.]

நரம்புச் சிலந்தி வியாதியில் அக்கிருமி, கொப்புளம் வெடித்த பிறகு வெளியில் சிறிது நீண்டு வந்திருக்கையில் மேற் கூறிய போட்டலிகையைக் கட்டினால் அக்கிருமி சீக்கிரத்தில் வெளி வந்து விடும். (3)முகத்திலுண்டாகும் நரம்பைப்பற்றிய அநேகம் வீக்கங்களில் ஒரு பங்கு காய்ந்த இலையை நான்கு பங்கு பன்றிக்கொழுப்பிற் கலந்து வலியின்மேல் தடவினால் ஸௌக்கிய முண்டாகும்.

### திருநீற்றுப் பத்திரி.

இதற்கு ருத்ரஜடா என்றும் பெயர். வருஷந்தோறும் புதிது புதிதாக வளரக்கூடிய செடி; இதன் புஷ்பங்கள் வெளுப்பாயிருக்கும்; இதற்கு ஒருவித நல்ல மணமுண்டு; அவ்வாஸனைப் பச்சிலை உலர உலர விருத்தியாகும்.

(1) இம்மூலிகையின் முழு அம்சங்களும் உதர வாதஹரமாக (carminativee) உபயோகிக்கக் கூடியவையாம்;(2) இதன் விதைகள் சரீரத்திற்குக் கொழுமையை விருத்தி செய்வதுடன் மூத்திர விரேசகமாகவும் (diuretic) வேலை செய்யும். (3) மூக்கடைப்பு அல்லது ப்ரதிச்யாய ரோகத்தில், 100 பங்கு ஜலத்திற்கு 12 பங்கு இம்மூலிகையைச் சேர்த்துக் கஷாயம் செய்து வடிக்கட்டி, அக்கஷாயத்தை மூக்கில் நஸ்யமிட, மூக்கில் ஒருவிதமாய் உணர்ச்சியின்மையை யுண்டுபண்ணி, க்ருமிஹரமாக (antiseptic) வேலை செய்வதால், இவ்வியாதிக்குக் காரணமான கிருமிகளின் குஞ்சுகளை அழித்து, அதன் மூலமாய் வியாதி குறைந்து விடும், அல்லது நிவ்ருத்தியாய் விடும். இவ்விதம் செய்தால் பீநஸரோகமும் போய்விடுமென்று அறியப்படுகிறது. (4) சுமார் அரைப்பலம் திருநீற்றுப்பத்திரி விதையை ஒரு ஆழாக்கு ஜலத்தில் கொதிக்கவைத்து, அது கால் பங்காகக் காய்ந்த பிறகு வடிக்கட்டி, அதில் சிறிது சர்க்கரையைச் சேர்த்து தினந்தோறும் உட்கொண்டு வந்தால் மூத்திரமார்க்கத்திலும் ஜனனேந்த்ரியத்திலும் ஸம்பந்தித்த அநேகம் வியாதிகள் நிவ்ருத்தியாகும்.

209 R611-120 1261-2625

### இரத்தத்தை வெளிப்படாமல் தடுக்கும் ஒரு நூதன ஔஷதம்.

ஸ்விட்ஸர்லாண்டில் பெர்னே(Berne)என்னுமிடத்திலுள்ள ப்ரொபஸ்ஸர் தியோடர் கோசெர் என்பவரும், அவருடைய உதவி உத்தியோகஸ்தரான டாக்டர் எ. போன்ஸ் என்பவருமாக காயத்திலிருந்து இரத்தத்தை வெளிவராமல் உடனே நன்றாகத் தடுத்து விடுவதற்கேற்ற ஓர் ஔஷதத்தைத் தயார் செய்திருக்கின்றனர். அவ் வௌஷதத்திற்கு கொ-ஆ-குலென் (Coagulen) எனப் பெயரிட்டிருக்கின்றனர். இது ஒருவித சூர்ணமாயிருக்கிறது; விரணத்தின்மேல் அல்லது காயத்தின்மேல் உபயோகிக்கும்போது இது ஜலத்தில் கரைத்து உபயோகிக்கப்படுகிறது. இதைக் கண்டு பிடித்தவர்கள் யுத்தகளத்தில் கொடுமையாகக் காயங்கள் பட்டு வருந்தும் போர்வீரர்களுக்கு உபயோகிப்பதன் பொருட்டு ஜெர்மனிக்காரர்களுடையவும் ப்ரெஞ்சுக்காரர்களுடையவும் பிரதான யுத்த கார்யசாலைகளுக்கு வேண்டியவளவு இவ்வௌஷதத்தை உதவியிருக்கின்றனர். இவ்வௌஷதத்தை யுபயோகிப்பதால் ஆயிரக் கணக்கான உயிர்கள் காக்கப்படலாமென்று நம்பப்படுகிறது.—Practical Medicine.

### காடிக்காரத் திரவம்.

காடிக்காரத் திரவத்தை (100 பங்கு ஜலத்திற்கு 2-பங்கு காடிக்காரம் கரைந்திருக்க வேணும்) கக்கிருமலில் தொண்டைக்குள் தடவி வந்தால் நற்குணமுண்டாகு மென்று நிச்சயிக்கப்பட்டிருக்கிறது. சிறு குழந்தைகளுக்கு 100 க்கு 1-பங்கு காடிக்காரம் விதம் இத்திரவத்தில் சேர்ந்திருக்க வேண்டும்:- Medica-Standard.

---

## NOTES AND ITEMS OF INTEREST.

## பலவகைக் குறிப்புகள்.

### சஸ்திர சிகித்ஸைக்குரிய ஒரு நூதன யந்திரம்.

பாரிஸ் நகரத்திலிருந்து சஸ்திரசிகித்ஸைக்கு ஸம்பந்தமான ஸமயத்திற்கேற்ற விசேஷமானதோர் விஷயம் வெளிவந்தது. இதுவரையில் துணிகளைத் தைக்கும் தையல் யந்திரங்களை மட்டுமே நாம் பார்த்து வந்தோம். இப்பொழுது மனிதருடைய தேஹத்தில் காயம் முதலியவற்றால் கிழிந்துபோன சர்மம் முதலியவற்றைத் தைப்பதற்காக நிபுணரான ஒரு சஸ்திர சிகித்ஸகர் ஒரு கருவியை நிர்மித்திருக்கின்றனராம். காயம் முதலானவற்றில் அவயவங்களை அல்லது கிழிந்துபோன சர்மம் முதலியவற்றை ஒன்று சேர்த்துத் தைக்கவேண்டி வருமாகையால், அப்பொழுது அவற்றைக் கையால் தைப்பதைவிட இந்த யந்திரத்தின் உதவியால் தைத்துவிடுவது மிக எளிதாம். சஸ்திர சிகித்ஸகர்கள் தாராளமாய் இதை உபயோகிக்கக் கூடுமாயென்றறிய அத்தொழிலாளிகளில் முக்கியமானவர்களுக்கெல்லாம் இக்கருவி தற்காலம் அனுப்பப்பட்டு வருகிறது. ஒவ்வொரு விரணத்தையும் ஸாதாரணமாய் ஒரு செகண்டுக்குள் தைத்துவிட இது ஏற்ற கருவியாயிருக்கின்றதென்று நம்பப்படுகிறது.—Family Doctor.

### மலபந்தத்திற்கு ஸுலபமான பரிஹாரம்.

மலபந்தத்தைப் போக்க முதலில் தகுந்த உணவே பிரதானமானது. அதாவது எந்த உணவுப் பொருட்கள் தேஹத்தைப் போஷிப்பதுடன், மலத்தையும் தானே வெளிப்படுத்தக் கூடியவையோ அவை தகுந்த உணவுகள் எனப்படுகிறது. அவற்றுள் முக்கியமாய் அத்திப்பழம், ஆபில் என்னும் சீமை யிலந்தை, வாழைப்பழம், கமலாப்பழம், அன்னுச்சிப்பழம், மற்றும் இவைபோன்ற வேறு சில பழங்களும், வாற்கோதுமை, கோதுமை முதலியவற்றால் செய்த ரொட்டி முதலியவைகளும் மலபந்தத்தைத் தடுப்பதற்கு அல்லது போக்குவதற்கு ஏற்ற உணவுகளாக உபயோகிக்கத்தகுந்தவை. எவ்வுணவுகளையும் மிகப் பழகிப் போகாமல் நூதனமாயிருக்கையிலேயே உட்கொள்ள வேண்டுமென்பதையும் கவனத்தில் வைத்திருக்க வேண்டும். தினந்தோறும் சில காய்களையும் கிழங்குகளையும் கீரைகளையும் நன்றாகச் சமையல் செய்து ரொட்டி முதலிய பிரதான உணவுகளுடன் கலந்து உபயோகிப்பதும் அவசியமாம். இதற்குமேல் வேறு ஏதாவது சிகித்ஸை செய்தே ஆகவேண்டியிருந்தால் ஏதாவது ஔஷதங்களைக் கொடுத்து மலத்தைக் கழி

யச் செய்வதைவிட இளஞ்சூடான (70 முதல் 80 டிக்ரி உஷ்ணமுள்ள) ஜலத்தைக் கொண்டு வஸ்தி (Enema) செய்து குடலைச் சுத்தம் செய்வது சிறந்த முறை.—Good Health.

### வங்காளத்தாருடைய மிதக்கும் ஆஸ்பத்திரி.

சென்னையில் 'மதராஸ்' என்று பிணியாளிகளுக்கு அவசியமான ஸகல ஸௌகர்யங்களமைந்த ஓர் ஆஸ்பத்திரிக்கப்பல் ஏற்பட்டு யுத்தத்தில் காயம்பட்டு ஆபத்துக்குள்ளாகும் மனிதர்களுக்கு சிகித்ஸை முதலிய உதவிகளைச் செய்து வருவதுபோலவே, வங்காளத்திலும் மிகப் பெரிய ஆஸ்பத்ரிக் கப்பலொன்று அமைக்கப்பட்டிருக்கிறது. வங்காளத்து அம்புலென்ஸ் ஸங்கத்தாருடைய பெரு முயற்சினால் இவ்வாறு தண்ணீரில் மிதந்தோடும் ஆஸ்பத்ரி ஒன்று ஏற்பட்டது. 'மதராஸ்' ஆஸ்பத்ரிக் கப்பலுக்கு கர்னல் கிப்பர்ட் தலைமை வைத்திய உத்தியோகஸ்தராக நியமிக்கப்பட்டிருப்பதுபோல் வங்காளத்து ஆஸ்பத்ரிக் கப்பலுக்கு லெப்டினண்ட் கர்னல் A. N. நாட், I. M. S. என்பவர் தலைமை உத்தியோகஸ்தராக நியமிக்கப்பட்டிருக்கிறார். இந்திய உத்தியோகஸ்தர்களும் சிலருண்டு. பொது ஜனங்களிடமிருந்து வசூலாகும் பணத்தைக் கொண்டே பெரும்பாலும் இவ்வாஸ்பத்ரிக்கப்பலின் காரியங்கள் நடைபெறும். கமாண்டெண்ட் முதலிய சில உத்தியோகஸ்தர்களுக்குக் கவர்ன்மெண்டின் சம்பளம் உண்டு.

### கொய்னாவின் விற்பனை.

இப்பொழுது தபாலாபீஸுகள் மூலமாகவும், கிராம முனிஸீப் முதலியவர்களின் மூலமாகவும் ஜனங்களுக்குக் கொய்னாவைச் சிறிய பொட்டலங்களாகக் கட்டி சொற்ப விலைக்கு விற்பதற்குக் கவர்ன்மெண்டார் ஏற்பாடு செய்திருப்பது பெரும்பான்மையோருக்குத் தெரிந்த விஷயம். ஜனங்களுக்கு இச்சரக்கு இன்னும் எளிதில் கிடைக்கவேண்டுமென்பதைக் கருதி அம்மைகுத்தும் அதிகாரிகள், எலிமெண்டரி ஸ்கூல்களின் தலைமை உபாத்தியாயர்கள் இவர்கள் மூலமாகவும் இதைச் சிறிய பொட்டலங்களாக விற்பதற்குக் கவர்ன்மெண்டார் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். ஸிங்கோனா என்னும் ஜ்வரப்பட்டைப் பயிரின் ஸம்பந்தமாக ஏற்பட்டுள்ள டைரக்டர் அவர்கள் அந்தந்த ஜில்லா போர்டின் பிரெஸிடெண்டுகளையும், தாலூகா போர்ட் பிரெஸிடெண்டுகளையும், முனிஸிபல் சேர்மென்களையும் இவ்விஷயமாகச் செய்யவேண்டிய காரியங்களை அந்தந்த ஜில்லாக்களிலும், தாலூக்காக்களிலும், பட்டணங்களிலும், கிராமங்களிலும் செய்து முடிப்பதற்காகக் கேட்டுக்கொள்வார்கள்.

### போர்க்களத்தில் எலும்பொடிந்தவருக்குச் சிகித்ஸை.

டாக்டர் வாரோனுப், டாக்டர் அலெக்ஸிஸ் காரெல் என்னும் இரண்டு ரஷ்ய தேசத்து சஸ்திரசிகித்ஸகர்கள் நியூயார்க் நகரில் வைத்தியாராய்ச்சிக்கென்று ஏற்பட்டுள்ள ராக்பெல்லர் இன்ஸ்ட்யூட் என்னும் சாலையில், மனிதர்களுக்கு ஒடிந்துபோன எலும்புகளுக்குப் பதிலாக வேறு எலும்புகளை அவ்விடத்தில் ஒட்டவைத்து அச்சிகித்ஸை மிகப் பிரயோஜனமுண்டுபண்ணியதாகத் தெரியவருகிறது. ரஷ்யாவிலுள்ள போர்டியாக்ஸ் என்னும் பிரதேசத்திலிருக்கும் ஓர் ஆஸ்பத்ரியில் ஒரு போர்வீரனுக்கு இச்சிகித்ஸை செய்யப்பட்டது; அவனுக்கு நற்பயன் உண்டாயிற்று. யுத்தத்தில் அந்த மனிதனுக்கு ஒரு ரவை தோளிற் பாய்ந்து அங்கு ஒரு எலும்பைப் பிளந்துவிடவே, அவ்வெலும்பில் ஒரு சிறு துண்டு ஒடிந்து விலகிவிட்டது; பிறகு அத்துண்டை அவ்விடத்திலிருந்து விலக்கிவிட வேண்டியிருந்தது. அப்பால் ஒரு குரங்கின் தோளிலிருந்து ஒரு எலும்புச் சிராயைப் பிளந்து எடுத்து இம்மனிதனுடைய தோளெலும்பில் ஒட்டவைத்து அவனுக்கு முன்போலவே கையை ஸௌக்கியப்படுத்திவிட்டார்கள். இவ்விதம் செய்வதற்கு முன் அம்மனிதனுக்கு அடிபட்ட கை பார்ச்வவாயுவால் ஸ்வாதீனமற்றிருந்தது. பிறகு இவ்வாறு வேறொரு எலும்பை ஒட்டவைத்து விரணங்களை ஆற்றிவிடவே, கையில் பார்ச்வ வாயுவும் நிவ்ருத்தியாய்விட்டது. அவனுக்கு ஒட்டவைத்த எலும்பின் அளவு இரண்டு அங்குலமாம்.—Cleve land Medical ournal.

### கொசுக்களைப் போக்கும் சில செடிகள்.

ஆமணக்கஞ்செடி யிருக்குமிடத்தில் கொசுக்கள் அணுகுவதில்லையென்று மிஸ்டர் ஆல்பெர்ட் என்பவர் கூறுகிறார். ஓர் அறையில் ஒரு ஆமணக்கன் தண்டு அல்லது தழை முதலியது இருந்தாலும் கொசுக்களை அவ்விடம் வரவிடாமற் செய்யப் போதுமானது. அநேகம் பூச்சிகளும் இச்செடியினிடம் அணுகுவதில்லையாம். லாரிமூர் என்பவரின் கொள்கைப்படி திருநீற்றுப்பத்திரி யென்னும் மூலிகை யிருக்குமிடத்திற் கூட கொசு முதலிய ஜந்துக்கள் சேருவதில்லையென்று அறியப்படுகிறது.—Health and Happiness.

அவ்வித விஷகுணமுள்ள அட்டைகளைப் பிரயோகிப்பதால் சொரி, சிறங்குகள், அழற்சி, ஜ்வரம், தலைச்சுற்றல் என்னும் இவ்விகாரங்கள் ஸம்பவிக்கும். அவ்வித நிலைமையில் விஷஹரமாகவும் இரத்தபித்த விகாரங்களைப் பரிஹரிக்கத் தகுந்ததாகவும் உள்ள சிகித்ஸையைச் செய்ய வேண்டும். 37½.

விஷ குணமுமுள்ள அட்டைகளாலுண்டாகும் நிங்குகளும், பரிஹாரமும்.

சுத்தமான ஜலத்தில் உற்பத்தியான அட்டைகளோவென்றால் விஷத்தன்மை நீங்கியவைகளாய், பாசிபோல் ஒருவாறு கறுநிறமுள்ளவைகளாகவும், திரண்டுருண்டு நீலமான மேல்வரிகளுடன் கூடியவையாகவும், ஒருவாறு மங்கல் நிறமான பிருஷ்டபாக முடையவையாகவும், வயிற்றில் மட்டும் சிறிதளவு பொன்னிறமாகவும், மெலிந்த தேஹமுள்ளவையாகவும் இருக்கும். 38, 38½.

உபயோகிக்கக்கூடிய சுத்தமான அட்டைகள்.

சுத்தமான அவ்வித அட்டைகளையும் அவை குடித்த இரத்தத்தை நன்றுகக் கக்கச் செய்யாமல் விடுவதாலும், அடிக்கடியும் அவற்றையே இரத்த முறிஞ்சுவதற்குப் பிரயோகிப்பதாலும் ஜலத்தில் விடும்போது அவை கஷ்டப்பட்டு உறங்கி அசைபக்கூடாமலிருக்கும்; அத்தகைய ஜந்துக்கள் இரத்தத்தினுல் மதமேறிவிட்டதாக அறிந்து அவற்றை உபயோகிக்காமல் பரிஹரிக்க வேண்டும். 39½.

இரத்த மதங்கொண்ட அட்டைகள்.

எவ்வித தோஷமுமில்லாத மற்ற அட்டைகளை, மஞ்சள் அரைத்துக் கரைத்த ஜலத்தில் மிதக்கவிடவும்; அல்லது காடியிலாவது, மோரிலாவது விடவேண்டும்; மறுபடியும் எடுத்து சுத்த ஜலத்தில்விட்டு அவற்றிற்குத் தேறுதலுண்டு பண்ணவும். பிறகு அட்டைவிடவேண்டிய இடத்தில் செய்யைத் தடவி, சஸ்திரத்தினுல் கீண்டு இரத்தத்தை ஒரு சிறிது கசியச்செய்து, அட்டைகளை அவ்விடத்தில் கடிக்கவிடவும். அவை தலையை நீட்டிக்கொண்டு இரத்தத்தை உறிஞ்சும்; அப்பொழுது மிருதுவான வஸ்திரத்தினுல் அவற்றை மறைத்துவைக்கவும்.[1] 40—41½.

சுத்தமான அட்டைகளைப் பிரயோகிக்கும் வகை.

அன்னப்பறவை ஜலங்கலந்த பாலிலிருந்து பாலைமட்டும் பிரித்துக் குடிப்பதுபோல, தேஹத்தில் அசுத்த ரத்தத்தோடு கூடவே சுத்த ரத்தமும் கலந்திருந்த போதிலும், அதிலிருந்து அட்டை அசுத்தமான இரத்தத்தை மாத்திரம் முதலில் பிரித்துக் குடித்துவிடும். 42½.

சுத்த ரத்தத்தை விட்டு அசுத்தத்தைமாத்திரம் அட்டைக் கிரஹிப்பது.

கடித்த இடத்தில் குத்தல் வலியாவது, தினவாவது உண்டானுல், உடனே அட்டையை இழுத்துவிட்டு, அதன் முகத்தில் சிறிது உப்பையும் எண்ணெயையும் தடவி, மிகவும் மிருதுவான அரிசிமாவால் ரூக்ஷமாகவும் செய்து இரத்தத்தைக் கக்கச் செய்யவும் வேண்டும். 43½.

அட்டையை விடுவிக்கவேண்டிய ஸமயமும் அதைக் கக்கச் செய்வதும்.

அவ்வாறு ஒரு முறை இரத்தங்குடித்து விடுவித்த அட்டைகளுக்கு இரத்த வெறி உண்டாகாமல் இருப்பதற்காக, அவற்றைப்பிடித்து மறுபடியும் ஏழு நாட்கள் வரையில் இரத்தம் உறிஞ்சுவதற்கு விடக்கூடாது. 44.

ஒருமுறை இரத்தம் உறிஞ்ச அட்டையை மீண்டும் உபயோகிப்பது.

1. இரத்தத்தைக் குடிக்கும்போது பிணியாளி முதலியவர் மனதில் அச்சங்கொள்வர் எனறு அட்டையை மூடவேண்டும் எனப்படுகிறது.

ஸம்யக் வாந்த-அதிவாந்த - துர்வாந்தமான அட்டைகளின் இலக்ஷணங்கள்.[1]

அட்டைகள் குடித்த துஷ்ட ரத்தத்தை நன்றாகக் கக்கியபிறகு, அவற்றிக்கு மீண்டும் முன்மாதிரியாகவே சுறுசுறுப்பும், பலமும் உண்டாகும். மிதமிஞ்சி இரத்தத்தைக் கக்கினால் அதிக வாட்டமுண்டாகும், அல்லது அவை இறந்துவிடும். வேண்டியபவளவு துஷ்ட இரத்தத்தைக் கக்காவிட்டால் அட்டைகள் திமிர்த்துப்போய் மதங்கொண்டும் இருக்கும். 45.

அட்டைகளைக் காப்பாற்றும் வகை.

அட்டைகளின் வாயிலிருந்து ஊறும் சொள்ளு நீரும், மற்றும் ஏதேனும் வஸ்துக்களும் ஜலத்தில் விழுந்து அழுகிப் பதன்கெட்டுப்போய் அவற்றிற்குக் கெடுதி யுண்டுபண்ணுமலிருப்பதன் பொருட்டு, அந்த அட்டைகளை, மண்ணும் தண்ணீரும் நிரம்பிய வெவ்வேறு தொட்டியில் அப்போதைக்கப்போது மாற்றி மாற்றி விட்டுவரவேண்டும்; இல்லையேல், அவ்வாறு பதன்கெட்ட ஜலத்தின் ஸம்பந்தத்தினால் அட்டைகள் விஷப்பற்றுள்ளவைகளாய் விடும். 46.

அட்டைகளை விட்டும் இரத்தம் அசுத்தமாயிருந்தால் செய்யவேண்டிய உபசாரம்.

இரத்தம் இன்னும் அசுத்தமாயிருப்பதாகத் தெரியவந்தால், மஞ்சள், வெல்லம், தேன் இவற்றைக் கடித்த விடத்தில் நன்றாகத் தேய்த்து, அவ்விடத்திலிருந்தும் இரத்தம் நன்கு வெளிப்படும்படி செய்யவும். அப்பால், "சததௌத க்ருதம்" என்னும் நெய்யைக்கொண்டு[1] ஒற்றடம் கொடுத்து, சீதளமான களிம்புகளையும் அக்கடிகளின்மேல் பூசலாம். 47.

அசுத்த ரத்தம் வெளியானதும் உண்டாகும் குணங்கள்.

அசுத்தமான இரத்தம் வெளிப்படுத்தப்பட்டதும், உடனே வியாதியும் நிவ்ருத்தியாகும், உடம்பிலுண்டான வலி முதலியவைகளும் சாந்தமாய்விடும். 47½.

ஸ்த்தானம்விட்டுப் பெயர்ந்த இரத்தத்தை நன்கு வெளிப்படுத்தல்.

அசுத்தமான இரத்தம் அதன் ஸ்த்தானத்திலிருந்து கிளப்பப்பட்டு, விரணத்தின் முகத்தில் வந்து நின்றுவிடுமானால், அப்பொழுது அந்த இரத்தம் பழகிப்போய் அம்லமாக ஆய்விடும். அவ்வாறு நேரிடாமலிருப்பதன்பொருட்டு அந்த இரத்தத்தை மறுபடியும் வடியச்செய்யவேண்டும். 48½.

அலாபு-கடிகைகளை உபயோகிக்கக்கூடாத நிலைமைகள்.

சுரைக் குடுக்கைகளையாவது, கடிகைகள் என்னும் குடுவைகளையாவது, இரத்தம் பித்தத்தினால் துஷிக்கப்பட்டிருக்கும்போது இரத்தத்தை வெளிப்படுத்துவதற்காக உபயோகிக்கக்கூடாது; அக்கருவிகளில் அக்னியைச் சேர்த்து உபயோகிக்க வேண்டியிருப்பதால், அவை இந்த நிலைமையில் தகாதவைகளாம்.[2] ஆனால் இரத்

---

1. ஸம்யக் வாந்தம்—நன்றாக வமநம் செய்விக்கப்பட்டது. அதிவாந்தம்—அதிகமாக (மிதமிஞ்சிய) வமநம் செய்விக்கப்பட்டது; துர்வாந்தம்—போதுமாறு வமநம் செய்விக்கப்படாதது.

1. நூறுதடவை ஏதேனும் கஷாய வகைகளில் கடைந்தெடுத்த நெய்.

2. பித்தத்தை உஷ்ணவீர்யமான பதார்த்தங்கள் அல்லது சிகித்ஸைகள் விருத்திசெய்யுமாகையால், அக்னி ஸம்பந்தமுள்ள அலாபு-கடிகைகள் தகாதவையென்று கூறப்பட்டது.

தம் கபத்தினாலாவது வாயுவினாலாவது கோளாறடைந்திருக்கும் நிலைமையில் அக்கருவிகளை உபயோகிக்கலாம். 49½.

ச்ருங்கத்தினால் இரத்தம் வெளிப்படுத்தக்கூடாத நிலைமைகள்.

கபத்தினால் கோளாறடைந்த இரத்தம் இறுகிப்போகுமாதலால், அதை ச்ருங்கம் என்னும் பீச்சாங்குழலால் வெளிப்படுத்தக் கூடாது. ஆனால் வாத-பித்தங்களால் கோளாறடைந்துள்ள இரத்தத்தை ச்ருங்கத்தினால்[1] வெளிப்படுத்தலாம். 50½.

துஷ்ட இரத்தத்தை வெளிப்படுத்தும் பலவித முறைகள்.

இரக்த மோக்ஷணம் செய்யவேண்டிய அவயவத்திற்குச் சிறிது மேலே கயிற்றாலாவது வஸ்திரத்தினாலாவது மேடுபள்ளமில்லாமல் கெட்டியாகக் கட்டி, இரத்தம் வெளிவருமாறு கிண்டுவிடவும்; ஸ்நாயுக்கள்,[2] ஸந்திகள், எலும்புகள், மர்மஸ்த்தாநங்கள் இவற்றில் சஸ்திரம் படக் கூடாது. கொந்தும் வாட்டமானது மேலிருந்து கீழ்முகமாகச் சாய்ந்ததுபோலவும், முதலில் கீழே ஆரம்பித்து கிரமமாக மேலேயும் சஸ்திரத்தினால் கொந்திக்கொண்டு போகவேண்டும்; கொந்துதல் அதிக ஆழமாகவாவது, ஒன்றுக்கொன்று வெகு நெருக்கமாகவாவது, நீளத்தில் குறுக்காகவாவது விழக்கூடாது; மேலும் ஒருமுறை கொந்திய இடத்திலேயே மற்றொருமுறை கொந்துவதும் தகாது. ஒரே இடத்தில் தங்கியுள்ள துஷ்ட இரத்தத்தைக் கொந்தியெடுத்துவிடலாம்; கட்டிப்போய் அல்லது தோய்ந்துள்ள இரத்தத்தை அட்டைகளைக் கொண்டு வெளிப்படுத்தலாம்; உணர்ச்சியற்ற அவயவத்திலுள்ள இரத்தத்தைப் பீச்சாங்குழலால் வெளிப்படுத்திவிடலாம்; உடலெங்கும் வியாபித்துள்ள துஷ்ட இரத்தத்தை ஸிராவ்யதைகளால்[1] வெளிப்படுத்தலாம்; ஓரிடத்தில் அதிகமாகச் சேர்ந்துள்ள இரத்தத்தையும் கொந்தியெடுத்துவிடலாம்; ஆழமான ஸ்த்தலங்களிலுள்ள இரத்தத்தை அட்டைகளால் வெளியிடலாம்; சர்மத்தை ஆச்ரயித்துள்ள இரத்தத்தை ச்ருங்கத்தினாலாவது, குடுவையினாலாவது, சுரைக்குடுக்கையினாலாவது வெளிப்படுத்தலாம்; அகில சரீரத்திலும் வியாபித்துள்ள துஷ்ட இரத்தத்தை வெளிப்படுத்துவதற்குமட்டும் ஸிராவ்யதை ஒன்றே சிறந்த சிகித்ஸையாகும். அல்லது வாத-பித்த கப ஸ்த்தாநங்களிலுள்ள துஷ்ட இரத்தத்தை முறையே ச்ருங்கத்தினாலும், அட்டைகளாலும், சுரைக்குடுக்கைகளாலும் வெளிப்படுத்தவுங்கூடும். 51-55.

இரத்த ஸ்ராவத்தில் உண்டாகும் உபத்திரவத்திற்குப் பரிஹாரம்.

எவனுடைய தேஹத்திலிருந்து இரத்தம் வெளிப்படுத்தப்பட்டதோ, அவனுக்குக் குளிர்ச்சியான பலவித பூச்சுகளால் வாயு பிரகோபம் அடையும்; அதனால் இரத்தம் வெளிப்படுத்தப்பட்டவிடத்தில் குத்தலும், தினவும், வீக்கமும் ஸம்பவிக்கும். அவ்வாறு கோளாறு ஸம்பவிக்கும் இடத்தை உஷ்ணமாகச்செய்து நெய்யால் ஒற்றிடம் கொடுத்து மெதுவாக நனைக்கவேண்டும். 56.


---

1. ச்ருங்கம்—184-வது பக்கம் டிப்பணியைப் பார்க்க.


2. ஸ்நாயு—190-வது பக்கம் டிப்பணியைப் பார்க்க.

1. ஸிராவ்யதை—காரிரத்தக்குழாய்களைக் கொந்தி இரத்தம் வெளிப்படுத்துதல்.

## இருபத்தைந்தாவது அத்தியாயத்திற் கூறப்பட்டுள்ள யந்திரங்களின் உருவங்களைக்காட்டும் படங்கள்.




1. ஸ்வஸ்திக யந்திரம் அல்லது விஹ்மாஸ் யந்திரம். (181-வது பக்கம்.)




2. ஸந்தம்ச யந்திரம்—பெரிது. (181-வது பக்கம்.)



3. ஸந்தம்ச யந்திரம்—சிறியது. (181-வது பக்கம்)




4. தாள யந்திரங்கள்—ஒற்றைத்தகடு ஒன்று இரட்டைத்தகடு ஒன்று. (181-வது பக்கம்.)



5. நாடீ யந்திரங்கள். (181-வது பக்கம்)



6. சல்ய நிர்க்காத நாடீ யந்திரம். (182-வது பக்கம்)




7. அர்சோயந்திரங்கள்—சிறியதும் பெரிதும் ஆக இரண்டு. (182-வது பக்கம்)



8. சமீயந்திரம். (182-வது பக்கம்,



9. அங்குலித்ராணக யந்திரம். (183-வது பக்கம்)




10. யோனிவ்ரணேக்ஷண யந்திரம். (183-வது பக்கம்)



11. கர்ப்ப சங்கு யந்திரம். (185-வது பக்கம்)




12. ஸர்ப்பபாண யந்திரம் என்னும் சலாகை. (185-வது பக்கம்)


13. சரபுங்க முகசலாகைகள். (185-வது பக்கம்)


14. படிச யந்திரம். (185-வது பக்கம்)


15. அச்மர்யாஹரண சலாகை. (185-வது பக்கம்)


16. ஸாதாரண சலாகை. (185-வது பக்கம்)



17. ஸர்ப்பபண யந்திரங்கள் என்னும் சங்கு யந்திரங்கள். (185-வது பக்கம்)



18. மார்ஜந சலாகை. (186-வது பக்கம்)



19. ஜலோதர யந்திரம் வயிற்றிலிருந்து (மஹோதரத்தை யுண்டுபண்ணும்) நீரை வெளியில் வடியச்செய்யும் யந்திரம்.



20. வஸ்தியந்திரம். (186-வது பக்கம்)


21. ச்ருங்க யந்திரம்.


22. ருக்ஷமுக யந்திரம் (கரடி வாயைப்போன்ற பற்களமைந்த யந்திரம்.)


23. கங்காஸ்ய யந்திரம் (கழுகின் வாயைப்போன்ற முகமுடைய யந்திரம்.)


24. காகாஸ்ய யந்திரம் (காக்கையின் மூக்கு போன்ற முகமுடைய யந்திரம்.)


25. தரக்ஷுமுக யந்திரம் (சிவங்கி முகம்போன்ற யந்திரம்.)

# இருபத்தேழாவது அத்தியாயம்.

இனி ஸிராவ்யதவிதி[1] என்னும் விஷயத்தை விவரிக்கும் அத்தியாயம் கூறப்படுகிறது :—

சுத்த இரத்தத்தின் இலக்ஷணங்கள்.

சுத்தமாக இயற்கை நிலைமையிலுள்ள இரத்தம் சிறிது மதுரமும் சிறிது இலவணரஸமும் கலந்த சுவையுள்ளதாகவும், சீதமுமில்லாமல் உஷ்ணமுமில்லாமல் நடுத்தரமாகவும், தோய்ந்துபோகாமல் திரவமாகவும் இருக்கும் ; செந்தாமரைப்பூ, பட்டுப்பூச்சி, செம்பொன், முயல் ரத்தம் இவற்றைப்போல் சிவந்த நிறமுள்ளது. இவ்வித இரத்தத்தினாலேயே தேஹம் நிலைத்திருக்கின்றது. 1½.

இரத்தம் கெட்டுப்போவதற்கான முகாந்தரங்கள்.

அவ்வித சுத்தமான இரத்தம் பித்தகபங்களைக் கோளாறடையச்செய்யும் வஸ்துக்களால் அல்லது அவ்வித விஷயங்களால் பெரும்பாலும் தூஷிக்கப்படுகின்றது. 2.

தூஷிக்கப்பட்ட இரத்தத்தினால் உண்டாகும் வியாதிகள்.

அவ்வாறு தூஷிக்கப்பட்ட இரத்தமானது விஸர்ப்பம், வித்ரதி யென்னும் சீழ்க்கட்டி, மண்ணீரலின் வீக்கம், குன்மம், அக்னிமாந்தியம், ஜ்வரம், முகரோகம், நேத்திரரோகம், சிரோரோகம், வெறி, நாவறட்சி, வாயில் ஒருவகையான உப்புநீர் சுரத்தல், குஷ்டம், வாதரக்தம், இரத்தபித்தம், கார்ப்பும் புளிப்புமாக ஏப்பம் விடுதல், பிரமம் என்னும் தலைச்சுற்றல் என்கிற வெவ்வேறு விதமான இவ்வியாதிகளை ஸாதாரணமாய் உண்டுபண்ணுவது வழக்கம். மேலும் சீதளசிகித்ஸை, உஷ்ணசிகித்ஸை, ஸ்நிக்த்த சிகித்ஸை, ரூக்ஷசிகித்ஸை இவை முதலியவற்றை முறைதவறாமல் செய்தும், நன்கு ஸாத்தியமான நிலைமையிலிருப்பதாகத் தெரிந்தும் எவை நிவ்ருத்தியாவதில்லையோ அந்த வியாதிகளும் இரத்தம் பிரகோபித்ததால் ஸம்பவித்தவையாகும். 3-4½.

விருத்தியான இரத்தத்தைக் குறைக்க ஸிராவ்யதை.

முற்குறிப்பிட்ட வியாதிகளில் இரத்தம் பிரகோபித்திருக்குமாகையால், அவ்வாறு விருத்தியடைந்துள்ள இரத்தத்தை வெளியில் வடியச்செய்வதற்கு ஸிரையைக் கீறிவிடவேண்டும். 5.

ஸிராவ்யதைக்குத் தகாதவர்களும் தகாத நிலைமைகளும்.

பதினாறு வயதுக்குக் குறைந்த வயதினர், எழுபது வயதுக்கு மேற்பட்டவர், இரத்தமோக்ஷணம் ஏற்கனவே செய்துகொண்டவர், ஸ்நேஹ சிகித்ஸையை முன்னதாகச் செய்துகொள்ளாதவர், அவ்விதமே ஸ்வேத சிகித்ஸை செய்துகொள்ளாதவர், மிதமிஞ்சி ஸ்வேத சிகித்ஸை செய்துகொண்டவர், வாதரோகமுள்ளவர், கர்ப்பிணிகள், பிரஸவித்தவர்கள், அஜீர்ணரோகிகள், இரத்தபித்தரோகிகள், சுவாஸகாஸ ரோகிகள், அதிஸாரம்-உதரரோகம்-சர்த்தியென்னும் வாந்தி - பாண்டு - ஸர்வ தேஹமும் வியாபித்த சோகை இவ்வியாதிகளால் பீடிக்கப்படுபவர் இவர்கள் யாவருக்கும் ஸிராவ்யதை செய்யக்கூடாது. மேலும் ஸ்நேஹபாநம் செய்திருக்கையிலும், அவ்விதமே பஞ்சகர்மங்கள் பிரயோகிக்கப்பட்

1. ஸிராவ்யதவிதி—ஸிரை என்றால், காரிரத்தக் குழாய் ; அவ்வித இரத்தக்குழாய்களைக் கீறி இரத்தம் வெளிப்படுத்தும் முறைகளைக் கூறும் அத்தியாயம் எனப் பொருள்.

டிருக்கையிலும் ஸிராவ்யதை செய்வது பிசகு. 6-7½.

ஸிராவ்யதை செய்வதற்கு முன் கவனிக்கவேண்டிய விஷயங்கள்.

ஸிராவ்யதை செய்யவேண்டிய விடத்தைத் தகுந்தவாறு கட்டாமல் ஸிராவ்யதை செய்யக்கூடாது; குறுக்குவாட்டிலும் செய்யக்கூடாது; ஸிரை யென்னும் இரத்தக்குழாய் கையில் அகப்படும்படி பருத்துக்கொள்ளாதிருக்கையிலும் அதைக் கீறக்கூடாது. அதிக குளிரும் அதிக சூடுமுள்ள காலங்களிலும், விசேஷமாகக் காற்று வீசும்போதும், மேகங்களால் ஆகாயம் மூடப்பட்டிருக்கையிலும் அபாயகரமான வியாதியாயிருந்தாலேயொழிய ஸிராவ்யதை செய்யக்கூடாது. 8, 8½.

வியாதிகளுக்கு ஏற்றவாறு ஸிராவ்யதை செய்வதற்கான ஸ்த்தானங்கள்.

சிரஸ்ஸைப்பற்றிய வியாதிகளிலும், நேத்திர ரோகங்களிலும் நெற்றியிலுள்ள ஸிரையையாவது, கன்னத்து ஸிரையையாவது, நாசிக்கு அருகிலுள்ள ஸிரையையாவது கீண்டுவிடவேண்டும். செவியிலுண்டாகும் வியாதிகளில் காதிலுள்ள ஸிரையையும், நாசியிலுண்டாகும் வியாதிகளில் மூக்கின் முனையிலுள்ள ஸிரையையும், பீநஸத்தில் நாசியிலுள்ள அல்லது நெற்றியிலுள்ள ஸிரையையும், வாயினுள் உண்டாகும் வியாதிகளில் நாக்கு-உதடு-முகவாய்க்கட்டை-தவடை இவற்றிலுள்ள ஸிரைகளில் ஏதேனும் ஒன்றையும் கீண்டு இரத்தத்தை வடியச்செய்யவேண்டும். தோளுக்கு மேற்பட்டுள்ள கிரந்திகள் கோளாறடைந்தால், அவற்றில் கழுத்திலும், காதிலும், கன்னத்திலும், சிரஸிலும் உள்ள ஸிரைகளைக் கீண்டு இரத்தத்தை வெளிப்படுத்தவேண்டும். உன்மாதம் என்னும் பைத்தியரோகத்தில் மார்பிலும் கடைக்கண்ணிலும் நெற்றியிலுமுள்ள ஸிரைகளைக் கீறவேண்டும். அபஸ்மாரரோகத்தில் ஹநுஸந்தி யென்னும் முகவாய்க்கட்டையின் பூட்டிலாவது, முகவாய்க்கட்டையில் வேறெந்த விடத்திலாவது ஸிராவ்யதை செய்யவேண்டும்; புருவங்களுக்கு இடையில் ஓடும் ஸிரையையாவது கீண்டு இரத்தத்தை வடியச் செய்யலாம். வித்ரதி யென்னும் சீழ்க்கட்டியிலும், பக்கச்சூலையிலும் தேஹத்தின் வலது இடது பாரிசங்களிலும், அக்குளிலும் மார்பின் மத்தியிலுள்ளதுமான ஸிரைகளைக் கீண்டுவிடவேண்டும். த்ருதீயகம் என்னும் ஒருநாள் விட்டு மூன்றாவது நாள் உண்டாகும் முறைக் காய்ச்சலில் தோள்களுக்கு நடுவில் இரத்தஸ்ராவம் செய்யவேண்டும். இடையில் இரண்டு நாட்கள் விட்டு நான்காவது நாள் உண்டாகும் சாதுர்த்திகம் என்கிற ஜ்வரத்தில் தோளுக்குக் கீழே இரத்தத்தை வெளிப்படுத்தலாம். சீதபேதியிலும், வயிற்றுவலியிலும் இடுப்பின் பின்புறத்தில் இரண்டு அங்குலத்தில் இரத்தஸ்ராவம் செய்விக்கலாம். சுக்ரமோஹம் என்கிற வெள்ளை நோயிலும், ஆண்குறியிலுண்டாகும் வியாதிகளிலும் ஆண்குறியின்மேலேயே இரத்தஸ்ராவம் செய்யலாம். கலகண்டம், கண்டமாலை இவற்றில் தொடையிலுள்ள ஸிரையைக் கீண்டு இரத்தத்தை வெளிப்படுத்தவேண்டும். க்ருத்ரஸீ என்னும் காலிலுண்டாகும் வாதரோகத்தில்[1] முழங்காலுக்கு நாலு அங்குலம் கீழேயாவது மேலேயாவது இரத்தஸ்ராவம் செய்வது முறை. அபசியென்கிற வியாதியில்[2] இந்திரவஸ்தி யென்னும் காலிலுள்ள மர்மஸ்தானத்திற்கு இரண்டு அங்குலம் கீழே இரத்தஸ்ராவம் செய்யவேண்டும். தொடையில் நோயுண்டானால் கணுக்காலுக்கு நாலு அங்

1. க்ருத்ரஸீ—காலில் முழங்காலுக்கு மேல் தொடையிலுண்டாகும் வியாதி.

2. அபசீ—ஒன்றன்பின் ஒன்றாக உண்டாகும் கிரந்திகள் போன்ற கட்டிகள்.

குலம் மேலே இரத்தமோக்ஷணம் செய்ய வேண்டும். கிரோஷ்டுகசிர்ஷம் என்னும் முழங்காலிலுண்டாகும் வாதவியாதியிலும்[1] அவ்வாறே கணுக்காலுக்கு மேலே இரத்த ஸ்ராவம் செய்யவேண்டும். பாததாஹம் என்னும் உள்ளங்காலிலுண்டாகும் எரிச்சலிலும், குடம்,[2] ஹர்ஷம்[3] என்கிற வாதரோகங்களிலும், பாதவெடிப்பிலும், வாதகண்டகத்திலும்,[4] சிப்பத்திலும்[5] க்ஷிப்ரமர்மத்திற்கு இரண்டு அங்குலம் மேலே இரத்தத்தை வெளிப்படுத்தவேண்டும். விச்வாசி யென்னும் கையிலுண்டாகும் வாதவியாதியில் [6] கிருத்ரஸீ யென்னும் வியாதிக்குச் செய்ததுபோலவே இரத்தத்தை வெளிப்படுத்தவேண்டும். 9-16¼.

குறிப்பிட்ட ஸிரை புலப்படாவிட்டால் இரத்த மோக்ஷணம் செய்யும் விதி.

சாஸ்திரத்தில் எந்த ஸிரையைக்[7] கீறி இரத்தத்தை வெளிப்படுத்த வேண்டுமென்று கூறப்பட்டிருக்கிறதோ அந்த ஸிரை புலப்படாவிட்டால், மர்மஸ்தானமல்லாததும், குறிப்பிட்ட இடத்திற்கு ஸமீபத்தில் இருப்பதுமான வேறொரு ஸிரையைக் கீறி இரத்தத்தை வெளிப்படுத்தலாம். 17, 17½.

ஸிராவ்யதை செய்வதற்கு முன் அவசியமான ஏற்பாடு.

அப்பால் பிணியாளி தனது தேஹத்தை ஸ்நிக்த்தமாகச் செய்துகொள்ளவேண்டும்; முன்னதாகவே ஸிராவ்யதைக்கு வேண்டிய எல்லா உபகரணங்களையும் ஸங்கத்தம் செய்து வைத்துக்கொள்ளவேண்டும். இரத்த மோக்ஷணம் செய்துகொள்பவன் பலசாலியாயிருப்பதும் அவசியம். அப்பிணியாளிக்கு முன்னதாய் ஸ்வஸ்திவாசநம் முதலிய மங்களச்சடங்குகளையும் செய்துவைத்து, ஸ்நிக்த்தமான மாம்ஸரஸமென்ன அன்னமென்ன இவற்றையும் புஜிக்கச்செய்யவும். பிறகு அக்னிதாபத்தினாலும் வெயிலாலும் வியர்வை யுண்டாகும்படி ஸ்வேத சிகித்ஸையைச் செய்து, முழங்காலளவு உயரமான ஆஸநத்தில் உட்காரச்செய்யவும். மிருதுவான பட்டு வஸ்திரத்தினால் அப்பிணியாளியின் கேசமுனையைக் கட்டி, முழங்காலின் மேல் தனது முழங்கையை வைத்துக்கொள்ளச்செய்து, வஸ்திரமடங்கிய இரண்டு முஷ்டிகளாலும் மந்யா என்னும் நாடிகளைக்[1] கெட்டியாக அழுத்திப் பிடிக்கச் சொல்லவேண்டும். அந்த ஸமயத்தில் பற்களைக் கடிப்பதும், வளியில் இரும்புவதும், கண்டத்தைப் பருக்கச் செய்வதும் அநுகூலமாகும். தோள்களின் மேல் வஸ்திரத்தைவிட்டு, அதைப் பின்புறமாக இழுத்து, இடதுகையின் ஆள்காட்டி விரலால் இடையில் அதைக் கௌவச்செய்து பின்புறத்தில் கட்டிவிடவேண்டும். வாயின் உட்புறத்திலுள்ள ஸிரைகளைத்தவிர மற்ற வெளிப்புறத்து ஸிரைகளைக் கட்டுவதற்கான முறை இங்ஙனம் கூறப்பட்டதாகும்.[2] 18-22.

1. கிரோஷ்டுக சிர்ஷம்—முழங்காலிலுண்டாகும் வீக்கம்; இது தமிழில் நரித்தலைவாயு என்றும் கூறப்படும்.

2. குடம்—முடமாகப்போதல்.

3. ஹர்ஷம்—அல்லது பாதஹர்ஷம்; கால் மரத்துப்போய் உண்டாகும் சிலிர்க்கை.

4. வாதகண்டகம்—குதிகால்களை ஊன்றி நடக்க முடியாமலுண்டாகும் நோய்.

5. சிப்பம்—இதை நகச்சுற்று என்பார்கள்.

6. விச்வாசீ—தோளில் ஆரம்பித்து முழங்கையிலும் அதற்குக் கீழேயும் பரவும் ஒருவித வலியுடன் கூடிய வாதநோய்.

7. ஸிரை—காரிரத்தக்குழாய்.

1. மந்யா—கழுத்தின் பின்புறத்தில் காதுக்குக் கீழே இருபுறங்களிலும் ஓடும் ஸிரைகள். இவ்விடத்தைக் கெட்டியாகப் பிடித்தால், இந்த ஸிரைகளில் இரத்த வோட்டம் தடுக்கப்பட்டு அவை பருத்துக் காணும்.

2. ஸிரைகளை உத்தாபநம் (பருத்து எழும்பச்) செய்வதற்காக இவ்வாறு பந்தநம் அவசியமென்று கூறப்பட்டது.

சிக்ருத்வகாதி ப்ரதேஹம். முருங்கவேரின் பட்டை, வெண்ணொச்சியிலே, ஆமணக்கன்வேர், யவதானியம், கோதுமை, பயறு இவற்றை அரைத்துக் கொதிக்கவைத்து இளஞ்சூடாக வாத தோஷத்தினுலுண்டாகும் வித்ரதியில் லேபநம் செய்யலாம். 93.

லாஜாதி லேபமும் பயஸ்யாதி லேபமும். நெற்பொரி, அதிமதுரம், சர்க்கரை இவற்றை நெய்விட்டு அரைத்து, பித்ததோஷத்தினுலுண்டாகும் வித்ரதியில் லேபநம் செய்யலாம்; அல்லது க்ஷீரகாகோலி, வெட்டிவேர், வெண்சந்தனம் இவற்றையாவது லேபநம் செய்யலாம். 94.

இஷ்டகாதி ப்ரதேஹம். செங்கற்பொடி, மணல், இருப்புச் சட்டத்தின் தூள், பசுஞ்சாணம் இவற்றைக் கோமயம் சேர்த்து ஆட்டிக் கொதிக்கவைத்து கபவித்ரதியில் சிறிது சூடாயிருக்கையிலேயே ப்ரதேஹமாக உபயோகிக்கலாம். 95.

இரண்டாம் ரக்த்த சந்தநாதி லேபம். செஞ்சந்தனப், மஞ்ஜிஷ்டி, மஞ்சள், அதிமதுரம், காவிக்கல் இவற்றைப் பொடிசெய்து பாலில் குழைத்து இரக்த வித்ரதியிலும், ஆகந்துகமென்னும் வெளிக் காரணங்களாலுண்டாகும் வித்ரதியிலும் லேபநம் செய்யலாம். 96.

நிசுளாதி ப்ரதேஹம். நீர்க்கடம்பு, முருங்கவிதை, தசமூலம்[1] இவற்றைக் கல்கம்போல் அரைத்து பக்குவம் செய்து இளஞ்சூடாயிருக்கையில் வாத தோஷத்தினுலுண்டாகும் கட்டிகளின்மேல் ப்ரதேஹம் செய்யலாம். 97.

தேவதார்வாதி ப்ரதேஹம். தேவதாரு, பேய்த்தும்மட்டிக்காய் இவ்விரண்டையும் கல்கமாக அரைத்து உஷ்ணமாக்கி, கபதோஷத்தினுலுண்டாகும் கட்டிகளில் ப்ரதேஹம் செய்யலாம். $97\frac{1}{2}$.

ஸர்ஷபாதி லேபம். கடுகு, வேப்பிலே, சேராங்கொட்டை இவற்றை எரித்து ஆட்டு மூத்திரத்தில் ஆட்டி அபசீ என்னும் விரணத்தின்மேல்[2] லேபநமாக உபயோகிக்கலாம். $98\frac{1}{2}$.

இரண்டாம் ஸர்ஷபாதி லேபம். கடுகு, முருங்கவிதை, சணல்விதை, ஆளிவிதை, யவதானியம், மோடி[3] இவற்றைப் புளித்த மோர்விட்டு அரைத்து கண்டமாலே, அர்புதம்,[4] கண்டமென்னும் கட்டி இவற்றின்மேல் லேபமாக உபயோகிக்க அவை குணமாகும். 99, 100.

1. தசமூலம்.—இதன் விவரத்தைப்பற்றி 115-வது பக்கத்தில் டிப்பணியைப் பார்க்க.

2. அபசீ.—கழுத்து முதலானவிடங்களில் கண்டமாலையைப் போலுண்டாகும் ஒருவித விரணம்; இதில் ஒரு விரணம் ஆறிவருகையில் மற்றோரிடத்தில் மற்றொன்று உண்டாகும்.

3 மோடி.—இங்கு மூலகபீஜம் என்பதற்கு மோடி என்று மலையாளத்திலுள்ள ஆயுர்வேத நிகண்டுவில் கூறப்பட்டதை அநுஸரித்துப் பொருள் எழுதப்பட்டது. மூலகத்தை முள்ளங்கியென்று இந்த ப்ரகரணத்தில் சொல்வதற்கில்லே.

4. அர்புதம்.—41-வது பக்கம் பார்க்க.

**குஞ்ஜாபலாதி ப்ரதேஹம்.**

ஏதேனும் ஓர் அவயவம் வாததோஷத்தினால் மட்டும் மிகவும் பீடிக்கப்படுமானால், அவ்வவயவத்தில் கூர்மையான ஒரு கத்தியினால் இரத்தம் வருமாறு கீறி, அவ்விடத்தில் குன்றுமணிகளை அரைத்து நன்கு ப்ரதேஹம் செய்ய, அதனால் அபபாஹுகம், விச்வாசீ, க்ருத்ரஸீ[1] இக்கோளாறுகளும், மற்றும் வாததோஷ ஸம்பந்தமான வியாதிகளும் சீக்ரத்தில் ஸ்வஸ்த்தமாகும். 101, 102.

**தத்தூராதி லேபம்.**

ஊமத்தை, ஆமணக்கு, கருநொச்சி, சாறடை, முருங்கை இவற்றின் இலைகளையும் கடுகையும் சேர்த்து அரைத்து கல்கம்போல்செய்து லேபநமாக உபயோகிக்க வெகு நாட்பட்ட கடுமையான யானைக்காலையும் நிவ்ருத்தி செய்யும். 103.

**அஜாஜ்யாதி லேபம்.**

ஜீரகம், சிவகரந்தை, கோஷ்டம், ஆமணக்கிலை, இலந்தை இவற்றைக் காடி விட்டு அரைத்து லேபநம்செய்ய முடக்கு வாயுவென்னும் கீல்வாதம் நிவாரணமாகும். 104.

**கரவீரமூல லேபம்.**

அலரிவேரை ஜலம்விட்டு ஆட்டி லேபநம் செய்வதால், ஆண் குறியிலுண்டாகும் அஸாத்தியகுணங்களைப் பெற்ற வலியும் நிவ்ருத்தியடையும். 105.

**நான்காம் த்ரிபலாதி லேபம்.**

த்ரிபலையை ஒரு பெரிய சாலில் எரித்து, அதன் கரியை அதற்குத் தகுந்தவளவு தேன் விட்டுக் குழைத்து உபதம்சமென்கிற வியாதியில் சர்மத்திலுண்டாகும் விரணங்களின்மேல்[2] பூசிவர, அவை சீக்கிரம் ஆறிவிடும். 106, 107.

**துகாக்ஷீர்யாதி லேபம்.**

மூங்கிலுப்பு, கல்லாலம்பட்டை, சந்தனம், காவி, சீந்திற்கொடி இவற்றை நன்கு அரைத்து, நெய்விட்டுக் குழைத்து அக்னிஸம்பந்தத்தினாலுண்டாகும் விரணங்களின்மேல் பூசிவர, அவை ஆறிவிடும். 108.

**திந்துக்யாதி லேபம்.**

தும்பை, இலவங்கப்பத்திரி இவ்விரண்டையும் க்வாதம் செய்து, அக்கஷாயத்தில் நெய்யையும் கலந்து எரிப்புண்களின்மேல் லேபநம்செய்ய அவை குணமாகும். $108\frac{1}{2}$.

**யவாதி லேபம்.**

யவதானியங்களை எரித்து மையாகச் செய்து, அதில் எண்ணெயைக் கலந்து எவ்விதமான எரிப்புண்களின்மேலும் லேபநம் செய்துவர அவை சீக்கிரத்தில் ஆறும். $109\frac{1}{2}$.

---

1. அபபாஹுகம் முதலான வியாதிகளின் விவரத்தைப்பற்றி 47-ம் பக்கத்தில் மூலத்தையும் டிப்பணியையும் பார்க்க.

2. உபதம்சம்.—இதைப்பற்றிய விவரத்தை 43-ம் பக்கத்தில் மூலத்திலும் டிப்பணியிலும் காண்க.

**பலாசபலாதி லேபம்.** பலாசங்காய், அத்திக்காய் இவற்றை நன்கு கல்கம்போல் அரைத்து, தேனையும் நல்லெண்ணெயையும் சேர்த்துக் குழைத்து யோனிமார்க்கத்திற் பூசினால் அவ்விடம் பலங்கொள்ளும். 110½.

**மாகந்தாதி லேபம்.** மாம்பிஞ்சையும், கர்ப்பூரத்தையும், தேனையும் சேர்த்து ஆட்டி கல்கமாகச் செய்து, யோனியில் தடவிவருவதால், ஸ்த்ரீகளுக்கு யௌவனப்பருவம் கழிந்திருந்தாலும் அவ்வவயவம் கெட்டியாக ஆகும். 111½.

**மரிசாதி லேபம்.** மிளகு, இந்துப்பு, திப்பிலி, கிரந்திதகரம், கண்டங்கத்திரி, நாயுருவி, எள், கோஷ்டம், யவதானியம், உளுந்து, கடுகு, அமுக்கிருங்கிழங்கு இவற்றைச் சூர்ணம்செய்து தேனுடன் கலந்து உபயோகிக்கவேண்டும். இதைவிடாமல் ஸ்தநம் லிங்கம் முதலியவற்றில் லேபநஞ்செய்ய அவை பலப்படும்; புஜம்முதலிய அவயவங்களும் நன்றாகப்பெருக்கும். 112—114.

**ஸிதாதி லேபம்.** சர்க்கரை, அமுக்கிருங்கிழங்கு, இந்துப்பு, ஆட்டுப்பால், இவற்றைச் சேர்த்து க்ருதம் பக்குவம் செய்யவும்; இந்த ஔஷதத்தையும் முன்போலவே உபயோகப்படுத்த அவ்வவயவங்களுக்கு நல்ல வலிமையுண்டாகும். 115.

**இரண்டாம் இந்த்ர வாருண்யாதி லேபம்.** பேய்த்தும்மட்டியிலையின் சாற்றையும் பாதரஸத்தையும் கலந்து செவ்வலரியின் கட்டையினால் நன்கு அடிக்கடியும் ஆட்டி இரண்டையும் ஒன்றாகக் கலந்துவிடவும்; இந்த லேபத்தை முன்போலவே அவ்வவயவத்தில் உபயோகிக்க நற்குணமுண்டாகும். 116½.

**தாம்பூலாதி லேபம்.** வெற்றிலைச் சருகையும், கோஷ்டத்தையும், கடுக்காயையும் சூர்ணம் செய்து ஜலத்தில் குழைத்து, சரீரமெங்கும் தடவிவர தேஹத்திலுண்டாகும் துர்நாற்றம் போய்விடும். 117½.

**குளுத்தாதி லேபம் அல்லது தூள்.** கொள்ளை மிகநுண்மையாகப் பொடித்து அதையும், கோஷ்டம் ஜடாமாம்ஸி வெண் சந்தனம் இவற்றின் சூர்ணத்தையும், கடலைமாவையும், இலவங்கப்பட்டையின் சூர்ணத்தையும் ஒன்றாகக் கலந்து இப்பொடியை தேஹத்தில் தூவுவதால், வியர்வையினா லுண்டாகக்கூடிய துர்நாற்றம் நிவ்ருத்தியாய்விடும். 118, 119.

**வசாதி லேபம்.** வசம்பு, அட்டுப்பு, கோஷ்டம், மஞ்சள், மரமஞ்சள், மிளகு இவற்றைப் பொடி செய்து ஜலத்தில் கலந்து லேபம் செய்வதால் ஸ்த்ரீபுருஷர்கள் ஒருவருக்கொருவர் வசமாய்விடுவார்கள்; அதற்கு இது உத்தம ஔஷதமாம். 120.

## சிரோ வஸ்தி

**மூர்த்த தைலங்கள்.** அப்யங்கம், பரிஷேகம், பிசு, வஸ்தி என்று மூர்த்த தைலமென்னும் சிரஸ்ஸில் தைலம் இடப்படும் முறையானது நான்கு வகைப்படும்; இந்த அப்யங்காதி நான்கு முறைகளுள் ஒவ்வொன்றும் மேன்மேலும் வீர்யத்தில் முறையே சிறந்தவையாம். இவற்றுள் அப்யங்கம், பரிஷேகம், பிசு

என்னும் மூன்றுவித தைலப் பிரயோகங்களும் பிரஸித்தமானவை [1]; இங்கு அறிவிற்சிறந்த வைத்தியர்களின் கொள்கைப்படி சிரோவஸ்தி யென்னும் மூர்த்த தைல முறைமட்டும் விவரிக்கப்படுகின்றது. 121, 122.

சிரோவஸ்தியின் முறை.

பன்னிரண்டு அங்குலம் நீளமுள்ள அல்லது சிரஸ்ஸுக்கு ஸமானமான அளவுள்ள சர்மத்தைத் தலையில் நாற்புறமும் சுற்றிக் கட்டவும்; அதற்குமுன் அந்த சர்மத்தில் இரண்டு த்வாரங்களை யேற்படுத்தி யிருக்கவேண்டும்; உளுந்தை நன்றாகப் பொடிசெய்து ஜலம்விட்டுப் பிசைந்து, தோல் கட்டியிருக்கும் பாகத்தில் செற்றியைச் சேர்ந்தாற்போல் அதைத் தடவி விடவேண்டும்; அதற்கு மேலேயும், சர்மம் வியாபித்துள்ள பாகம் வரையிலும் அதைப் பூசிவிடலாம்; இவ்வாறு சிரஸ்ஸைச் சுற்றிலும் பாத்தியைப்போல் ஓர் சுவரெடுத்து, சிரஸ்ஸில் பாத்திநிரம்பவும் இளஞ்சூடான ஸ்நேஹத்தை ஊற்றவேண்டும். பிறகு நாசி, செவி, இவற்றிலிருந்து ஜலம் ஊறும் வரையிலுமாவது, அல்லது எந்த வியாதியை நிவ்ருத்தி செய்வதற்காக இவ்விதப் பிரயோகம் செய்யப்படுகிறதோ அவ்வியாதியினலுண்டான துன்பங்கள் தீரும் வரையிலுமாவது, அன்றேல் ஆயிர மாத்திராகாலமாவது [2] தலையால் அத்தைலத்தைத் தாங்கிக்கொண்டிருக்க வேண்டும். ஆஹாரமுண்பதற்கு முன்பாகவே சிரோவஸ்தியைச் செய்வது உத்தமம். இதை ஐந்து அல்லது ஏழு நாட்கள் தொடர்ந்து செய்யவேண்டும். சிரஸ்ஸிலுள்ள ஸ்நேஹத்தை வடித்துவிட்டு, வஸ்தியையும் அவிழ்த்துவிட்டு, தோள் முதற்கொண்டு தலைவரையிலும் நாற்புறமும் நன்றாகப் பிடித்து விடவும்வேண்டும்; அப்பால் சிறிது சூடான ஜலத்தினல் ஸ்நானம் செய்துவிடவும். எளிதில் சிகித்ஸைக்கு வசப்படாத தலைநடுக்கம் முதலிய அநேகம் வாத ரோகங்கள் இம்முறையினல் நிவாரணமாய்விடும்; இதை எல்லாக் காலங்களிலும் பிரயோகிக்கலாம். 123—127½.

## கர்ண பூரணம்.

கர்ணபூரண முறை.

நோயாளியை ஒருச்சாய்ந்து படுக்கச்செய்து, வியாதிகொண்ட செவியை சிறிது சூடான பசுமூத்திரம் அல்லது இதர மிருகங்களின் மூத்திரங்களாலாவது, ஸ்நேஹ வஸ்துக்களாலாவது, ஏதேனும் ஸ்வரஸங்களாலாவது முதலில் ஸ்வேத சிகித்ஸை [3] செய்து, பிறகு தகுந்த ஸ்நேஹம் முதலியவற்றால் கர்ணபூரணம் [4] செய்யலாம். செவியினுள் இவ்வாறு நிரப்பிய ஔஷதத்தை நூறு மாத்திராகாலமாவது, ஐந்நூறு மாத்திராகாலமாவது, ஆயிர மாத்திராகாலமாவது அப்படியே வெளி

---

1. அப்யங்கம்—தைலம் முதலியதை சிரஸ் முதலிய அவயவங்களில் தேய்த்துக்கொள்ளுதல்; பரிஷேகம்—எண்ணெய் முதலியவற்றைச் சிரஸ்ஸின்மேல் தாரைபோல் விடுதல்; பிசு—சூடான எண்ணெய் முதலியவற்றில் துணி அல்லது அவ்வித வேறு வஸ்துக்களை நனைத்து ஒற்றடம் செய்தல்.

2. மாத்திராகாலம்.—இதைப்பற்றி 192-வது பக்கத்தில் மூலத்தையும் டிப்பணியையும் பார்க்க.

3. இந்த கண்டத்தின் 2-வது அத்தியாயத்தில் ஸ்வேத விதியைப்பற்றிய விவரங்களைக் காண்க.

4. கர்ணபூரணம்.—காதில் ஏதாவது ஔஷதத்தை ஊற்றி நிரப்புதல்.

விடாமல் வைத்திருக்கவேண்டும்; கர்ணரோகங்களிலும், தொண்டையைப்பற்றிய வியாதிகளிலும், சிரோரோகங்களிலும் இவ்வாறு கர்ணபூரணம் செய்வது நலம். காது, தொண்டை, சிரஸ் இவற்றிலுண்டாகும் வியாதிகளில் கர்ணபூரணம் உபயோகிக்கத் தகுந்ததாம்.[1] ஏதேனும் ஸ்வரஸம் முதலானவைகளால் கர்ணபூரணம் செய்யவேண்டுமானால், அதை ஆஹாரமுண்பதற்கு முன்பாகவே உபயோகிப்பது நலமாகும்; தைலம் முதலானவற்றைக்கொண்டு செய்யவேண்டுமானால் ஸூர்யாஸ்தமனத்திற்குப் பிறகு உபயோகிக்கவேண்டும். 128—131½.

அர்க்கபத்ர ஸ்வரஸம்.

பழுப்பான எருக்கிலையின்மேல் நெய்யைத் தடவி, சிறிது அக்னியின்மேல் காட்டி வதக்கி, அதைப் பிழிந்து ஸ்வரஸமெடுத்து, அதைக் கர்ணத்தில்விட்டால் காதுவலி நிவ்ருத்தியாகும். 132½.

பஸ்தமூத்ராதி கர்ணபிந்து.

செம்மறியாட்டின் மூத்திரத்தைச் சிறிது எடுத்து, அதில் சிறிதளவு இந்துப்பும் சேர்த்துக் கலக்கி செவியில் விட்டுவந்தால் உக்கிரமான காதுவலியும், காதினுள் உண்டாகும் விரணம் முதலியவைகளும் நிவாரணமாகும். 133½.

ச்ருங்கபேர ரஸாதி கர்ணபூரணம்.

இஞ்சி, அதிமதுரம், தேன், இந்துப்பு, நெல்லிக்காய், செஞ்சந்தனம் இவற்றின் ஸ்வரஸம், நல்லெண்ணெய், வெண்காரம், புளிநாரத்தையின் ஸ்வரஸம் இவற்றை ஒன்றாகக் கலக்கி, சிறிது சூடாக்கி, தாங்கக்கூடிய சூட்டில் கர்ணபூரணமாக உபயோகிக்க காது வேதனை தீரும். 134, 135.

கபித்த ஸ்வரஸாதி கர்ணபூரணம்.

விளாம்பழம், கொடிமாதுளம்பழம், புளி, இஞ்சி இவற்றின் ஸ்வரஸத்தைப் பிழிந்து சுத்தமாக வடிகட்டி, சிறிது காய்ச்சி இளஞ்சூடாகவே காதுகளில் விட்டு வந்தால் கர்ணசூலை யென்னும் காதுவலி சாந்தமாகும் 136.

அர்க்காங்குராதி புடபாகம்.

எருக்கந்தளிர்களைக் காடியைச் சேர்த்து அரைத்து, உப்பையும் எண்ணெயையும் சேர்த்துக் குழைத்து, கள்ளித்தண்டைப் பிளந்து அதனுள் அக்கலக்கத்தை அடக்கிவைத்து, பிறகு எருக்கிலைகளால் அதை மூடி முறைப்படி புடபாகம்[2] செய்யவும்; பிறகு அதை வெளியிலெடுத்து ஸ்வரஸம் பிழிந்து, இளஞ்சூடா யிருக்கையிலேயே கர்ணபூரணமாய் அதை உபயோகிக்கவேண்டும். இதனால் மிகவும் தாங்கமுடியாத காதுவலிகள் யாவும் நிவ்ருத்தியாய் விடும். 137, 138.

மஹாபஞ்சமூல தீபிகா தைலம்.

மஹாபஞ்சமூலங்களில்[3] ஒவ்வொன்றின் தண்டையும் எட்டு அங்குலம் நீளமுள்ளதா யெடுத்து, அவற்றைப் பட்டுத்துணியினால் சுற்றிக் கட்டி, தைலத்தில் நனைத்து, அக்னியிற் காட்டவும்; பிறகு அதிலிருந்து வடியும் தைலத்தை ஒரு பாத்திரத்தில் ஏந்திக்கொள்ளவும்; இது "தீபிகாதைலம்" எனப்படும். இதை இளஞ்சூடாயிருக்கையில் காதினுள் விடவும்; இதனால் காதுவலி உடனே தீரும். 139, 140.

1. இங்கு மாத்திரா காலத்தைப்பற்றிய ஒரு ச்லோகம் விலக்கப்பட்டது; அவ்விஷயம் முன்பே விவரிக்கப்பட்டது. இதைப்பற்றி 192-வது பக்கம் பார்க்க.

2. புடபாகம்—இதைப்பற்றிய விவரங்களை 68-வது பக்கத்தில் பார்க்க.

3. மஹாபஞ்சமூலம்—பில்வம், பெருவாகை, பெருங்குமிழ், பாதிரி, சிறுவழுதலை இவ்வைந்தின் வேர்களாம்.

கோஷ்டாதி தீபிகா தைலம்.

மேலே மஹாபஞ்சமூலங்களைக்கொண்டு தீபிகாதைலம் பக்குவம்செய்த விதமாகவே கோஷ்டம், தேவதாரு, பெருவாகையின்வேர் இவற்றையும் சிறு தீயில் எரித்துத் தைலம் இறக்கப்படுமானல் அதுவும் "தீபிகா தைலம்" என்றே வழங்கப்படும். இத்தைலத்தை கர்ணபூரணமாக உபயோகித்தால் ஸந்நிபாத[1] ஸம்பந்தமான கோளாறும் சீக்கிரம் நிவ்ருத்தியாகும். 141½.

ஸூகரவஸாதிகர்ண பூரணம்.

அதிமதுரம், காகோலீ, உளுந்து, கொத்தமல்லிவிதை இவற்றைக் கல்கம்போல் அரைத்து, அவற்றை க்வாதமாகக் காய்ச்சி, அக்கஷாயத்தில் பன்றியின் கொழுப்பைச் சேர்த்து பக்குவஞ்செய்து, அதை கர்ணபூரணமாய் உபயோகிக்க கர்ணநாதமென்னும் காதிரைச்சலும், காதுவலியும் சாந்தமாகும். 142½.

ஸ்வர்ஜிகாதி தைலம்.

சவட்டுப்பு, உலர்ந்த முள்ளங்கி, பெருங்காயம், திப்பிலி, சதகுப்பி இவற்றையும், தைலத்தையும், தைலத்திற்கு நான்கு மடங்கு ஏதேனும் ஸூக்தத்தையும்[2] சேர்த்து பக்குவம் செய்து, தைலத்திற்கு காலில் ஒரு பங்கு பாதரஸத்தையும் சேர்த்துக் கலந்து, கர்ணபூரணம் செய்ய, கர்ணநாதம், கர்ணசூலை, பாதிர்யமென்னும் செவிட்டுத்தன்மை, காதிலிருந்து சீழ் முதலியது வடிதல் இவை தீரும். 143, 144.

அபாமார்க்கக்ஷார தைலம்.

நாயுருவியின் க்ஷாரத்தை[3] ஜலத்தில் கரைத்து, அந்த ஜலத்தை வடிக்கட்டி, மீண்டும் அந்த க்ஷாரத்தையே சிறிது கல்கமாகச் சேர்த்து, எண்ணெயையும் அதில் ஊற்றி, அதை தைலமாகப் பக்குவம் செய்யவும். இத்தைலம் செவிட்டுத் தன்மையையும், காதிரைத்தலையும் போக்கும். 145.

சம்பூக தைலம்.

நத்தைகளின் மாம்ஸத்தையெடுத்து, கடுகெண்ணெயுடன் கலந்து பக்குவம் செய்யவும். இத்தைலத்தைக் காதிலுண்டாகும் நாடீவ்ரண மென்னும் புண்களை ஆற்றுவதற்கு உபயோகிக்கலாம்; இதை உபயோகித்த மாத்திரத்தில் குணமுண்டாய் விடும். 146.

பஞ்ச கஷாயாதி கர்ணபூரணம்

பஞ்ச கஷாயமென்னும் ஐந்துவிதமான சரக்குகளையும் சூர்ணம்செய்து, விளாம்பழரஸத்தினல் கலக்கி, இவற்றுடன் தேனையும் கலந்து நன்ருகக் குழைத்து, இத்திரவத்தை கர்ணபூரணமாக உபயோகிக்க, காதிலிருந்து சீழ்வடிதல் நின்றுவிடும். [தும்பை, கடுக்காய், வெள்ளிலோத்தி, மஞ்ஜிஷ்டி, நெல்லி இவ்வைந்தும் இங்கு 'பஞ்சகஷாயங்கள்' என்று கூறப்படுகின்றன.] 147, 148.

1. ஸந்நிபாதம்—இதைப்பற்றி 12-வது பக்கத்தில் டிப்பணியைப் பார்க்க.

2. ஸூக்தம்—இதைப்பற்றிய விவரத்தை 132-ம் பக்கத்திற் காண்க.

3. க்ஷாரம்—ஒரு விதமான உப்பு: சில மூலிகைகளை எரித்து அவற்றிலிருந்து எடுக்கப்படுவது: இதுவே 'காரம்' எனவும் வழங்கப்படும்.

சவட்டுப்பைப் பொடிசெய்து கொடிமாதளையின் சாற்றில் சிறிது கலந்து கர்ணத்தில் உபயோகிக்க, காதிலிருந்து சீழ் முதலியது வடிதல், காதுநோய் காதெரித்தல் முதலியவை நிச்சயமாய் நிவ்ருத்தியாகின்றன. 149.

**ஸர்ஜிகாதி கர்ண பூரணம்.**

மாந்தளிர், நாவல்தளிர், இலுப்பைத்தளிர், ஆலந்தளிர் இவற்றை இடித்துச் சேர்த்து எண்ணெயை ஊற்றி அதைப் பக்குவம் செய்து வடிக்கட்டி உபயோகித்துவர, பூதிகர்ணமென்னும் சீழ்வடிதலுடன் கூடிய காதுநோய் தீரும். 150.

**ஆம்ர ப்ரவாளாதி தைலம்**

நன்கு சுத்திசெய்த தாளகத்தைப் பொடித்து, கோமூத்திரத்தில் சிறிதளவு கலக்கி கர்ணபூரணமாய் உபயோகித்தாலும், கடுகெண்ணெயையாவது சிறிது ஊற்றினாலும் காதுக்குள்ளிருக்கும் கிருமி முதலியது அழிந்துவிடும். 151.

**ஹரிதாளாதி கர்ண பூரணம்**

முருங்கைவேரின் ஸ்வரஸம், தொழுகண்ணியென்னும் அரவாட்டிப்பச்சையின் ஸ்வரஸம், பூனைக்காஞ்சொறிவேரின் ஸ்வரஸம் இம்மூன்றையும் சேர்த்து, இந்தத் திரவத்தில் த்ரிகடுவையும் சூர்ணம்செய்து கலக்கி, காதிலுண்டான அல்லது காதில் பிரவேசித்துள்ள கிருமி முதலான ஜந்துக்களை அழிப்பதற்காக உபயோகிக்கலாம். 152½.

**சிக்ருமூலஸ்வரஸாதி கர்ணபூரணம்.**

---

## பன்னிரண்டாவது அத்தியாயம்.

### (இரக்தமோக்ஷணவிதி.)

**இரக்த மோக்ஷணத்திற்கான காலநியமம் முதலியது.**

மனிதனுடைய வியாதியின் கூறுபாடுகளை உற்றுநோக்கி, அந்தந்த நிலைமைக்குத் தகுந்தவாறு சரீரத்திலிருந்து இரத்தத்தை ஒரு ப்ரஸ்த்தம் அளவாவது அரை ப்ரஸ்த்தமாவது, அல்லது கால் ப்ரஸ்த்தமாவது வடியச் செய்யலாம். சரத்ருதுவில் ஸாதாரணமாய் இரக்தமோக்ஷணம்[1] செய்வது உசிதம். இரத்த மோக்ஷணம் செய்வதால் சர்மவியாதிகளும், கிரந்திகளும், சோகையென்னும் வீக்கம் முதலானவைகளும் உண்டாகமாட்டா. 1, 2.

**இரக்தத்தின் இயற்கைக் குணங்கள்.**

இரக்தமானது சுவையில் மதுரமாகவும், நிறத்தில் சிவப்பாகவும், அதிக குளிர்ச்சியாக அல்லது அதிக உஷ்ணமாகவாவது இல்லாமல் நடுத்தர நிலைமையைப் பெற்றதாகவும், குருகுணமுடையதாகவும் இருக்கும்; மேலும் அது ஒருவாறு பசையுள்ளதாகவும் ஒருவித அருவருப்பான நாற்றமுடையதாகவும் இருக்கின்றது. இரக்தம் ஏதாவது காரணத்தால் முறிவடைந்தால் பித்தப்ரகோபத்தினாலுண்டாகும் குறிகள் அல்லது கோளாறுகள் ஸம்பவிக்

---

1. இரக்த மோக்ஷணம்--ஸிரைகளென்னும் காரிரத்தக்குழாய்களிலிருந்து இரத்தத்தை வெளிப்படுத்தல்.

கும்[1]. சவர்காற்றம், திரவத்தன்மை, சிவப்பு, அசைந்தோடும் ஸ்வபாவம், ஆவியாகக் கரைதல் என்னும் இவ்வைந்து குணங்களும் இரத்தத்திலிருப்பதால், அவை முறையே ப்ருதிவி, அப், தேஜஸ், வாயு, ஆகாயம் இவற்றின் குணங்களாகக் கருதப்படுகின்றன[2]. 3, 4.

இரத்ததோஷக் குறிகள்.

இரத்தம் தூஷிக்கப்பட்டால் சரீரத்தில் வேதனையுண்டாகும்; அழற்சியும் எரித்தலும் ஸம்பவிக்கும்; இரத்தவர்ணமான தடிப்புகளும், அரிப்பும், விக்கமும், கொப்புளங்களும் உண்டாகும். 5.

இரத்தம் அதிகரித்தால் காணக்கூடிய குறிகள்.

இரத்தம் மிதமிஞ்சி விருத்தியானல் சரீரம் முழுமையும் விசேஷமாக நேத்திரமும் மிகச் சிவந்துவிடும்; விரைகள் என்னும் இரத்தக்குழாய்கள் எப்பொழுதும் பூர்ணமாய் நிரம்பியிருக்கும்; தேஹம் பாரமாயிருப்பதாகத் தோற்றும்; நித்திரை அதிகமாய் உண்டாகும்; மேதஸ் என்னும் கொழுப்பு அதிகரிக்கும்; உடலில் அழற்சியும் உண்டாகும். 6.

இரத்தம் க்ஷீணித்தால் காணக்கூடிய குறிகள்,

இரத்தம் க்ஷயமடைந்தால் புளிப்பு இனிப்பு என்னும் சுவைகளில் விருப்பமும், மூர்ச்சையும், சர்மத்தில் வறட்சியும், விரைகளென்னும் இரத்தக்குழாய்களின் தளர்ச்சியும், வாதம் ப்ரகோபமடைந்து அது தன் ஸ்தானத்தை விட்டு வேறு மார்க்கங்களிற் பிரவேசிப்பதும் இன்னும் இத்தகைய விகாரங்களும் ஸம்பவிக்கும். 7.

வாததுஷ்டமான இரத்தத்தின் குறிகள்.

வாத தோஷத்தினல் கோளாறடைந்த இரத்தத்தின் குறிகளாவன:—கருஞ்சிவப்பு, நுரைத்தல், வறட்சி, வன்மை, அளவிலும் குணத்திலும் மெலிவுறுதல், வேகம் அதிகரித்தல், உறையுந்தன்மை குறைந்துபோதல், ஊசியால் குத்தப்படுவதுபோல் வேதனையுண்டாதல் என்னும் இக்குறிகள் ஸம்பவிக்கும். 8.

பித்ததுஷ்டமான இரத்தத்தின் குறிகள்.

பித்தத்தினல் இரத்தம் தூஷிக்கப்பட்டால் அது நிறத்தில் மஞ்சளாகவும், அல்லது இலேப்பசுமையுள்ளதாகவும், சில ஸமயம் கருப்பு அல்லது நீல நிறமாகவும் காணப்படும்; சவர்காற்றமும், உறையக்கூடாத நிலைமையும் அதற்கு உண்டாகும்; அதன் உஷ்ணமும் இயற்கையினும் அதிகப்படும்; ஈ, எறும்பு முதலான ஜந்துக்கள் அவ்வித இரத்தத்தை அபேக்ஷிக்கமாட்டா. 9.

கபதுஷ்டமான இரத்தத்தின் குறிகள்.

கபத்தினல் கோளாறடைந்த இரத்தமானது குளிர்ந்தும், அளவில் அதிகரித்தும், பசையுள்ளதாகவும், காவிக்கல் கரைத்த ஜலத்திற்கு ஒப்பாகவும், சிதைவுண்ட தசைநார்களுக்கேற்ற நிறமுடையதாகவும், எளிதில் உறையுந்தன்மையதாகவும், வெகு மந்தமான ஓட்டமுள்ளதாகவும் இருக்கும். 10.

1. பித்த வியாதிகளைப்பற்றி 49-வது பக்கத்திற் பார்க்க.

2. இரத்தம் பஞ்சபூதங்களின் அம்சங்களும் சேர்ந்து உண்டானது என்று சாஸ்திரஞ்ஞர் கூறுவர்; அதை நிரூபணம் செய்ய இவ்வாறு அதன் தன்மைகள் விவரிக்கப்பட்டன.

**த்வந்த்வ-ஸந்நிபாத துஷ்டமான இரத்தம்.** [1]

வாத பித்த கபங்களுள் ஏதேனும் இரண்டு தோஷங்களால் தூஷிக்கப்பெற்ற இரத்தம் அந்தந்த தோஷங்களின் கலப்பான குறிகளுடன் கூடியதாயிருக்கும். மூன்று தோஷங்களாலும் தூஷிக்கப்பெற்றிருந்தால், அந்த இரத்தம் துர்நாற்றமுள்ளதாகவும், காஞ்ஜிகமென்னும் காடிக்கு ஒப்பாகவும், மற்றும் மூன்று தோஷங்களுக்குள்ள எல்லாக் குறிகளைப் பெற்றதாகவும் இருக்கும். 11.

**விஷதுஷ்டமான இரத்தத்தின் குறிகள்**

ஏதேனும் விஷ ஸம்பந்தத்தினால் தூஷிக்கப்பெற்ற இரத்தம் கறுநிறமாகவும், நாசி முதலியவற்றின் மூலமாக அடிக்கடி வடியுந்தன்மையதாகவும், சவர்நாற்றமுள்ளதாகவும், காடியைப்போன்றதாகவும், அளவில் அதிகரித்ததாகவும். ஸர்வகுஷ்டங்களையுமுண்டாக்குவதற்குக் காரணமாகவும் இருக்கும். 12.

**இரத்தத்தின் இயற்கை நிலைமை.**

ஒருவிதமான கோளாறையுமடையாமல் இயற்கைத்தன்மையிலிருக்கும் இரத்தம் இந்த்ரகோபமென்னும் தம்பலப்பூச்சிக்கு நிகரான நிறமுடையதாகவும். தோய்ந்து விடாத அல்லது மிகத் தடித்துவிடாத நிலைமையுள்ளதாகவும் காணப்படும். 12½.

**இரத்த மோக்ஷத்திற்கேற்ற வியாதிகள்.**

ஏதாவது வீக்கம், எரித்தல், தேஹம் அழன்றுவிடுதல், சரீரத்தில் இரத்தவர்ணம் அதிகரித்தல், இரத்தக் கசிவு ஸம்பவித்தல், வாதரக்தம், குஷ்டம், மிகத் துன்பமளிப்பதும் கஷ்ட ஸாத்தியமுமான வாதரோகம், கையிலுண்டாகக் கூடிய சொறி சிறங்கு முதலிய வியாதிகள், ச்லீபதமென்னும் யானைக்கால், விஷங்களால் இரத்தம் தூஷிக்கப்படுதல், க்ரந்தி, அர்புதம், அபசீ, க்ஷுத்ர ரோகங்கள், இரத்தத்தின் கோளாறால் ஸம்பவிக்கும் அதிமந்தம், விதாரிகா, ஸ்தன ரோகங்கள், சரீரம் இளைத்துப்போதல், சரீரம் மிகவும் பருத்துப்போதல், இரத்ததோஷத்தினாலுண்டாகும் அபிஷ்யந்தம், தந்த்ரையென்னும் திமிர், நாசி வாய் மற்றுமுள்ள அவயவங்கள் துர்நாற்றமுறுதல், கல்லீரலைப்பற்றிய வியாதிகள், மண்ணீரலைப்பற்றிய வியாதிகள், விஸர்ப்பமென்னும் அக்கிவ்ரணம், வித்ரதி, இரத்தக்கட்டிகள், காதில் புண்ணுண்டாதல், உதடுகளில் புண் உண்டாதல், நாசி அழன்று போதல், வாய்ப்புண், தலைநோய், உபதம்சம் [2] இரக்த பித்தம் இந்த ரோகங்களில் வைத்தியர் ச்ருங்கங்களாலாவது [3], அட்டைகளைப் பிரயோகித்தாவது, சுரைக்குடுக்கைகளாலாவது, அல்லது ஸிரைகள் என்னும் காரிரத்தக்குழாய்களைக் கீறியாவது இரத்தத்தை வெளிப்படுத்தவேண்டும். 13—18.

---

1. த்வந்த்வம்—வாத-பித்தங்கள், வாத-கபங்கள், பித்த-கபங்கள் என்று இவ்வாறு இரட்டையான தோஷங்கள் சேர்ந்து வியாதியுண்டாதல். ஸந்நிபாதம்—வாத-பித்த-கபங்கள் மூன்றும் சேர்ந்து வியாதியுண்டாதல்.

2. இங்கு மொழியப்பட்டுள்ள வியாதிகளின் பெயர்களைப்பற்றிய விவரங்களை பூர்வகண்டத்தில் ஏழாவது அத்தியாயத்தில் பார்க்க.

3. ச்ருங்கம்—பீச்சாங்குழல். [ச்ருங்கமே ஸிரிஞ்ஜ்-Syringe என்று வழங்கப்படுகிறது].

**இரக்த மோக்ஷணத்திற்குத் தகாதவர்கள்.**

மிகவும் மெலிவுற்ற தேஹி, அதிகமாய் அடிக்கடியும் புணருபவன், பேடி, பயப்படுந் தன்மையன், கர்ப்பிணீ, பிரஸவித்தவள், பாண்டுரோகி, பஞ்சகர்மங்களால் சுத்தியடைந்தவன் [1], ஸ்நேஹபானம் செய்தவன், அர்சஸ் என்னும் மூல ரோகத்தினால் பிடிக்கப்படுபவன், சரீரமெங்கும் வீக்கங்கொண்டவன் உதரரோகமுள்ளவன், ச்வாஸ-காஸரோகிகள், வாந்தியினாலும் அதிஸாரத்தினாலும் துன்பப்படுபவர், ஸ்வேத சிகித்ஸையினால் மிகவும் வியர்த்த தேஹிகள், பதினாறு வயதுக்கு உட்பட்டவர்கள், எழுபதுமுதல் அதற்குமேற்பட்ட வயதுடையவர்கள், காயம் முதலிய அபிகாதத்தினால் இரத்தப் பெருக்கு உண்டான தேஹமுடையவர்கள் இவர்களுக்கு இரத்த மோக்ஷணம் செய்யக்கூடாது. ஆனால் மேற் கூறியவர்களுக்கு அபாயகரமான நிலைமைகள் நேரிட்டால் அப்பொழுது அட்டைகளைப் பிரயோகித்து இரத்தத்தை வெளிப்படுத்தலாம்; சரீரத்தில் விஷம் ஸம்பந்தப்பட்டவர்களுக்கு விரையென்னும் காரிரத்தக் குழாயைக் கீறி இரத்தத்தைப் பெருக்கி விடுவது நலம். 19—22½.

**வாத-பித்த-கபங்களால் துஷ்டமான இரத்தத்தை வெளிப்படுத்தல்.**

வாத தோஷத்தினால் தூஷிக்கப்பெற்ற இரத்தத்தைப் பசுவின் கொம்பினால் செய்யப்பட்ட ச்ருங்கத்தினாலும், பித்ததுஷ்டமான இரத்தத்தை அட்டைகளாலும், கபதுஷ்டமானதை சுரைக்குடுக்கைகளைக்கொண்டும் கற்றறிந்த வைத்தியன் வெளிப்படுத்தவேண்டும். த்வந்த்வ தோஷங்களாலும் ஸந்நிபாதத்தினாலும் கோளாறடைந்த இரத்தத்தை மதியூகத்துடன் விராமோக்ஷணம் செய்தும் [2], பதங்களாலும் [3] வெளிப்படுத்திவிடலாம். 23—24½.

**ச்ருங்கம் முதலியவற்றால் சரீரத்திதைச் சுத்தி செய்யக்கூடிய அளவு.**

ச்ருங்கம் என்னும் கருவியினால் இரக்த மோக்ஷணம் செய்தால், அவ்விதம் செய்யப்படும் பிரதேசத்திலிருந்து பத்து அங்குலதூரம் வரையிலுள்ள இரத்தத்தை அது வலிவுடன் உறிஞ்சும்; அட்டையானால் ஒரு முழம் தூரத்திலுள்ள இரத்தத்தை இழுக்கும்; சுரைக்குடுக்கையைப் பிரயோகித்தால் பன்னிரண்டு அங்குலம் தூரம் வரையிலுமுள்ள இரத்தத்தை ஆகர்ஷணம் செய்யலாம்; பதங்களைக்கொண்டு ஒரு அங்குலம் தூரத்திலுள்ள இரத்தத்தைமட்டும் வெளிப்படுத்தக்கூடும்; விராமோக்ஷம் செய்தால் சரீரத்தில் எங்கும் வியாபித்துள்ள இரத்தத்திலிருக்கிற தோஷங்களை வெளிப்படுத்தி தேஹத்தைச் சுத்தமாக்கி விடலாம். 25, 26.

**இரத்தம் வெளிவர முடியாத நிலைமை.**

குளிர் அதிகரித்த காலங்களிலும், ஆஹாரமுட்கொள்ளாமலிருக்கையிலும், மூர்ச்சையிலும், அதிக நித்திரையிலும், பயந்திருக்கையிலும், ஆயாஸமுண்டான நிலைமையிலும், மல மூத்திரங்கள் வெளிப்படாமலிருக்கும்போதும் இரக்தமோக்ஷணம் செய்யமுயன்றால் இரத்தம் நன்கு வெளிப்படாது [4]. 27.

---

1. பஞ்சகர்மங்கள்—இதைப்பற்றி 210-வது பக்கம் பார்க்க.
2. விரா—காரிரத்தக்குழாய்; மோக்ஷணம்—அதைக் கீறி அதிலிருந்து இரத்தத்தை வெளிப்படுத்தல்.
3. பதம்—ஏதேனும் கூர்மையான கருவியினால் இரத்தம் வடியும்படி ஆங்காங்கு கொத்துதல்.
4. குளிர்ச்சி முதலியவற்றால் தேஹத்தின் வெளிப்புறத்து இரத்தக்குழாய்கள் சுருக்கங்கொள்வது இயல்பாகையால் அந்நிலைமைகளில் இரத்தம் நன்கு வெளிவராது.

இரத்தம் வெளிவராவிடில் செய்யவேண்டிய உபாயம்.

இரத்தம் தகுந்தவாறு வெளிவராமற்போகையில் கோஷ்டம், த்ரிகடு, இந்துப்பு இவற்றைப் பொடிசெய்து, இரக்தமோக்ஷணம் செய்வதற்காகக் கீறி விரண முண்டாக்கிய இடத்தில் அப்பொடியை நன்றாகத் தேய்க்க இரத்தம் நன்றாகக் கசியத்தொடங்கும். 28.

இரக்த மோக்ஷணத்திற்கு ஏற்ற அல்லது ஏற்காத காலம்.

ஆகையினால் குளிர்காலங்களிலும், அதிக உஷ்ணகாலத்திலும், ஸ்வேதசிகித்ஸையைச் செய்யாமலிருக்கையிலும், அதிகமாய் ஸ்வேதனம் முதலியவற்றால் வேக்காடு அடைந்திருக்கையிலும் இரக்த மோக்ஷணம் செய்யக் கூடாது. விஷய முணர்ந்த வைத்தியர் பிணியாளியை யவாகூ என்னும் திரவமான ஆஹாரத்தை உட்கொள்ளச் செய்து அவன் திருப்தியடைந்திருக்கையில் அவனுடம்பிலிருந்து இரத்தத்தைப் பெருக்கச் செய்யவேண்டும். 29.

இரத்தம் அதிகமாகப் போசிவதற்குக் காரணம்.

ஸ்வேத சிகித்ஸையை மிதமிஞ்சி உபயோகிப்பதாலும், காலம் மிக உஷ்ணமாயிருந்தாலும், விரைகளை அளவுமீறி கீறிக் கொத்துவதாலும் இரத்தமானது மிகுதியாக வெளிப்படும்; அந்த நிலைமையில் அதைத் தடுப்பதற்கு முயலவேண்டும். 30.

அதிக இரத்தப் பெருக்கை நிறுத்து முபாயம்.

அவ்வாறு இரத்தம் அதிகமாகப் பெருகிவிடுமாயின் செய்யவேண்டிய தென்னவென்றால்: வெள்ளிலோத்தி, ஸர்ஜரஸம் என்னும் பிசின், நீலாஞ்ஜனம் இவற்றை விரணத்தின் முகத்தில் தேய்க்கலாம்; யவதானியம், கோதுமை இவற்றின் சூர்ணத்தையாவது மூங்கிலுப்பு தர்வகம்[1] காவி இவற்றின் சூர்ணத்தையாவது, பாம்புத்தோலின் சூர்ணத்தையாவது, பட்டு அல்லது வஸ்திரத்தை எரித்து அதன் பஸ்மத்தையாவது இரத்தப் பெருக்குடன் கூடிய விரணத்தின் முகத்தில் தூவிவிடவேண்டும். அல்லது விரணத்தின் முகத்தை நன்றாகக் கட்டி சீதளமான வஸ்துக்களை அதன்மேல் தடவிவருவதுடன் அப்பிணியாளிக்கு வேறுவித சீதோபசாரங்களையும் செய்யவேண்டும்; அல்லது எந்த விரையென்னும் இரத்தக்குழாய் கீறப்பட்டதோ அதே விரையை முதலிற் கீறப்பெற்ற இடத்திற்குமேலே மறுபடியும் கீறிவிடலாம்; அன்றேல் அந்த இடத்தை க்ஷாரத்தினாலாவது அக்னியினாலாவது சுட்டு விடுவதும் நலம். துவர்ப்பான வஸ்துக்கள் விரணத்தின் முகத்தை மூடி இரத்தத்தை நிறுத்தும்; சீதளமான பதார்த்தங்கள் இரத்தத்தை உறையச் செய்து அதைப் பெருகவிடாமல் தடுக்கும்; க்ஷாரங்கள் என்னும் காரவகைகள் விரண முகத்தைப் பக்குவப்படுத்தி இரத்தத்தைத் தடுக்கும்; விரையிலுண்டான விரணமுகத்தைச் சுட்டால் அந்த இரத்தக்குழாய் சுருங்கி இரத்தப் பெருக்கு நின்றுவிடும். 31—33½.

அண்டவீக்கத்தில் ஸிராதாஹம்.

இடது பீஜம் வீங்கியிருந்தால் வலது கையின் பெருவிரலுக்கு அடியிலுள்ள விரையைச் சுடுவதும், வலது அண்டம் வீங்கினால் இடது காத்தின் பெருவிரலின் விரையைச் சுடுவதும் முறை; இவ்வாறு அவ்வவயவங்களிலுள்ள விரைகளைச் சுடுவதிலுள்ள பிரபாவத்தினால் பீஜங்களின் வீக்கம் நிவாரணமாய் விடும். 34, 35.

1. தர்வகம்—இதற்குத் தமிழில் பெயர் கிடைப்பது அரிது.

**விஷூசியில் ஸிராதாஹம்.**

விஷூசி ரோகத்தில்[1] குதிக்கால்களைச் சுடுவதால் ஜாடராக்னி அல்லது தீபனசக்தி அதிகரிக்கும்; இரஸமென்னும் தாதுவும்[2], கபமும் எக்குழாய்களில் நெகிழ்ந்தோடுகின்றனவோ அக்குழாய்கள்[3] இவ்விதம் சுடுவதால் சுருக்கங்கொள்கின்றனவாதலின் அவ்வாறு தீபன சக்தி யேற்படுகின்றது. 36.

**கல்லீரல்-மண்ணீரல்களின் வீக்கத்தில் ஸிராதாஹம்.**

சிறு குழந்தைகளுடைய வயிற்றில் கல்லீரலும் மண்ணீரலும் இரத்ததோஷம் அதிகரிப்பதால் வீங்கிவிடும்போது,[4] அவ்வவயவங்களுக்கு நேராக வயிற்றின் மேல் சுடுவதால் அங்குள்ள இரத்தக் குழாய்கள் சுருக்கங்கொண்டு அவ்வவயவங்களின் வீக்கமும் நிவ்ருத்தியாகும். 37.

**கெட்டுப்போன இரத்தத்தை மிகுத்தி விடுதல்.**

இரத்தத்தில் தோஷம் சிறிது தங்கியிருந்தாலும் அதனால் வியாதி மறுபடியும் ஸம்பவிக்காது; ஆகவே தோஷத்துடன் கூடிய இரத்தம் சிறிது மிகுந்திருக்குமாறு அதை விட்டுவிடுவது நலமேயன்றி, அதை அளவுமீறி வடியச் செய்வது சரீரத்திற்கு ஹிதமாகமாட்டாது. 38.

**அளவு மீறிய இரத்தமோக்ஷணத்தினாலுண்டாகும் கேடுதிகள்.**

இரத்தம் அளவுமீறி வடியுமானால் நேத்திரம் கெட்டுப்போதல், ஆக்ஷேபகமென்னும் இசிவு, நாவறட்சி, திமிரமென்னும் கண்ணோய், தலைவலி, பார்ச்வ வாயு, ச்வாஸகாஸம், விக்கல், தேஹஅழற்சி, பாண்டுரோகம் இவை ஸம்பவிக்கும்; அல்லது மரணாந்தமான ஆபத்தும் நேரிடும். 39½.

**இரத்தத்தின் அருமை.**

இரத்தத்தினாலேயே தேஹம் உற்பத்தியாகின்றது; தேஹம் அதினாலேயே போஷிக்கப்பட்டு ஜீவித்து வருகின்றது; இரத்தமன்றியில் சரீரத்தில் ஜீவன் நிற்கமாட்டாமற் போய்விடும்; ஆகவே கற்றறிந்த வைத்தியர்கள் இரத்தத்தைக் காப்பதிலேயே கருத்தாயிருக்கவேண்டும். 40½.

**இரத்தமோக்ஷணத்தில் சீதோபசாரத்தினாலான வீக்கத்திற்குப் பரிஹாரம்.**

ரக்தமோக்ஷணம் செய்தபிறகு சீதோபசாரம் செய்து அதனால் வாயுவானது பிரகோபமடைந்து வலியுடன் அவ்விடம் வீக்கங்கொள்ளுமாயின், இளஞ்சூடான நெய்யினால் அப்பிரதேசத்தில் ஒற்றடம் கொடுக்கவேண்டும். 41½.

---

1. விஷூசி—வாந்திபேதி.

2. இரஸம்—உணவு நன்கு ஜீர்ணமான பிறகு தெளிவாக இரத்தமாய் மாறக்கூடிய நிலைமையிலிருக்கும் அதன் ஸாரம்.

3. கபம் ஓடுவதற்கான குழாய்கள் ஆங்கிலத்தில் லிம்பாடிக் வெஸல்ஸ் (Lymphatic vessels) எனக் கூறப்படுகின்றன.

4. கல்லீரல் வீங்கிப்போனால் அது பெரும்பாலும் 'மாந்தக்கட்டி' என்றும், மண்ணீரல் வீக்கங்கொண்டால் அது பெரும்பாலும் 'ஜ்வரக்கட்டி' என்றும் தமிழ் நாட்டில் வழங்கப்படுகிறது. வடமொழியில் அவை முறையே 'யக்ருத்தாலீ' என்றும் 'ப்லீஹோதரம்' என்றும் கூறப்படுகின்றன.

இரக்தமோக்ஷணத்தில் இளைத்துப்போனவனுக்கு கலைமான், முயல், செம்மறியாடு, கறுத்த மான், வெள்ளாடு இவற்றின் மாம்ஸரஸமாவது, பாலாவது பானம் செய்வதற்கு ஏற்றவையாகும்; காரிசியினாலான அன்னத்தையும் உபயோகிப்பது நலம். 42½.

இரக்தமோக்ஷணத்தினால் பலஹீனமானவனுக்குஉசிதமான உணவு.

சரீரத்திலிருந்த துன்பங்கள் நிவ்ருத்தியாதல், வியாதி குறைதல், தோஷப்ரகோபங்கள் அல்லது உபத்திரவங்கள் சாந்தமாதல், மனது ஸுகமடைந்து தெளிவுறுதல் என்னும் இக்குறிகள் இரக்தமோக்ஷணம் என்கிற இச்சிகித்ஸை நன்கு நிறைவேற்றப்பட்டதன் அறிகுறிகளாம். 43½.

இரக்தமோக்ஷணம் நன்கு நிறைவேறியதன் குறிகள்.

வ்யாயாமம் என்கிற தேஹவுழைப்பு, புணர்ச்சி, சினம், குளிர்ந்த ஜல ஸ்நானம், அதிக காற்றில் வஸித்தல் அல்லது உலாவுதல், ஒரு வேளையே உணவு உண்பது, பகலில் நித்திரைபோதல், க்ஷாரமென்னும் உப்பு வகைகள் ஸம்பந்தப்பட்டதும் புளிப்புள்ளதும் காரமுமான உணவுகளை யுண்பது, மனத்துயரம், வாதாடுதல், அஜீர்ணமுண்டாக்கும் உணவு இவை தேஹத்திற்கு வேண்டிய வன்மையுண்டாகும் வரையில் தகாதவைகளாம். 44, 45.

இரக்தமோக்ஷணத்திற்குப் பிறகு பத்தியக் கிரமம்.

---

## பதின்மூன்றும் அத்தியாயம்.

### (நேத்திர சிகித்ஸை.)

ஸேகம், ஆச்சியோதநம், பிண்டிகா, பிடாலகம், தர்ப்பணம், புடபாகம், அஞ்ஜநம் இவை முதலிய கல்கங்களைக் கொண்டு நேத்திரத்திலுண்டாகும் வியாதிகளுக்கு சிகித்ஸை செய்யவேண்டும். 1.

பலவித நேத்திரௌஷதங்கள்.

#### ஸேகம்.

ஔஷதகுணமுள்ள ஏதேனும் திரவபதார்த்தத்தை நேத்திரங்களின்மேல் நாற்புறமும் விழுமாறு மெல்லிய தாரையாக விட்டால், அவ்விதப் பிரயோகம் 'ஸேகம்' அல்லது 'பரிஷேகம்' எனப்படும்; எவனுக்கு ஸேகம் செய்ய வேண்டுமோ அம்மனிதனை நேத்திரத்தை மூடச் செய்து, அவற்றின்மேல் நான்கு அங்குலம் உயரத்திலிருந்து தாரைபோல் அத்திரவத்தை விட வேண்டும். 2.

ஸேகம் செய்யு முறை.

மூன்றுவித ஸேகங்களும் அவற்றின் காலநியமங்களும்.

அந்த ஸேகம் மூன்று வகைப்படும்: அவற்றுள் ஸ்நேஹநம் என்கிற ஸேகம் வாத ஸம்பந்த வியாதியிலும், ரோபணம் என்பது இரத்தஸம்பந்தமான அல்லது பித்தஸம்பந்திதமான வியாதிகளிலும், லேகநம் என்பது கபவியாதியிலும் பிரயோகிக்கக்கூடியனவாம்[1]. இம்மூன்றையும் பிரயோகிக்கும் கால அளவு பின்வருமாறு: சற்றேறக்குறைய அறுநூறு மாத்திராகாலம் ஸ்நேஹந ஸேகத்தையும், நானூறு மாத்திராகாலம் ரோபணஸேகத்தையும், முன்னூறு மாத்திராகாலம் லேகநஸேகத்தையும் பிரயோகிப்பது முறையாம். ஸேகமென்னும் இச்சிகித்ஸை செய்வதற்கு ஏற்றது பகல் வேளையே; ஆபத்தான அல்லது அதிசீக்கிரத்தில் சிகித்ஸை செய்யவேண்டியதான வியாதியில் இரவிலும் ஸேகம் செய்யக்கூடும். 3—4½.

பல வித ஸேசனௌஷதங்கள்.

(1) வெள்ளாட்டுப்பாலே ஆமணக்கின் வேர்-இலே-பட்டை இவற்றைச் சேர்த்துக் காய்ச்சி நேத்திரத்தில் வாதாபிஷ்யந்தம்[2] என்னும் நோயைப் போக்குவதற்கு இளஞ்சூடாக ஸேகம் செய்வது நலம். (2) இந்துப்பைச் சேர்த்துக் காய்ச்சிய பாலேயாவது, மஞ்சள் மரமஞ்சள் இந்துப்பு இவற்றைச் சேர்த்து பக்குவம் செய்த பாலேயாவது அவ்விதமே வாதாபிஷ்யந்தம், வாதவிபர்யயம் என்னும் நேத்திரரோகங்களில் பரிஷேகம் செய்வது ஹிதமாயிருக்கும்; இந்த ஸேகமே சுஷ்காக்ஷிபாகம் என்கிற நேத்திரவியாதியிலும் எப்பொழுதும் உபயோகமுள்ளதாம். (3) வெள்ளிலோத்தியின் பட்டை, அதிமதுரம் இவ்விரண்டையும் ஸமபாகம் சேர்த்து நெய்யிற் பொரித்து, நுண்மையாகப் பொடிசெய்து, அப்பொடியை வெள்ளாட்டுப்பாலில் சேர்த்துக் காய்ச்சி[3] அதைக் கண்களின்மேல் தாரைபோல் ஊற்றிவந்தால் பித்தத்தினுலும் இரத்தத்தினுலும் உண்டாகும் அபிஷ்யந்தம் நிவாரணமாகும். (4) த்ரிபலே, வெள்ளிலோத்தி, அதிமதுரம், சர்க்கரை, சிறு கோரைக்கிழங்கு இவற்றைக் கல்கமாகச் செய்து குளிர்ந்த ஜலத்தில் கலக்கி ஸேகம் செய்தாலும் இரத்தஸம்பந்தமான அபிஷ்யந்தம் தீரும். (5) செவ்வரக்கு, அதிமதுரம், மஞ்ஜிஷ்டி, வெள்ளிலோத்தி, கருஞ்சந்தனம்,[4] வெண்தாமரை இவற்றின் கல்கம் கலந்த குளிர்ந்த ஜலத்தை ஸேகம் செய்தாலும் இரக்தாபிஷ்யந்தம் சாந்தமாகும். (6) வெள்ளிலோத்திப் பட்டையை நெய்யிற் பொரித்து சூர்ணம் செய்து வஸ்திரகாளிதம் பண்ணி, உஷ்ண ஜலத்தில் கரைத்து ஸேகம் செய்ய நேத்திரத்திலுண்டான சூலம் அல்லது வலி நிவ்ருத்தியாகும். 5—11½.

---

1. ஸ்நேஹந ஸேகம்—நெய் பால் முதலிய பதார்த்தங்களால் செய்யப்படும் ஸேகம்; ரோபண ஸேகம்—அழற்சி அல்லது விரணம் முதலியவற்றை ஆற்றுவது; லேகந ஸேகம்— தோஷங்களைக் கரைத்து வெளிப்படுத்தும் ஸேகம்.

2. அபிஷ்யந்தம்—இதைப்பற்றி 56-வது பக்கத்தில் மூலத்திலும் டிப்பணியிலும் விவரம் காண்க. [இவ்வத்தியாயத்தில் மேலே வரும் நேத்திரரோகங்களின் பெயர்களைப்பற்றிய விவரம் முதலானவற்றையும் 53 முதல் 56-வது பக்கம் வரையிலும் மூலத்திலும் டிப்பணியிலும் பார்த்துக்கொள்க.]

3. ஸம்ஸ்கிருதத்திலுள்ள சார்ங்கதரஸம்ஹிதையில் (நிர்ணயஸாகர) சாகக்ஷீரே ச்ருதம் என்பதற்குப் பதிலாக் சாகக்ஷீரே க்ருநம் என்று பிழைபட அச்சிடப்பட்டிருக்கிறது; ச்ருதம் என்பதற்கு ஏற்றவாறு பாலில் காய்ச்சி என்று மொழிபெயர்த்துப் பொருள் இங்கு வரையப்பட்டதென்று அறிக.

4. காலாநுஸார்யகம் என்பதற்குப் பதிலாக காலாநுஸாரப: என்று ஸம்ஸ்கிருதத்தில் (நிர்ணயஸாகர) அச்சிடப்பட்டிருக்கிறது; காலாநுஸார்யகம் என்பது கருஞ்சந்தனம் எனப்படும்; இதைக் கல்மரம் என்றும் கூறுவர்.

## ஆச்சியோதநம்.

ஆச்சியோதநம் செய்யுமுறை.

கண்களைத் திறந்து திருஷ்டியின் மத்தியில் திரவமான ஔஷதத்தை இரண்டு அங்குலம் உயரத்திலிருந்து துளித்துளியாக விடுவதற்கான முறையே 'ஆச்சியோதநம்' எனப்படும்; இச்சிகித்ஸையை இராக்காலத்தில் செய்யக்கூடாது. 12½.

மூன்றுவித ஆச்சியோதநம்.

ஆச்சியோதநம் என்னும் இம்முறையும் லேககம், ஸ்நேஹநம், ரோபணம்[1] என்று மூவகைப்படும். ஆச்சியோதநத்திற்கான ஔஷதத்தை லேகநசிகித்ஸையில் எட்டுத் துளிகளாகவும், ஸ்நேஹநசிகித்ஸையில் பத்துத் துளிகளாகவும், ரோபணத்தில் பன்னிரண்டுத் துளிகளாகவும் பிரயோகிக்க வேண்டும். அவ்வௌஷதத்தை சீதகாலங்களில் சிறிது உஷ்ணமாகவும், கோடைகாலங்களில் குளிர்ச்சி பொருந்தியதாகவும் உபயோகிக்கவேண்டும்; இம்முறை எல்லா விடத்திலும் பெரும்பாலும் பொதுவான தென்றே கருதப்படும். 13, 14.

வாதாதி தோஷங்களுக்கேற்றவாறு ஆச்சியோதந ஔஷதங்கள்.

வாத ஸம்பந்தமான நேத்திர ரோகத்தில் கசப்பும் ஸ்நிக்த்தமென்னும் எண்ணெய்ப் பசையுள்ளதுமான ஔஷதத்தை ஸேசநத்திற்கு உபயோகிப்பது நலம்; பித்தஸம்பந்தமான வியாதிகளில் மதுரமும் குளிர்ச்சியும் பொருந்திய ஔஷதங்களையும், கபரோகங்களில் கசப்பும் உஷ்ணவீர்யமும் வறட்சியுமுள்ள ஔஷதங்களையும் உபயோகிக்கவேண்டும். எல்லா ஆச்சியோதந ஔஷதங்களையுமே நூறு மாத்திராகாலம் நேத்திரத்தில் வைத்துக்கொண்டிருக்கவேண்டும்.[2] 15—16½.

பலவித ஆச்சியோத நௌஷதங்கள்.

(1) பில்வாதி பஞ்சமூலங்களையும், கண்டங்கத்திரி ஆமணக்கு இவற்றின் வேரையும், முருங்கப்பட்டையையும் க்வாதமாகக் காய்ச்சி வடிக்கட்டி, இளஞ்சூடாயிருக்கையிலே ஆச்சியோதநம் செய்ய வாததோஷ ஸம்பந்தமான அபிஷ்யந்தம் தீரும். (2) வேப்பிலைகளைச் சிறிது ஜலம் விட்டு அரைத்து, வெள்ளிலோத்தியின் பட்டையின்மேல் அக்கல்கத்தைப் பூசி, நெருப்பிலிட்டு அதை நன்றாக வதக்கி, அப்பட்டையையும் கல்கம்போல் நசுக்கி இரஸம் பிழியவும்; இச்சாற்றை நேத்திரத்தினுள் ஊற்ற வாததோஷத்தினாலும் இரக்தபித்தத்தினாலும் உண்டான அபிஷ்யந்தம் நிவாரணமாகும். (3) த்ரிபலையை க்வாதம் செய்து ஆச்சியோதநம் செய்தாலும் எல்லா அபிஷ்யந்தங்களும் போய்விடும். (4) முலைப்பாலை நேத்திரங்களில் விட்டுவந்தால் இரக்த பித்த ஸம்பந்தமான வியாதிகளையும், வாதஸம்பந்தமான வியாதிகளையும் போக்கலாம். (5) பாலில் சேர்த்துக் காய்ச்சிய 'க்ஷீரஸர்ப்பிஸ்' என்னும் க்ருதத்தை நேத்திரத்தில் ஆச்சியோதநம் செய்து அதை சிறிது நேரம் துடைக்காமல் வைத்துக்கொண்டிருந்தாலும் வாத-ரக்த ஸம்பந்தமான வியாதி நிவ்ருத்தியாகும். 17—20½.

---

1. ஆச்சியோதநத்தில் லேககம் ஸ்நேஹநம், ரோபணம் என்கிற முறைகள் ஸேக விதியில் (238-ம் பக்கத்தில்) கூறப்பட்ட விதமானவையேயாம்.

2. நிமேஷோந்மேஷணம் பும்ஸாம் அங்குல்யோச் சோடிகாதவா குர்வக்ஷரோச்சாரணம் வா வாங்மாத்ரேயம் ஸ்ம்ருதா புதை: (இமைகொட்டுதல், விரல்களால் சுடிக்கைப்போடுதல், நெடிலெழுத்தை உச்சரித்தல் இவற்றிற்கு எவ்வளவு காலமோ அது ஒரு மாத்திரை அல்லது வாங்மாத்திரை எனப்படும்.)

## பிண்டிகா,

*பிண்டிகையின் முறை.*

நேத்திர ரோகங்களில் உபயோகிக்கக்கூடிய ஔஷதச்சரக்குகளைக் கல்கம்போல் செய்து பட்டுமுதலிய வஸ்திரங்களால் அக்கல்கத்தை நேத்திரங்களின் மேல் வைத்துக் கட்டும் முறையே பிண்டி அல்லது கபலிகை என்று வழங்கப்படும்; இதை நேத்திரத்திலுண்டாகும் அபிஷ்யந்தம் என்கிற வியாதியிலும், விரணங்களிலும் கட்டுவதற்கு உபயோகிக்கலாம். 21½.

*அபிஷ்யந்தத்தில் பிண்டிகை உபயோகிக்கும் கிரமம்.*

கபம் கோளாறடைந்து அதனால் அபிஷ்யந்தமும் அதிமந்தமும் உண்டானால், முதலில் அப்பிணியாளியின் சிரஸ்ஸுக்கு ஸ்நேஹ சிகித்ஸையும், ஸ்வேத சிகித்ஸையும் செய்து முடித்து,[1] தீக்ஷ்ணவீர்யமுள்ள ஔஷதங்களைக் கொண்டு சிரோவிரேகம்[2] செய்விக்கவேண்டும். பிறகு எல்லாவிதமான அதிமந்தங்களிலும் நெற்றியிலுள்ள ஸிரை யென்னும் காரிரத்தக்குழாயைக் கீறி இரக்தமோக்ஷணம் செய்வது முறை; அதனால் அதிமந்தம் சிறிதும் நீங்காவிட்டால், புருவங்களுக்குமேல் தாஹசிகித்ஸை செய்யவேண்டும். அவ்வாறே கற்றறிந்தவைத்தியர் எவ்வித அபிஷ்யந்தரோகத்திலும் கண்களின்மேல் பிண்டிகையைக் கட்டுவது முறையாம். 22—24.

*பலவித பிண்டிகைகள்.*

வாதஸம்பந்தமான அபிஷ்யந்தத்தைப் போக்குவதற்காக ஸ்நிக்த்தம் அல்லது எண்ணெய்ப்பசையுள்ளதும் உஷ்ணமுமான பிண்டிகை உபயோகமானதாம். (1) ஆமணக்கின் வேரையும் இலையையும் பட்டையையும் பிண்டிகையாகச் செய்து வாதாபிஷ்யந்தத்தில் பிரயோகிக்கலாம். (2) நெல்லிக்கனியின் பிண்டிகை பித்தாபிஷ்யந்தத்தைப் போக்கி ஸுகத்தை யுண்டு பண்ணும்; வெகு நாட்பட்ட வேப்பமரத்தின் காய்களையாவது பித்தாபிஷ்யந்தநோயைப் போக்க பிண்டிகையாக உபயோகிக்கலாம். (3) முருங்கயிலைகளால் செய்த பிண்டிகையானது கபஸம்பந்தமான அபிஷ்யந்தத்தைப் போக்கும். (4) வேப்பிலைகளால் செய்த பிண்டிகை கப-பித்தங்களாலுண்டாகும் அபிஷ்யந்தங்களை அகற்றும்; த்ரிபலையின் பிண்டிகையும் கபபித்தங்களாலுண்டாகும் அபிஷ்யந்தங்களைத் தீர்க்கும். (5) வெள்ளிலோத்தியின் பட்டையைக் காடியில் அரைத்து, நெய்யிற் கிளறி நேத்திரங்களில் கட்ட அது இரத்த ஸம்பந்தமான அபிஷ்யந்தத்தைப் போக்கும். (6) சுக்கையும், வேப்பிலையையும் சிறிது இந்துப்பையும் சேர்த்து அவற்றைக் கல்கமாய் அரைத்து வதக்கி இளஞ் சூடாக நேத்திரங்களிற் கட்டினால் அவற்றின் வீக்கம், அரிப்பு, வலி இவை நீங்கும். 25—29½.

## பிடாலகம்.

*பிடாலகம் செய்யு முறை.*

கண்களைச் சுற்றிலும் வெளியில் இமைகளிற் படாமல் பூசப்படும் லேபம் 'பிடாலகம்' எனப்படுகின்றது; அந்த லேபத்தை முகலேபநவிதிப்படி அவ்வளவு கனமாக உபயோகிக்கவேண்டும்.[3] பிடலாகப் பிரயோகத்திற்கேற்ற முறைகள் சில அடியிற் கூறப்படுகின்றன. 30½.

---

1. சிரஸ்ஸுக்கு ஸ்நேஹசிகித்ஸை செய்யு முறையைப்பற்றி இதே கண்டத்தில் 11-வது அத்தியாயத்தில் 'சிரோவஸ்தி' விதியைப் பார்க்க.
2. சிரோவிரேசம்—நஸ்யவிதி அத்தியாயத்தையும் தூமபாநவிதி அத்தியாயத்தையும் கவனிக்க.
3. முகலேபந முறையைப்பற்றி 216-வது பக்கம் பார்க்க.